Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 80 • 19.02.2017






இந்த வாரம் வவுனியா

# எப்படியிருக்கிறார் மாவை?



25 இலட்சம் பணம்

5000 மக்கள்

## எழுக தமிழ்



"லீடர் நீங்கள் கிளம்புங்கள்"






Kss Dac

OPS-நா பொட்டு வெச்சுகிட்டு, மிக்சர் சாப்பிட்டு.... , சசிகலா "பன்னீரு"ன்னு கூப்பிட்டவுடனே ஓடி போயி குனிஞ்சு சொல்லுங்க சின்னம்மான்னு சொல்லுவேன்னு நினைச்சீங்களாடா....

பன்னீரு டா ....






Kayan Sarath

முகநூல் திருமணங்கள்...





Reman Reman






யாழ். பல்கலைக்கழக மாணவிகளுக்கான
தங்குமிடம் வாடகைக்கு உண்டு.
மாணவிகள் தங்குவதற்கான அனைத்து
வசதிகளையும் கொண்ட சௌகரியமான
தங்குமிட வசதிகள் பல்கலைக்கழகத்திற்கு
அருகாமையிலேயே!
இராமநாதன வீதியில்
யாழ். பல்கலைக்கழகத்தின்
முன்பாக உள்ளது.
மாணவிகளே! உங்கள் பதிவுகளுக்கு
இன்றே அழையுங்கள்,

077 833 2862

BRINDHABAN
REST



Luxury Rooms
Comfortable A/C, Non A/C Rooms
Birthday, Wedding
Take away
A Party Catering Service

Sivaguru Lane,
Kerniyadi,
Kokuvil West,
Jaffna

Mobile: 077 833 2862
T.P: 021 221 6485
Hot Line: 077 284 4040
Fax: 021 221 6485

E-mail:brindhabanrest@gmail.com

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் புது வருட வாழ்த்துக்கள்

SKY ROSE CHIDAMBARAM COVERING
ஸ்கை ரோஸ் சிதம்பரம் கவரிங்

அனைத்து வொரணிடிங் கவரிங் நகைகளை
இங்கே பெற்றுக்கொள்ளலாம்

No: 1 Hospital Road, Jaffna. Call: 0771536914




# 25 இலட்சம் பணம்... 5,000 பேர்... நடுவில கொஞ்சம் பக்கத்தை காணோம்!

## எழுக தமிழில் என்ன நடந்தது?

இன்போர்மர் இசக்கி

கேப்பாபிலவு நில மீட்பு உண்ணாவிரதம்... காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் கொந்தளிப்பு என வடக்கு களம் எரிபற்று நிலையில் இருக்கும் சமயத்தில், ஆர்ப்பாட்டமின்றி எல்லோரையும் திரும்பி பார்க்க வைத்துள்ளது கிழக்கு.

ஆம். கிழக்கின் எழுக தமிழ் ஏற்படுத்திய அதிர்வுகள் இன்னும் அரசியலரங்கில் அடங்கவில்லை. கிழக்கு இப்படியும் எழுச்சி கொள்ளுமா என்று அதிர்ந்து போயிருக்கிறார்கள் ஆட்சியாளர்கள்.

கிழக்கில் தமிழ்தேசியம் பலவீனப்பட்டு போய்க்கொண்டிருக்கிறது, தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை பலவீனப்படுத்த புறப்பட்ட ஆளுந்தரப்பின் சேவகர்கள் கிழக்கில் நிலைகொண்டு விட்டனர்... மற்றைய இனங்கள் பல்கிப் பெருகியதால், சத்தமில்லாமல் இருந்துவிட்டு போகத்தான் தமிழர்கள் விரும்புகிறார்கள் என விதவிதமாக பேசியவர்கள் எல்லோரும் மூச்சும் விடாமல் உட்கார்ந்திருக்கிறார்கள். தமிழன்டா என கெத்து காட்டியுள்ளனர் கிழக்கு தமிழர்கள்.

### பள்ளிக்கூடத்தால் தடை

கிழக்கு எழுக தமிழ் திட்டமிட்டபோதே நிறைய அவநம்பிக்கைகள் இருந்தன. வடக்கில் திரண்டதை போன்ற பெரும்



மக்கள் அலையை திரட்ட முடியாது, குறைந்த பட்சம் ஆயிரம் பேரையாவது திரட்டலாமா என்று ஏற்பாட்டாளர்கள் தலையை பிய்த்துக் கொண்டிருந்தனர். கிழக்கு எழுக தமிழில் மக்கள் திரளவில்லையென்றால் கரிபூசப்படுவோம் என்பதை ஏற்பாட்டாளர்கள் நன்கு அறிந்துதான் வைத்திருந்தனர்.

வடக்கு சூழலை போல கிழக்கு கிடையாது. கிழக்கில் மொத்த தமிழர்கள் 33 வீதம்தான். ஒரு காலத்தில் கிழக்கு தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த இடம். இன்று, முஸ்லீம், சிங்களவர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டுக் கொண்டு செல்கிறது.

இவை எல்லாவற்றையும் விட, தமிழர்களின் வடக்கு கிழக்கு இணைந்த தாயக கோட்பாட்டை உடைக்க மகிந்த உருவாக்கிய சதி திட்டத்திற்கு சிலர் துணை போயிருந்தனர். அவர்கள் கிழக்கு மக்களின் மனதை மாற்றியிருப்பார்கள், வடக்கின் தொடர்ச்சியொன்றை கிழக்கில் நடத்த மக்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்றெல்லாம் பிரச்சாரங்கள் கொடி கட்டி பறந்தன. போதாக்குறைக்கு, தமிழரசுக் கட்சிக்கு எழுக தமிழ் உவப்பில்லாமல் இருந்தது. அந்த கட்சியின் முக்கியஸ்தர் துரைராசசிங்கம், அம்மா சின்னம்மா உதாரணங்களையெல்லாம் சொல்லி கூட்டங்களில் பேசியிருந்தார்.

இப்படி எல்லாமே சவாலாக அமைந்தது எழுக தமிழ் ஏற்பாட்டு குழுவிற்கு. உண்மையை சொன்னால், ஏற்பாட்டு குழுவில் இருந்த எவருக்குமே எழுக தமிழ் பெரு வெற்றியடையுமென்ற நம்பிக்கையில்லை. எப்படியாவது ஓரளவு மக்களை திரட்டினாலே போதுமென்ற பதற்றம்தான் இருந்தது. நாம் பேசியதிலிருந்து, அண்ணளவாக ஆயிரம் பேரைத்தான் அனைவரும் எதிர்பார்க்கிறார்கள் என்பது புரிந்தது.

இதற்குள் எழுகதமிழிற்கு முதல்சோதனை தமிழரசுக்கட்சியிடமிருந்து வந்தது. ஜனவரி 21 இல் நடத்துவதென ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அந்த நாளை (சனி) பாடசாலை விடுமுறை நாளொன்றின் பதிலீட்டு நாளாக கிழக்கு கல்வியமைச்சு அறிவித்தது. கிழக்கு கல்வியமைச்சராக இருப்பவர் தமிழரசுக்கட்சியின் தண்டாயுதபாணி. எழுக தமிழை குறிவைத்துதான் இந்த அறிவிப்பென ஏற்பாட்டுகுழு சார்பில் பேசியவர்கள் முணுமுணுத்தார்கள்.

என்றாலும், ஒத்திவைக்கப்பட்டதற்கு வேறொரு பிரதான காரணமும் உள்ளது. அதை பகிரங்கமாக சொல்லவில்லை. அது நிதி விவகாரம். எழுக தமிழிற்கான நிதி புலம்பெயர்ந்தவர்களிடமிருந்தே வந்தது. வாக்களிக்கப்பட்ட பணம் குறிப்பிட்ட திகதிக்குள் வரவில்லை. இதனாலேயே இரண்டுமுறை ஒத்திவைக்கப்பட்டது.

### போஸ் கொடுத்த கஜேந்திரன்

வடக்கு எழுக தமிழ் பிரச்சாரத்தில் தமிழ் மக்கள் பேரவை, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகியன முக்கிய பங்கு வகித்தன. வெளிநாட்டு செயற்பாட்டாளர்களிடமிருந்தும் தாராளமாக பணம் கிடைக்க, சந்து பொந்தெல்லாம் புகுந்து மக்களை சந்தித்தனர். தாராளமாக தொண்டர்களையும் களமிறக்கினார்கள்.

கிழக்கு நிகழ்விற்கும் தாராளமாக நிதி கிடைத்தது. ஆனால் யார் பிரச்சாரத்தை செய்வதென்ற சிக்கலிருந்தது. தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் ஒன்றரை மாதத்திற்கு முன்னிருந்தே கிழக்கில் சிறிய ளவில் பரப்புரையை ஆரம்பித்திருந்தனர். அதற்காக அங்கு வீடொன்றை வாடகைக்கு எடுத்திருந்தனர். நான்கைந்து கட்சி செயற்பாட்டாளர்களுடன் கழுத்தில் சிவப்பு மஞ்சள் கொடியையும் போட்டுக்கொண்டு, கஜேந்திரன் அடிக்கடி பேஸ்புக்கில் படம் போட்டபடியிருந்தார்.

தமிழ்தேசிய மக்கள் முன்னணி கிழக்கில் பரிச்சயமற்றது. வடக்கிலேயே கட்டுக்காசை இழக்கும் நிலையிலுள்ள கட்சி, கிழக்கில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தாதென்பது ஏற்பாட்டாளர்களிற்கும் தெரியும். அதனால் கிழக்கில் செல்வாக்குள்ள தலைவர்களின் முழுமையான பங்களிப்பை எதிர்பார்த்தனர்.

அப்படி அடையாளம் காணப்பட்டவர்கள் இருவர். ஒருவர் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் துரைரெட்ணம். மற்றையவர் புளொட் அமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் (அமல்).

துரைரெட்ணம் தீவிர பிரசாரத்திற்கு தயாராகத்தான் இருந்தார். அவரது கட்சி எழுக தமிழ் பணியில் மும்முரம் காட்டியதால் எந்த சிக்கலுமில்லை. அதுதவிர, துரைரெட்ணத்திற்கு தமிழரசு கட்சியுடன் தீர்ப்பதற்கு ஒரு கணக்கும் இருந்தது. அது கடந்த பாராளுமன்ற தேர்தல் விவகாரம். ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஷ் யாழ்ப்பாணத்திலும், துரைரெட்ணம் மட்டக்களப்பிலும் மண்கவ்வியதற்கு தமிழரசுக்கட்சிதான் காரணமென்ற விவகாரம்.

### பழைய கணக்கு முடித்த துரைரெட்ணம்

எழுக தமிழில் தமிழரசுக்கட்சி உடன்பாடில்லையென்பதே ஈ.பி.ஆர்.எல்.எவ் உற்சாகமாக வேலை செய்ய வழிவகுத்தது. ஆனால் புளொட் வேறு மாதிரி. சுரேஷ் பிரேமச்சந்திரனை போல கூட்டமைப்பின் தலைமையுடன் முரண்டுபிடிப்பவரல்ல சித்தார்த்தன். தமிழரசுக்கட்சி தலைமையுடன் நெருக்கமாக செயற்படுபவர். சித்தார்த்தனின் தந்தை தர்மலிங்கம் தமிழரசுக்கட்சி முக்கியஸ்தர்களில் ஒருவர். அந்த அபிமானம் கட்சியினரிடம் உண்டு. எதிலும் நிதானம் தப்பாத அவரது போக்கால் எதிரிகள் அவருக்கு குறைவு.

புளொட் அமைப்பின் மட்டக்களப்பு எம்.பி வியாழேந்திரன் எழுக தமிழில் ஆர்வம் காட்ட ஆரம்பத்தில் தயங்கினார். தமிழரசுக்கட்சிக்கு எதிரானதென்ற அபிப்பிராயம் மக்களிடம் ஏற்படலாமென்ற அச்சம் அவரிடமிருந்தது. எனினும், "தமிழரசுக்கட்சிக்கு இணக்கமான உங்கள் தலைவரே இருக்கிறார். பயப்பிடாமல் வாருங்கள்" என ஏற்பாட்டாளர்கள் அவரை களத்திற்கு அழைத்து வந்தனர்.

### ஸ்கோர் செய்த வியாழேந்திரன்

இதுதான் கிழக்கு எழுக தமிழின் முன்கதை சுருக்கம். வியாழேந்திரன் எம்.பி மட்டக்களப்பில் தனியார் கல்வி நிலையமொன்றை நடத்தி வருகிறார். அங்கு சுமார் ஆயிரத்து ஐநூறு பேரளவில் தற்போது கல்வி கற்பதாக கூறப்படுகிறது. கடந்த பாராளுமன்ற தேர்தலில் வியாழேந்திரன் அதிக விருப்பு வாக்கு பெற்றதன் சூட்சுமம் இதுதான். அவரிடம் பயின்ற மாணவர்கள் நிறையப்பேர் உள்ளனர்.

தனது ஆதரவாளர்களுடன் நேரடியாக களத்தில் இறங்கி தீவிர பிரசாரம் செய்தார்

தொடர்ச்சி 9-ம் பக்கம்...



# எப்படியிருக்கிறார் மாவை?

கிளிநொச்சியில் மயக்கமடைந்த மாவை

✒ இன்போர்மர் இசக்கி


வவுனியாவில் காணாமல் போனவர்கள் போராடினார்கள். உள்ளூர் அரசியல் பிரமுகர்கள் முதல் கட்சித்தலைவர்கள் வரை எல்லோரும் ஆஜரானார்கள். கரகரத்த குரல்தான் என்றாலும் கர்ஜிக்கும் குரலுடன் போராட்டங்களிற்கு முதல் ஆளாக வரும் மாவை சேனாதிராசா வரவில்லை.

கேப்பாப்பிலவில் சொந்த நிலத்தை கோரி அகிம்சைப் போர் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் மக்கள். எல்லா கட்சிகளும் “வந்தேன்” வைத்துவிட்டு வருகிறார்கள். நீண்டகாலம் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் தனது வீட்டை பறிகொடுத்திருந்த மாவை அங்குமில்லை.

வடக்கில் அடிக்கடி ஏராளம் நிகழ்வுகள் நடக்கின்றன. முன்னரை போல ஓடியாடி திரிய முடியாத வயதுதான். என்றாலும், வடக்கில் எல்லா இடமும் ஓய்வில்லாமல் திரிந்த மாவையை ஒரு நிகழ்விலும் காண முடியவில்லை.

கடந்த நாற்பது வருடங்களாக மக்கள் போராட்டங்களில் முதல் ஆளாக நின்ற மாவை சேனாதிராசா இன்று எந்தப் போராட்டங்களிலும் இல்லை.

வடக்கு, கிழக்கில் மக்கள் கொந்தளிக்கும் போது பாராளுமன்றத்தில் அதை எதிரொலித்த முதல் குரலாக இருந்தது



மட்டக்களப்பில் மயங்கிய மாவைக்கு அவசர முதலுதவி செய்யப்பட்டபோது

மாவையின் கர்ஜிப்பு. ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவாக ஒலித்த தமிழர்களின் உணர்வுக்குரல் இப்போது பாராளு மன்றத்தில் ஒலிப்பதில்லை.

**என்ன நடந்தது மாவைக்கு?**

தமிழர் தாயகத்தில் ஒரு கைது நடந்தாலும், அதற்கு முதலாவது எதிர்வினையாற்றுபவராக இருந்தார் மாவை. மற்றையவர்கள் சம்பவத்தை அறிவதற்கு முன்னர் மாவையின் அறிக்கை வந்துவிடும். மற்றையவர்கள் அறிக்கை வருவதற்குள் மாவையர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்றுவிடுவார்.

**இதுதான் மாவை.**

நாற்பது வருடங்களிற்கும் அதிகமாக தமிழர்களின் உரிமைப்போர் பல்வேறு வடிவங்களில்பயணித்தது.அந்தவடிவங்கள் அனைத்திலும் மாவை இருந்தார். பங்காளியாகவும், சக பயணியாகவும் இருந்து போராட்டத்தையே வாழ்க்கையாக கொண்ட போர்வாள் மாவை.

தற்போதைய தமிழரசுக்கட்சி மக்கள் பிரதிநிதிகளில் மாவை வகித்த பாத்திரத்திற்கு ஒப்பான பாத்திரத்தை வகித்தவர்கள் வேறு யாரும் கிடையாது. அதனால்தான் மாவைக்குஎதிரிகள்கிடையாது.மாவையின் பேச்சிற்கு மறு பேச்சு பேசுபவர்கள் குறைவு. அதனால் தமிழரசுக்கட்சியின் நெருக்கடியாக களங்களை சமாளிக்கும் முக்கியஸ்தராக மாவையே விளங்குகிறார்.

தமிழர்களின் தேர்தல் அரசியல் கட்சிகளில் விடுதலை இயக்கங்களிற்கு அதிருப்தி எழுந்த காலம். சில தலைவர்கள் “மண்டை”யிலும் போடப்பட்டனர். தமிழர் விடுதலை கூட்டணி உள்ளிட்ட எல்லா கட்சிகளின் தலைவர்களும் கொழும்பிற்கும், இந்தியாவிற்கும் பறந்தோடினார்கள். இந்தக்காலத்தில் மாவையும் கொழும்பு, இந்தியா என்றுதான் வசித்தார். ஆனால், விடுதலை இயக்கங்கள் மாவையில் மட்டும் ஒரு மென்பார்வை வைத்திருந்தார்கள். குறிப்பாக விடுதலைப்புலிகளின் மூத்த தலைவர்கள் எல்லோரும் மாவையுடன் நெருங்கிப் பழகியவர்களாக இருந்தனர்.

1970களில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் இளைஞர் பேரவையில் செயற்பாட்டாளராக அறியப்பட்ட மாவையின் அரசியல் பயணம் கரடு முரடான பாதையாலேயே பயணித்தது. நான்காம் மாடியில் சித்திரவதை, இராணுவ அச்சுறுத்தல் என அகிம்சைவழியிலும் வாழ்வா சாவா போராட்டத்தை நடத்தியவர். எல்லா நெருக்கடிகளையும் கடந்து, தமிழர்களின் அரசியல் போராட்டத்தில் முன்னணியில் நடந்து சென்ற மாவைக்கு இன்று என்ன நடந்தது?

**ஏனிந்த பெரும் அமைதி?**

மாவை சேனாதிராசாவிற்கு உடல்நல குறைவு என்றொரு செய்தி வெளியானது. அதன் பின் அவர் பற்றிய எந்த செய்தியும் வெளியாகவில்லை. கடந்த ஒன்பதாம் திகதி பாராளுமன்ற அமர்வின் பின்னர் வெளிநாட்டு பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்று நடந்தது. அதில் கலந்து கொண்டிருந்த சமயத்தில் திடீரென மயங்கி சரிந்தார். உடனடியாக வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக செய்திகள் வெளியானது. அதன் பின் அவர் பற்றிய செய்திகளும் இல்லை. பகிரங்கமாக அவர் வந்ததுமில்லை.

மாவைக்கு என்னாயிற்று என்று விசாரித்தால், அவர் நன்றாக தேறிவிட்டார் என்ற தகவலிற்கு மேலதிகமாக ஒரு வார்த்தையும் வெளியிடாமல் கவனமாக இருக்கிறார்கள்.

கடந்த 2013 இல் கிளிநொச்சியில் நடந்த மேதின நிகழ்வில் உரையாற்றிக் கொண்டிருந்தபோது மாவை மயக்கம் ஆகி நிலைதடுமாறினார். அதிக வெய்யிலில் நின்றதால் ஏற்பட்ட களைப்பால் மயக்கமானதாக கூறப்பட்டது.

இதற்கு பின்னர் சரியாக ஒரு வருடம் கழித்து 2014 மே மாதம் மட்டக்களப்பில் நடந்த நிகழ்ச்சியொன்றில் மீண்டும் நிலைகுலைந்தார்.

முற்றுப்புள்ளி வைக்காமல் பேசுவார். ஒரு வரியில் செல்வதை ஒன்றேகால் மணிநேரமாகபேசுவார் என்றெல்லாம்சிலர் சமூக வலைத்தளங்களில் கலாய்த்தாலும் மாவை காலத்தின் குரல். அது நீண்டகாலம் ஒலிக்க வேண்டுமென்பதே கட்சிக்காரர்களின் எதிர்பார்ப்பு.

மாவையின் காலில் ஏற்பட்ட கிருமித் தொற்று ஒன்றே அண்மைய மயக்கத்திற்கு காரணம் என்கிறார்கள் வைத்தியர்கள். காயமொன்றை அவர் கவனிக்காமல் விட, கிருமித் தொற்று ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டு பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது மயக்கமடைந்தவரை உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவசர சிகிச்சை பிரிவில் நான்கு நாட்கள் சிகிச்சையளிக்கப்பட்டது. கிருமிகளை செயலிழக்க வைக்க உயர்சக்தி நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் அவருக்கு செலுத்தப்பட்டது. கிருமி தொற்று மூளைவரை பரவியிருக்கலாமென்ற அச்சம் ஏற்பட்டிருந்தாலும், நான்குநாள் சிகிச்சை மற்றும் பரிசோதனைகளின் முடிவில் ஆபத்தான நிலையில்லையென்பதை உறுதிசெய்த வைத்தியர்கள், சாதாரண பிரிவிற்கு மாற்றினார்கள். மூன்று நாட்கள் அங்கு சிகிச்சையளிக்கப்பட்டது. சாதாரண நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் வழங்கப்பட்டு, உடல்நிலை கண்காணிக்கப்பட்டது. காய்ச்சல் குறைந்து சாதாரணநிலையைஎட்டியதும்,அங்கிருந்து மூன்றாம் நாள் வீடு திரும்பினார்.

கொழும்பில் ஒரு வாரம் தங்கியிருந்த பின், கடந்த வாரம்தான் யாழ்ப்பாணம் வந்துள்ளார். காலில் ஏற்பட்ட தொற்றின் காரணமாக இயல்பாக நடக்க முடியாமல் சிரமப்படுகிறார். எனினும், விரைவில் முழுமையாக குணமடைந்து விடுவார் என்கிறார்கள் மாவைக்கு நெருக்கமானவர்கள்.

யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியிலுள்ள தமிழரசுக்கட்சி அலுவலகம்தான் மாவையின் யாழ்ப்பாண தங்குமிடம். மாவை யாழில் நிற்கும் சமயங்களில் தொண்டர்களும், மக்களும் அவரை சந்திக்க அடிக்கடி வந்து போவார்கள். இப்பொழுது யாரும் மாவையை சந்திக்க அனுமதிக்கப்படுவதில்லை. அவர் ஓய்வாக இருக்க வேண்டுமென்பதற்காக இந்த ஏற்பாடு என்றார் கட்சிப்பிரமுகர் ஒருவர்.

“கட்சியின் அன்றாட பணிகளை கவனிப்பதைசற்று குறைத்துள்ளார்.ஆனால் கட்சி முக்கியஸ்தர்களுடன் தொடர்ந்து பேசிக் கொண்டுதான் இருக்கிறார். விரைவில் பொது நிகழ்வுகளிலும் கலந்து கொள்வார்” என்றார் மாவைக்கு நெருக்கமான முன்னாள் பிரதேசசபை தவிசாளர் ஒருவர்.

கட்சி தொண்டர்களும் அதைத்தான் எதிர்பார்த்திருக்கிறார்கள்!



# அனந்தியின் கண்ணீர்

யாழ் ஊடக அமையத்தின் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தியிருந்தார் வடமாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன். அனந்தி பற்றிய செய்திகளை எப்படி பத்திரிகைகள் திரித்து வெளியிடுகின்றன என்று சொல்லிய சமயத்தில் அனந்தி கண்ணீர்விட்டு அழுதிருந்தார்.

அனந்தி சொல்லாத செய்திகளை, சொல்லாத அர்த்தத்தில் சில தமிழ் ஊடகங்கள் வெளியிட்டன என்பது அனந்தியின் குற்றச்சாட்டு. தமிழ் ஊடகப்பரப்பை நன்றாக அவதானித்து வருபவர்களிற்கு இந்த குற்றச்சாட்டில் முழு உண்மையுள்ளதென்பது தெரியும்.

தமிழ் ஊடகங்களை யாழ்ப்பாணம், கொழும்பை மையமாக கொண்டதென வகைப்படுத்தலாம். ஒப்பீட்டளவில் அரசியல் காழ்ப்புணர்ச்சிகள் யாழ் மைய ஊடகங்களிலேயே அதிகம். கட்சியின் பிரசாரகர்களாகவே பெரும்பாலான ஊடகங்கள் இயங்குகின்றன. “கொடுத்த காசிற்கு அளவாக கூவுவது“ என்றொரு வழக்கு உள்ளது. அது இந்த வகை ஊடகங்களிற்கு மிகப்பொருத்தம்.

பொதுவெளியில் இயங்குபவர்கள் யாரும் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள் கிடையாது. மக்கள் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் என்னை விமர்சிக்க வேண்டாம் என கோரவும் முடியாது. அனந்தியின் அரசியல் பார்வையில், அவர் முன்னெடுக்கும் அரசியலில் நிறைய விமர்சனங்களும், கேள்விகளும் உள்ளனதான். அவற்றை பேசுவது வேறு, கீழ்த்தரமான விமர்சனங்களை வைப்பது வேறு.

எழுக தமிழில், தமிழ் மக்கள் பேரவையில் பெண்களிற்கு உரிய பங்கு வழங்கப்படவில்லையென அனந்தி கூறியிருந்தார். இந்த விமர்சனத்தை அவர் பகிரங்கமாகவே வைத்திருந்தார். ஆனால், அந்த செய்தியை அரசியல் தேவைகளிற்காக பயன்படுத்தின ஊடகங்கள். தமிழ் மக்கள் பேரவையில் பெண்களிற்கு என்ன இடம் வழங்கப்படுகிறதோ அதுதான் தமிழ்தேசிய கூட்டமைப்பிலும் வழங்கப்படுகிறது. தமிழர்களின் கட்சிகள் அனைத்திலும் வழங்கப்படுகிறது. அதிகம் ஏன், நமது சமூகத்தில் பெண்களிற்கு வழங்கப்படும் இடம்தான் கட்சிகளிலும் வழங்கப்படுகிறது.

இது நாம் வெட்கப்பட வேண்டிய விவகாரம். எம்மை நாமே சுயவிமர்சனம் செய்ய வேண்டிய விவகாரம். ஆனால், இங்கு யாருக்குமே வெட்கமென்பதே இல்லையே!

நமது சமூகத்தில் பெண்களின் நிலை என்ன? குறிப்பாக பெண் தலைமைத்துவ குடும்பங்கள் என்ன செய்கின்றன? அவற்றின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற, நமக்காக போராடியவர்களின் குடும்பங்களின் ஒருவேளை சோற்றிற்கு ஒரு மனிதனாக நான் என்ன செய்தேன்? இப்படி பல கேள்விகள் உள்ளன. பெண் தலைமைத்துவ குடும்பங்களில் பெரும்பாலானவை மரணித்த போராளிகளுடையது. அந்த குடும்பங்கள் எப்படியிருக்கின்றன, என்ன சவால்களை சந்திக்கின்றன என்பதை நாம் சிந்தித்தோமா?

பெண் தலைமைத்துவ குடும்பங்களை விடுவோம். சாதாரணமாக பெண்கள் இந்த சமூகத்தில் எப்படியான நெருக்கடிகளை எதிர்கொள்கிறார்கள்? விடுதலைப்புலிகள் காலத்தில் பெண்கள் அனுபவித்த சுதந்திரம் இன்று உள்ளதா? ஒரு சமூகமாக நாம் இதற்காக வெட்கப்பட வேண்டாமா? பெண்களின் நிலை தொடர்பாக அனந்தி ஒருமுறை பேசியதை, அனந்தியை பார்த்து ஆண்கள் கண்ணடிக்கிறார்கள் என ஒரு ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது. இவை பற்றி பேசிய சமயத்திலேயே அனந்தி கண்ணீர் விட்டு அழுதிருந்தார்.

பெண்கள் தொடர்பான நமது சமூகத்தின் பெரும்போக்கான பார்வை குறைபாடுடையது. பெண்களை சக மனுசியாக பார்க்கும் பக்குவத்தை ஏற்படுத்த இன்னும் பல பத்தாண்டுகளாகும். சமூகத்தில் வகுக்கப்பட்டுள்ள கடமைகளிற்கு அப்பால் பெண்கள் செல்வதை ஆண்கள் விரும்புவதில்லை. வீடு, அலுவலகம் என்ற இரண்டு இடங்களிற்கு அப்பால் செல்லும் பெண்கள் சந்திக்கும் சவால்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

சில விதிவிலக்குகளை விடலாம். ஒரு சனசமூக நிலையத்தில், ஆலய பரிபாலனசபையில், ஒரு விளையாட்டு கழகத்தில், ஒரு அரசியல் கட்சியில் யாராவது ஒரு பெண் தலைவராகலாமா? மீறி பொதுப்பணியில் இறங்கும் பெண்ணின் பின்னால் புரணி பேசுவதுதான் பெரும்பாலானவர்களின் இயல்பு.

அனந்தி விடயத்திலும் அதுதான் நடக்கிறது. அனந்தியின் அரசியலை விமர்சனம் செய்யாமல், அவரை “பெண்ணாக“ அணுகுவது அயோக்கியத்தனம். அறவுணர்ச்சியற்றது. பொதுவெளியில் இயங்கும் பக்குவமற்றவர்களின் செயலது. சமூகத்தின் கடைக்கோடியில் வெளிப்படும் இந்த இயல்பு ஊடகங்களிலும் பிரதிபலிப்பது மிக ஆபத்தானது. சமூகத்தின் கண்ணாடிகளாக செயற்பட வேண்டிய ஊடகங்கள், காவாலிகளை போல செயற்பட்டால், இந்த சமூகத்தை பற்றிய மதிப்பீடு என்னவாக இருக்கும்?

இப்படி செய்தி வெளியிட்டதற்கு ஊடகங்களிற்கும் வருத்தமில்லை. படித்ததில் மக்களிற்கும் கோபமில்லை.

என்ன மாதிரியான சமூகத்தில் வாழ்கிறோம்?

**தீபம்**
197, அரசடிவீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர்பீடம்: 0768255562
விளம்பரம்: 0768255560, 0768255567
விநியோகம் 0768255563
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com
செய்திகளை அறிந்திட: deepamnews.lk


# சொன்னார்கள்




**பைசர் முஸ்தபா –**
**மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சர்**
எனது நண்பர் ஒருவர் தனது ஒரு பிள்ளையை றோயல் கல்லூரியிலும், மற்றைய பிள்ளையை சாதாரண பாடசாலையொன்றிலும் சேர்த்தார். றோயல் கல்லூரி மாணவன் ஏனைய சமூக மாணவர்களுடன் ஐக்கியமாகவும், நல்லெண்ணத்துடனும் கல்வி கற்றான். அடுத்த மாணவன் எந்த முன்னேற்றமுமின்றி, மற்றவர்களுடன் ஒற்றுமையாக இருக்க முடியாதவனாக மாறயுள்ளான்.



**லக்ஷ்மன் கிரியெல்ல –**
**உயர்கல்வி அமைச்சர்**
சைட்டம் பல்கலைகழகத்தில் கல்வி பயின்ற மாணவர்களை பதிவு செய்யுமாறு நீதிமன்றம் கட்டளையிட்டும், வைத்திய அதிகாரிகள் சங்கம் அதை மீறி செயற்படுவது பாரதூரமான விடயம். மகிந்தவின் காலத்தில் சைட்டம் ஆரம்பிக்கப்பட்டது. எமது ஆட்சிக்காலத்தில் மாணவர்கள் வெளியேறினார்கள். என்ன செய்யலாம்? மூடவா முடியும்? அவர்களை பதிவு செய்யவில்லை என்பதாலேயே நீதிமன்றத்திற்கு சென்றார்கள். சைட்டம் மாணவர்களை பதிவுசெய்யுமாறு மருத்துவசபைக்கு உயர்கல்வி அமைச்சும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. எந்த பரீட்சைக்கு முகம் கொடுக்கவும் தயாரென சைட்டம் மாணவர்கள் சொல்கிறார்கள்.



**ரணில் விக்கிரமசிங்க –**
**பிரதமர்**
இலங்கையில் இப்போது பாதுகாப்பான சூழல் நிலவுகிறது. இதை தமிழ்தேசிய கூட்டமைப்பும் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆகவே சர்வதேசநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் நாடு திரும்ப வேண்டும். மனித கடத்தல்காரர்களிற்கு அஞ்சி அவுஸ்திரேலியாவில் குடியேறி சட்டவிரோத முகாம்களில் தஞ்சமடைந்துள்ள இலங்கையர்களையும் மன்னித்து விட்டோம். ஆகவே முகாம்களில் உள்ள இலங்கையர்கள் அனைவரும் நாடு திரும்ப வேண்டும்.



**நாமல் ராஜபக்ச –**
**எம்.பி, கூட்டு எதிரணி**
நாட்டில் நிறைய பிரச்சனைகள் உள்ளது. அரிசி விலை 100 ரூபாவை கடந்துவிட்டது. 2005 ஆம் ஆண்டிலிருந்து காலைச்சாப்பாட்டிற்கு எவ்வளவு செலவு, பகல் சாப்பாட்டிற்கு எவ்வளவு செலவு, இரவுச் சாப்பாட்டிற்கு எவ்வளவு செலவு, வீட்டில் எத்தனை பேர் இருக்கிறார்கள், காஸ் அடுப்பு எத்தனை, பிரிட்ஜ் எத்தனை என்றுதான் கேட்கிறார்கள். எனது தந்தையை இலக்கு வைத்துதான் இவற்றை கேட்கிறார்கள். நான் சொல்லும் ஒரு விடயத்திலிருந்து தந்தையை குறிவைக்க முயல்கிறார்கள். நீதிமன்ற உத்தரவிற்கு மதிப்பளித்து அவர்கள் கேட்பவற்றிற்கு பதிலளிக்கிறோம்.



**நிதியமைச்சர்**
எனக்கு 24 வருட அரசியல் வரலாறு இருக்கிறது. நான் திடீரென செல்வந்தனானவன் இல்லை. ஆரம்பத்திலிருந்தே எனது உழைப்பால் செல்வந்தனானவன். எனது சொத்துடைமை விபரம் தேவையானவர்கள் பாராளுமன்றத்திற்கு போய், 25 ரூபா செலுத்தி சொத்து விபரத்தை அறிந்து கொள்ளலாம்.


# எண்ணிக்கை

**860** கிளிநொச்சியில் ஐரோப்பிய ஒன்றியம் அமைக்கும் வீடுகள்

**1800** கொழும்பிலுள்ள சட்டவிரோத கட்டிடங்கள்

**4500** கடந்த 4 வருடத்தில் பட்டம்பெற்று வேலையற்ற கிழக்கு பட்டதாரிகள்

**தீபம் வார இதழ் புதிய முகவரியில் இயங்க தொடங்கியுள்ளது**
989/1, பருத்தித்துறை வீதி
கல்வியங்காடு, நல்லூர்
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிட தொகுதி)



# "லீடர்... நீங்கள் கிளம்புங்கள்"

## முற்றி வெடிக்கும் முஸ்லீம் காங்கிரஸ் உள்வீட்டு சர்ச்சைகள்

முஸ்லீம் காங்கிரஸ் தலைமைத்துவம் மீது இன்று வைக்கப்படும் பிரதான குற்றச்சாட்டு கிழக்கு தலைமைத்துவம் இல்லையென்பது. இதை ஓரளவு சரிக்கட்டி வந்தது ஹசனலியின் இருப்பு.

நம்மாழ்வார்

சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸிற்குள் ஏற்பட்டுள்ள சச்சரவு இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. தவிசாளர் பஷீர் சேகுதாவூத், செயலாளர் நாயகம் ஹசனலி ஆகியோருக்கு கல்தா கொடுத்து விட்டார் ஹக்கீம். இருவரும் அதிருப்தியுடன் வெளியேறியுள்ளனர். அதிருப்தியுடன் சென்றவர்கள் அடங்கியிருப்பார்கள் என்று நம்ப முடியாது.

அண்மையில் நடந்த கட்டாய உயர்பீட கூட்டம், பேராளர் மாநாடு என்பன புதிய நிர்வாகிகளை தேர்வு செய்துவிட்டது. ஹசனலிக்கு பொதுச்செயலாளர் பதவி வழங்கப்படுமென தேர்தல் ஆணையாளருக்கு முன்பாக வழங்கப்பட்ட வாக்குறுதி மீறப்பட்டு விட்டது. பதிலாக தவிசாளராக பதவியேற்குமாறு கோரப்பட்டது. ஆனால் ஹசனலி அதை மறுத்துவிட்டார்.

ஏற்கனவே தவிசாளராக இருந்த பஷீர் சேகுதாவுத் பரபரப்பு அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளார். இரகசிய கமாராவில் படம்பிடிக்கப்பட்ட காட்சிகள் தன்னிடமுள்ளதாக அறிவித்துள்ளார். முன்னர் குமாரி குரே என்ற பெண்மணியையும் ஹக்கீமையும் இணைத்து பரபரப்பு குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. அப்படியொரு பரபரப்பு மீண்டும் எற்படும் என ஹக்கீம் எதிர்ப்பாளர்கள் கூறி வருகின்றனர்.

இரகசிய ஆவணம் வைத்துள்ளதாக கூறிய பஷீர் காய் வெட்டப்பட்டு அந்த பதவியை ஏற்குமாறு ஹசனலி கோரப்பட்டார். இதன்மூலம் அதிருப்தியாளர்களிற்குள் சச்சரவை மூட்ட ஹக்கீம் நினைத்திருக்கலாம்.


பேராளர் மாநாட்டின் முன்னதாக கூடிய கட்டாய உயர்பீட கூட்டத்தில் நடந்தவை பற்றிய தகவல்களும் ஏற்கனவே வெளியாகிவிட்டது. தனக்கு விருப்பமான ஒருவரை செயலாளராக்க அனுமதிக்க வேண்டுமென்றும், அப்படியென்றால்தான் தன்னால் சுலபமாக வேலை செய்ய முடியுமென்றும் கூறியிருந்தார். அத்துடன், செயலாளர் அரசியல் பதவிகளை பெற கூடாதென்றும் கூறினார். மாகாணசபை உறுப்பினர் ஜவாத்; நிஸாம் காரியப்பர், பாராளுமன்ற உறுப்பினர் மன்சூர் உள்ளிட்ட பலர் அங்கு ஹக்கீமை ஆதரித்தனர். செயலாளர் பதவி நியமனத்தை ஹக்கீம் விருப்பப்போல வைத்துக்கொள்ளலாமென அவர்கள் கூறினார்கள்.

ஆனால் ஹசனலி அதை ஏற்கவில்லை. பொதுச்செயலாளர் அரசியல் பதவிபெறலாமென அவர் வாதிட்டார். இந்த வாதத்தின் உச்சத்தில், கிழக்கில் இரண்டு அதிகாரமையங்களை உருவாக்க நினைக்கிறீர்களா என ஹக்கீம் கேட்டார். அத்துடன், கடந்த மாகாணசபை தேர்தலில் ஓடிஒளிந்து விட்டீர்கள் என்றும் குற்றம்சாட்டினார்.

கடந்த மாகாணசபை தேர்தலில் வெற்றிலை சின்னத்தில் போட்டியிட ஹக்கீம் விரும்பினார். ஆனால் பொதுச் செயலாளரான ஹசனலி அதை விரும்பவில்லை. தனித்து போட்டியிட வலியுறுத்தினார். வெற்றிலை சின்னத்தில் போட்டியிட, கட்சி செயலாளர் ஹசனலியின் கையெழுத்தை வாங்க ஹக்கீம் முயன்றபோது ஹசனலி தொடர்பெல்லைக்கு வெளியில் போனதாக அப்போது செய்திகள் வெளியானது குறிப்பிடத்தக்கது.

ஹசனலியால் தனது தலைமைக்கு ஆபத்தென ஹக்கீம் நினைக்கிறார் போல தெரிகிறது. ஆனால் ஹசனலியின் செயற்பாடுகளை கவனிக்கும்போது, அவர் கட்சியை விசுவாசிக்கும் மனிதராகத்தான் தெரிகிறார். கட்சியை நீதிமன்றத்தில் நிறுத்தமாட்டேன், பிளவுபடுத்தமாட்டேன் என்றுதான் இன்றுவரை சொல்கிறார்.

முஸ்லீம் காங்கிரஸ் தலைமைத்துவம் மீது இன்று வைக்கப்படும் பிரதான குற்றச்சாட்டு கிழக்கு தலைமைத்துவம் இல்லையென்பது. இதை ஓரளவு சரிக்கட்டி வந்தது ஹசனலியின் இருப்பு. இப்போது அது இல்லை. ஹசனலியின் இழப்பு அம்பாறையில் காங்கிரசிற்கு சரிவை கொடுக்கலாம். ஒரு சமயத்தில் இரண்டு அதிருப்தியாளர்களை வெளியில்



விடுவது சாணக்கியமல்ல. ஹக்கீம் அதை செய்துள்ளார்.

ஹக்கீம் தலைமைத்துவத்தை ஏற்ற பின்னர் கட்சியை விட்டு செல்லும் அதிருப்தி தலைவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ரிசாட் பதியுதீன், அதாவுல்லா, அமீரலி, நஜிப் ஏ மஜித் என தொடர்ந்த பட்டியல் இப்போது பஷீரையும், ஹசனலியையும் இணைக்குமா என்பதுதான் கேள்வி.

செயலாளர் என்பவர் அரசியல் பதவி வகிக்க முடியாதென கூறுவது கூட ஹசனலிக்கான பொறிதான். தேர்தல் ஆணையாளரிடம் ஹசனலிக்கு தேசிய பட்டியல் வழங்குவதாக ஹக்கீம் உறுதியளித்தார். இப்போதும் அதை வழங்க ஹக்கீம் இப்போதும் தயாராகத்தான் இருக்கிறார். ஆனால் பொதுச்செயலாளர் அரசியல் பதவிகளை வகிக்க முடியாதென்ற விதியை உருவாக்கி, ஹசனலிக்கு ஆப்பு அடித்துவிட்டனர். தேர்தல் ஆணையாளருக்கு முன்பாக பொதுச் செயலாளர் பதவி, தேசியப்பட்டியல் எம்.பி வாக்குறுதிகள் ஹசனலிக்கு வழங்கப்பட்டது. அந்த வாக்குறுதி ஹசனலிக்கு வைக்கப்பட்ட பொறி.

கட்டாய உயர்பீட கூட்டத்தில் ஏற்பட்ட சச்சரவையடுத்து, ஹசனலியும் இன்னும் சிலரும் பாதியிலேயே வெளியேறினார்கள். அவர்களை ஹக்கீம் தடுக்க முயன்றார். முடியவில்லை. பின்னர் ஹக்கீம் மற்றும் சிலர் ஹசனலியை தொடர்ந்து அவரது வீட்டுக்கு சென்றனர்.

"பலமுறை உங்களை நான் மனம் நோகடித்துவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்" என ஹக்கீம் சொன்னார். அரை மணித்தியாலம் ஹக்கீமின் முகத்தையே பார்க்காமல் ஹசனலி இருந்தார். பிறகு, "லீடர் நீங்கள் போங்கள். நான் ஓய்வாக இருக்க விரும்புகிறேன்" என ஹசனலி சொல்லி ஹக்கீமை அனுப்பி வைத்தார் என்கின்றனர் ஹசனலிக்கு நெருக்கமானவர்கள்.

பேராளர் மாநாட்டுக்கான அழைப்பும் ஹசனலிக்கு கிடைக்கவில்லையாம். வழக்கமாக அழைப்பிதழ்கள் கட்சி தலைமையகத்திலேயே தயாரிக்கப்படும். ஆனால் இம்முறை ஹக்கீமின் அமைச்சிலேயே தயார்செய்யப்பட்டுள்ளன.

"இந்த சர்ச்சை தற்காலிகமாக இப்போது ஓய்ந்துள்ளதாக தெரியலாம். ஆனால் வேர்களை பிடுங்கி வெளியில் எறிந்து கொண்டிருப்பது மரத்துக்குத்தான் நல்லதில்லை" என்று பொடிவைத்து பேசுகிறார்கள் ஹசனலி ஆதரவாளர்கள்.

# ‘இ.போ.சவையும் நான்தான் ஒழுங்குபடுத்துவேன்’

## சிக்கல்களை பேசுகிறார் அமைச்சர் டெனிஸ்வரன்


மாணிக்கம் ஜெகன்


ச.கேதீஸ்வரன்


யோ.சுமன்தாஸ்


பி.பிரஹாசன்




வன்னிமது

மாணிக்கம் ஜெகன்
வவுனியா

*கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட போது விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதியாக கொண்டிருந்தது அதே நிலைப்பாட்டில் தற்போதும் உள்ளதா?*

டெனிஸ்வரன் ஆம். ஒரு சில கருத்து முரண்பாடுகள் கூட்டமைப்பிற்குள் இருக்கும் சக அங்குத்துவ கட்சிகளுக்கிடையில் இருந்தாலும் கூட தமிழ் மக்களின் தீர்வுத்திட்ட தெரிவாக தமிழ்தேசிய கூட்டமைப்பு இருக்கின்றது. ஜனநாயக ரீதியாக சில முரண்பாடுகள் வருவது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால் நலன் சார்ந்த ஒட்டு மொத்த தமிழ் மக்களின் விடுதலைக்கான விடயம் என்பதில் அனைவரும் ஒற்றுமையாக இருக்கின்றார்கள் என்றுதான் நான் நம்புகின்றேன்.

தேசிய தலைவர் அரசியல் ரீதியான பயணத்திற்கு ஜனநாயகரீதியாக கட்சிகள் வளர்க்கப்பட்டு மக்களின் உண்மைகளை பாதுகாக்கும் நோக்கத்திற்காக, சின்னாபின்னமாக இருந்த கட்சிகளை ஒன்றிணைத்து மக்களிற்கான கட்சியாக உருவாக்கியுள்ளார். ஆகவே அவரின் உன்னத நோக்கம் நிறைவேற வேண்டும். இதில் இருக்கின்ற அங்கத்துவ கட்சிகளை ஒன்றினைத்து என்ன நோக்கத்திற்காக தலைவரினால் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக எல்லோரும் பாடுபட வேண்டும். ஜனநாயகரீதியாக கருத்துக்களை கூற எல்லோருக்கும் இடமிருக்கின்றது. ஆகவே சிறு கருத்து முரண்பாடுகள், பிரச்சனைகள் எழுவது தவிர்க்க முடியாத ஒன்று.

ச.கேதீஸ்வரன்
வவுனியா

*வடமாகாணத்தில் உள்ள இ.போ.ச சாலைகள் உங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதா?*

டெனிஸ்வரன் வடமாகாண சாலைகளின் கட்டுப்பாடு என்னிடம் இல்லை. வடமாகாணத்தில் இ.போ.சவின் ஏழு சாலைகள் இருக்கின்றன. அந்த ஏழு சாலைகளிலும் இருக்கின்ற சாரதிகள், நடத்துனர்களின் மற்றும் உள்ளார்ந்த நடவடிக்கைகள் இவற்றில் தலையிடுவதற்கு எந்தவொரு மாகாண சபைக்கும் அதிகாரமில்லை. இதனை விரிவாகவே மக்களுக்கு கூற விரும்புகின்றேன். சம்மந்தப்பட்ட தரப்பினர்களுக்கும் கூற விரும்புகின்றேன்.

ஆனால் ஒரு விடயத்தில் எனக்கு அதிகாரமிருக்கின்றது. வடமாகாணத்தின் உள்ள வழித்தடங்களில் பேருந்துகளை எந்த நேரத்தில் தனியாரோ, அரச பேருந்தோ எத்தனை பேருந்துகளை சேவை வழங்குவது, அச் சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்கான பூரண அதிகாரம் எங்களது நியதிச்சட்டத்தின் ஊடாக உள்வாங்கி இருக்கின்றேன். அந்தவகையில் அவர்களது சாரதி, நடத்துனர்களின் ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான ஏனைய உள்ளார்ந்த, நிர்வாக நடவடிக்கைகளில் நேரடியாக நாங்கள் தலையிட முடியாவிட்டாலும் கூட அவர்களது பேருந்துகள் வடமாகாணத்தில் எவ்வாறு ஓட வேண்டும் என்பதனை தீர்மானிப்பதற்கான அனைத்து விடயங்களும் அதிகாரங்களும் எமக்கிருக்கின்றது. நேர ஒழுங்கின் அடிப்படையில் பேருந்துகளை ஒழுங்குபடுத்துகின்ற அதிகாரம் வடமாகாண போக்குவரத்து அமைச்சர் என்ற ரீதியில் எனக்கிருக்கின்றது.

யோ.சுமன்தாஸ்
வவுனியா

*அண்மைக்காலங்களில் மக்கள் பிரதிநிதிகளின் உருவப்பொம்மைகள் எரிக்கப்படுகின்றது இது சம்மந்தமாக உங்கள் கருத்து?*

டெனிஸ்வரன் எனது உருவ பொம்மையும் எரிக்கப்பட்டுள்ளது. நியாயமான கோரிக்கைகள் முன்னெடுக்கப்படாத பட்சத்தில் நாங்கள் எங்களது எதிர்ப்புக்களை ஜனநாயகரீதியாக வெளிக்காட்டுவது அடிப்படை உரிமை என்பதனை ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால் நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைத்து, சங்கத்திற்கு முரணான செயற்பாடுகளில் ஈடுபடுவதை வன்மையாக கண்டிக்கின்றேன். அன்மையில் எதிர்க்கட்சித்தலைவர் சம்மந்தன் ஐயாவின் உருவ படம் எரிக்கப்பட்டது. அதேபோன்று வவுனியாவில் வடமாகாண சுகாதார அமைச்சரின் படங்கள் எரிக்கப்பட்டதாகவும் அறிகின்றேன். சுமந்திரனின் படங்களும் எரிப்பதற்கு ஆரம்பத்தில் முயன்றதாகவும் அறிகின்றேன்.

தொழிற்சங்கங்கங்களில் இருப்பவர்கள் அங்கத்தவர்கள் நலன்களை பாதுகாக்கின்ற வகையில் செயற்பட வேண்டும். நான் செய்த வேலை என்னவென்றால் புதிய பேருந்து நிலையத்தில் பேருந்துகளை ஒழுங்குபடுத்தி பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் சீராண போக்குவரத்தினையும் ஒழுங்குபடுத்தியதே. ஊடகங்கள் நாளாந்தம் வடமாகாணத்தில் உயிரிழப்புக்கள் நடைபெறுவதை சுட்டிக்காட்டுகின்றீர்கள். சரியான நேர அட்டவனை பின்பற்றப்படாமை, தனியார், இபோ.சா இடை யேயான கண்மூடித்தனமான போட்டித்தன்மை, இரு தரப்பும்; வீதி ஒழுங்கை சரியாக கடைப்பிடிக்காமை காரணமாக பெறுமதி மிக்க உயிர்களை இழந்திருக்கின்றோம்.

வெறுமனவே போக்குவரத்து சேவையை இலாபத்திற்காக இயக்கக் கூடாது. பொதுமக்கள், தனியார், இ.போச, வர்த்தக சங்கங்கள் என்வற்றை பாதிக்காத வகையில் அண்மையில் எடுத்த முடிவை, முல்லைத்தீவிலிருந்து வந்த இரண்டு பேருந்துகளுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பு சிக்கலாக்கியுள்ளது.

சம்மந்தப்பட்டவர்கள் சற்றே யோசிக்க வேண்டும். ஏதோவொரு பிள்ளை விபத்தினால் இறந்து, நாங்கள் அசமந்தமாக இருந்தோமானால் நாளை இது நமக்கோ, நமது பிள்ளைக்கோ ஏற்படும் என்பதை மறந்து விடக்கூடாது. இன்னும் ஒரு சில மாதங்களில் தீர்க்கமான முடிவெடுக்க உள்ளேன். அந்த தருணத்திலாவது இரு தரப்பினரும் இறங்கி எமது மக்கள் எமது பிள்ளைகள் என்று எண்ணி சேவையாற்ற முன்வர வேண்டும் என்பதை அன்பாக கேட்டுக்கொள்கின்றேன்.

பி.பிரஹாசன்
வவுனியா

*வவுனியா மத்திய பேருந்து நிலைய பிரச்சனை தீர்த்து வைக்கப்படாமல் இருக்கும் நிலையில் மீண்டும் விஸ்வரூபம் எடுத்தால் உங்களது நடவடிக்கை என்ன?*

டெனிஸ்வரன் கடந்த ஜனவரி மாதம் 16ம் திகதி மத்திய போக்குவரத்து அமைச்சர், வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் ரிஷாட்பதியுதீன், வடமாகான ஆளுநர் மற்றும் நானும் சேர்ந்து மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்ட பேருந்து நிலையம் மூடப்பட்டுள்ளது. நான்தான் அதை மூடுமாறும் கேட்டிருந்தேன். தற்போது நடந்த பிரச்சனைக்கு தீர்க்கமான முடிவெடுக்கும் வரை மூடி வைக்குமாறு கேட்டிருக்கின்றேன். அதற்கமைவாக சேவைகள் மேற்கொள்ளபட்டுக்கொண்டு இருக்கின்றது. வவுனியா நகரம் மிகவும் சிறய இடம். இதற்குள் நூற்றுக்கணக்கான பேருந்துகளை ஓரிடத்திற்குள் வைத்து சேவைகள் வழங்குவது சிரமமானது. இதற்கப்பால் இரண்டு பேருந்துகளும் ஒரே இடத்தில் இருந்து புறப்பட்டால்தான் எங்களது இணைந்த நேர அட்டவணையை சரியாக பயன்படுத்தலாம்.

உதாரணமாக வவுனியாவில் இருந்து மன்னாருக்கு இ.போ.சவும், தனியார் பேருந்தும் காலை 07.00 மணிக்கும் 7.30 மணிக்கும் புறப்படுகின்ற இரண்டு பேருந்துகளும் பிரமனாலங்குளத்திற்கு அப்பால் சமாந்தரமாக ஓடுகின்றார்கள். இதில் 07.00 மணிக்கு புறப்பட்ட பேருந்து அதிக வேகமில்லாமல் மிதமாக வந்திருக்க வேண்டும். இல்லாவிடின் 07.30க்கு புறப்பட்ட பேருந்து அதி வேகமாக வந்திருக்க வேண்டும். இந்த இரு விடயத்தையும் மாற்றியமைக்க வேண்டும் என்பதே எனது நோக்கம்.


தற்போது மாவட்டங்களிற்கு இடையிலான இணைந்த நேர அட்டவனை தயார் செய்யப் பட்டுள்ளது. உள்ளூர் சேவைகளிற்கும் இணைந்த நேர அட்டவனை தயார் செய்த பின்னர் அதை அமுல்படுத்துமாறு இ.போ.ச சார்பாக கோரிக்கை விடப்பட்டுள்ளது. அது அவர்களின் நியாயமான கோரிக்கை என்பதை நான் ஏற்றுக்கொள் கின்றேன்.

இணைந்த நேர அட்டவனை தயார் செய்த பின்னர் மாவட்டங்களிற்கிடையிலான சேவை, உள்ளூர் சேவை இரண்டையும் ஒரேநேரத்தில் அமுல்படுத் துவதற்கு தயாராக இருக்கின்றேன். அவ்வாறு இணைந்த நேர அட்டவனை அமுல்படுத்துகின்ற போது தனியாரோ அல்லது இபோசவினரோ இதற்கு முரணாக அல்லது ஒழுங்கு விதிகளை மீறுவார்களேயானால் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நீதிமன்ற உத்தரவை பெற்று, அதை நடைமுறைப்படுத்தவும் தயாராக உள்ளேன்.

அனைத்து பேருந்துகளும் புதிய பஸ் நிலையத்திற்கு சென்றால் நகரத்திலிருந்து அங்கு செல்ல குறைந்தது 100 ரூபாவேனும் முச்சக்கர வண்டிக்கு கொடுக்க வேண்டும். புதிய பேருந்து நிலைத்தில் மாணவர்களை இறக்குவார் களேயானால் பழைய பேருந்து நிலைத்திற்கு அருகாமையில் உள்ள பாடசாலைகளுக்கு நீண்டதூரம் நடந்து செல்ல வேண்டும். தேவையற்ற பணவிரயமும் நேரவிரயமும் ஏற்படப்போகின்றது. இதை சீர் செய்வதற்காக நான் முன்வைத்த திட்டம் ஒரு மாவட்டத்தில் இருந்து வவுனியா மாவட்டத்திற்கு வருகின்ற வெளிமாவட்ட சேவைகளும், வவுனியா மாவட்டத்தின் உள்ளூர் சேவைகளும் கச்சேரி, வைத்தியசாலை, நீதிமன்றம், வர்த்தக நிலைங்கள் இவற்றினூடாக பழைய பேருந்து நிலையத்திற்கு சென்று இறக்கிவிட்டு புதிய பேருந்து நிலையத்திற்கு செல்ல வேண்டும்.

மீண்டும் அந்த பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து புறப்பட்டு முன்பு கூறிய இடங்களில் இருக்கின்ற இடங்களில் உள்ள மக்களை ஏற்றிக்கொண்டு தமது சேவையை ஆரம்பிக்கலாம்.

வவுனியாவில் இருக்கின்ற உள்ளூர் சேவைகளை மட்டும் குறிப்பிட்ட காலத்திற்கு அவர்களின் ஆரம்பமானது பழைய பேருந்து நிலையமாக இருக்கும். வெளிமாவட்டங்களிற்கு ஓடுகின்ற பேருந்துகள்தான் தங்களது ஆரம்பத்தலையும் நிறுத்தலையும் புதிய பேருந்து நிலையத்தில் செய்ய உள்ளன.



கனகாம்பிக்கை குளத்திலிருந்து கிளிநொச்சி குளத்திற்கு அனுப்பப்படும் நீர் குழாய் மூலம் வான்பாயும் வழியால் நீர் கடத்தப்படுகிறது.

# மெல்ல கருகும் கிளிநொச்சி

## நீருக்காக போராடும் விவசாயிகளின் துயரம்

சுஜன்

ஒரு காலத்தில் வடக்கின் நெல் களஞ்சியமாக இருந்தது கிளிநொச்சி. வடக்கின் தேவையை பூர்த்தி செய்து, தெற்கிற்கும் நெல் ஏற்றுமதி செய்யப்பட்டது ஒரு காலம். வடக்கின் பல இடங்களிலிருந்தும் கிளிநொச்சிக்கு சென்று நெல் விதைத்து வாழ்க்கையை வளப்படுத்திய விவசாயிகளின் பட்டியல் பெரியது. கிளிநொச்சிக்குள் நுழைந்தால் நீரோடும் வாய்க்கால் வழியே நடந்தால் பச்சை போர்த்திய நிலங்களைத்தான் காண முடிந்தது.

**அதெல்லாம் ஒரு காலம்.**

இன்று நிலம் தீப்பற்றி எரியும் நிலையில் உள்ளது. அவ்வளவு வறட்சி. போகிற போக்கை பார்த்தால் நிலத்தில் பச்சையையே காண முடியாயோ என்ற அச்சம் விவசாயிகளிடம் உள்ளது. அதைவிட பெரிய அபாயம் கிளிநொச்சியின் நெல் வயல்கள் கருகும் நிலையில் இருப்பது. கடந்த பருவமழை பொய்த்துவிட, குளங்களில் நீர் வற்றிவிட, ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற் பயிர்கள் கருகிக் கொண்டிருக்கின்றன. வறட்சியால் மட்டும் இந்த அழிவல்ல. வறட்சிக்காலத்தில் காப்பாற்றிய நெற் பயிர்களை பருவம் தவறி அடிக்கடி பெய்த மழையும் அழித்தது. இப்படி அழிந்தது சுமார் 3000 ஏக்கர் நெற்பயிர்கள் என்கிறது கமநலசேவைகள் திணைக்கள புள்ளிவிபரங்கள்.

கிளிநொச்சியின் கண்டாவளை, பளை, கரைச்சி, பூநகரி ஆகிய பிரதேசங்களிலேயே அதிகளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. இந்த வருட காலபோகத்தில் மாவட்டத்தில் 64,835 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. அவையே அழிவடையும் அபாயத்தில் உள்ளன.

'என்னுடைய 4 ஏக்கர் சொந்த வயல். 3 ஏக்கர் குத்தகைக்கு எடுத்து செய்கின்றேன். மழையில்லாததால் பயிர்கள் கருகி விட்டன. இறுதியாக பெய்த மழையால் கொஞ்சம் தப்பிவிட்டன. தப்பிய பயிர்களில் இருந்து வரும் கதிர்கள் பலன் தரக்கூடியதாக இல்லை. வெளிவரும் நெல் மணிகள் நான்கு அல்லது ஐந்து மணிகளுடன்தான் வெளிவருகின்றது. 3 ஏக்கருக்கு அதிகமாக நெல் விதைத்தவர்களிற்கு மானியமும் தர மாட்டார்கள்' என்கிறார் விவசாயி சீனிவாசகம்.

'சிறிதளவு பெய்த 'மழையினால் இம்மணிகள் வருவதாயிருந்தாலும் ஒரு ஏக்கருக்கு இரண்டு அல்லது மூன்று மூடை நெல் வருமோ என்பதும் சந்தேகம்தான். அப்படி அறுவடை செய்தாலும் மேலதிகமாக எங்களுடைய கையால் 10000 ரூபா செலவு செய்ய வேண்டி வரும். தற்பொழுதே நாங்கள் 250000 ரூபா வரைக்கும் செலவளித்து விட்டோம். 35000 ரூபாவுக்கு செலவளித்தாலும், ஏக்கருக்கு ஐந்து, ஆறு மூட்டை நெல்தான் வரும்' என்று சொல்லும் இன்னொரு விவசாயியான பரமானந்தத்தின் குரலில் பெரும் சோகமிருந்தது.

'பெய்ய வேண்டிய காலத்தில் பருவமழை பெய்யாததால் பயிரெல்லாம் எரிந்துவிட்டது. திணைக்களத்திடம் இழப்பீட்டை பெற்று வயல் விதைப்பதற்கு வாங்கிய கடனை செலுத்துவோம் என்றால், திடீரென மழை பெய்தது. பருவம் தப்பிய மழையால் ஒரு பயனுமில்லை. கதிரில் சிறிய கதிர் வந்துள்ளது. இதனால் நல்லவிளைச்சல் கிடைக்காது. இழப்பீடு தர மதிப்பீடு செய்ய வருபவர்கள், இந்த கதிரை பார்த்துவிட்டு இழப்பீடு தரமுடியாதென் கிறார்கள். இந்த கதிரிலிருந்து விளைச்சலை பெறவே முடியாது' என்கிறார் இன்னொரு விவசாயி.

- பருவம்பார்த்துத்தான் இந்தவிவசாயிகள் பயிர் செய்தனர். எனினும், மழை பருவம் தப்பியதால் முழுமையான அழிவை எதிர் கொள்கின்றனர் விவசாயிகள். விவசாயிகளின் அடிப்படை இயல்பு வயலில் எவ்வளவு அழிவுகள் ஏற்பட்டாலும், விளைந்தவற்றை அறுவடை செய்வார்கள். அப்படி அறுவடை செய்யாவிட்டால் வாழவைக்கும் நிலத்தை அவமரியாதை செய்வதாக அவர்கள் கருதுகிறார்கள். அதனால்தான் கிடைக்கும் சிறிய விளைச்சலையும் அறுவடை செய்கிறோம் என்கிறார்கள்.

வட்டக்கச்சிக்கும் இரணைமடுவின் வலது பக்கப் பகுதிக்கும் இடையில் 3,000 ஏக்கர் நீர் பாய்ச்சல் காணி உள்ளது. அந்த நீர் பாய்ச்சல் காணியில் 2,500 ஏக்கர் வயல் நிலங்கள். அதில் 2,000 ஏக்கர் பாதிப்படைந்துள்ளது. 500 ஏக்கர்தான்






பயிர்களை காப்பாற்ற தற்காலிக ஏற்பாடு.

வறட்சி பிரச்சனையுடன் இன்னொரு பிரச்சனையையும் விவசாயிகள் எதிர்கொள்கின்றனர். கிளிநொச்சியில் உள்ள வயல் நிலங்களில் கணிசமான உரிமையாளர்கள் கிளிநொச்சிக்கு வெளியில் உள்ளனர். வெளிநாடுகளில், வெளிமாவட்டங்களில் இருந்தபடி வயல் நிலங்களை குத்தகைக்கு விட்டுள்ளனர். விவசாய பாதிப்பிற்கான நிவாரங்கள் காணி உரிமையாளர்களிற்கே வழங்கப்படுகிறது. விவசாயம் செய்து நட்டத்தை சந்திப்பது யாரோ. நிவாரணம் பெறுவது யாரோ! இம்முறை கிளிநொச்சியில் 60 வீதமானவர்கள் தமது நிலத்தில் விவசாயம் செய்தனர். 40 வீதமானவர்கள் குத்தகைக்கு விட்டுள்ளனர். முன்னர் நிவாரணத்தை உரமாக கொடுத்தார்கள். அது விவசாயம் செய்பவரின் கைக்கு சென்றது. ஆனால் தற்போதைய நடைமுறையால் ஐரோப்பாவில் உள்ள வயல் உரிமையாளர்கள் கூட நிவாரணம் பெறுகிறார்கள். நெற்செய்கையில் ஈடுபட்டவர்களில் 60 வீதமானவர்கள் இம்முறை மானியப்பணத்தை பெற்றுள்ளனர். மானியப்பணம் பெற்றவர்களில் 40 வீதமானவர்களே வயல் விதைத்தவர்கள். ஏனையவர்கள் நில உரிமையாளர்கள்.

பருவமழை பொய்த்து நெற் பயிர்கள் அபாயத்தை சந்தித்த சமயத்தில் அதை காப்பாற்ற அதிகாரிகள் பல்வேறு முயற்சிகளை செய்தார்கள். மருதநகர் விவசாயிகளிற்காக கனகாம்பிகைகுளத்தின் வான்பாயும் பகுதியில் குழாய்கள் வைக்கப்பட்டு, கிளிநொச்சி குளத்திற்கு நீர் கொண்டு வரப்பட்டது. இது ஒரு உதாரணம். அந்த சமயத்தில் வடமாகாண விவசாய அமைச்சினால் குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டன. அது குறித்த நிறைய புகார்கள் எழுந்துள்ளன. குழாய் கிணறு அமைக்கப்படும் இடங்களை அந்தந்த பகுதி விவசாயிகள் சங்கங்களே தீர்மானித்தன. சங்கத்தின் பொறுப்பில் இருந்தவர்கள் தமக்கு வேண்டப்பட்டவர்களின் காணிகளில் குழாய் கிணறை அமைத்துள்ளனர், பிரதான வாய்க்காலிற்கு அண்மையிலும் அமைத்துள்ளனர், குளத்து நீர் செல்லவே முடியாத மேட்டுநிலங்களில் அமைக்கப்படவில்லையென குற்றச்சாட்டு கிளம்பியுள்ளது. குறிப்பாக முரசுமோட்டை பகுதியில் இந்த குற்றச்சாட்டு அதிகமாக எழுந்துள்ளது.



மழை வேண்டி இரணைமடுவில் நடந்த குடைபிடித்த வழிபாடு.

ஓரளவு விளைச்சலை கொடுத்தது.

முரசுமோட்டை, ஊரியான், குஞ்சு சுப்பரந்தன்,பெரியபரந்தன் ஆகிய பிரதேசங் களிலும் கிட்டத்தட்ட 3000 ஏக்கர் பாதிப் படைந்துள்ளது. இதில் முரசுமோட்டை ஊரியான் பகுதிகள் கடுமையாக பாதிப்படைந்துள்ளன. இரணைமடுவுக்கு அண்மையிலும் 6,500 ஏக்கர் வயல் நிலம் அழிவிற்குள்ளாகியுள்ளது. மீதமாக 7500 8000 ஏக்கர் நெல்தான் பிறகு கிடைத்த மழையால் காப்பாற்றப்பட்டுள்ளது.

இரணைமடு நீர்ப்பாசனத்திற்கு அண்மையில் மட்டும் 8,000 ஏக்கர் முற்றாக அழிவடைந்துள்ளது.'மானாவரி' எனப்படும் மழையை மட்டுமே நம்பிய விவசாயப் பிரதேசங்களான புளியம்போக்கனை,பூநகரி,கண்டாவளை, தர்மபுரம், கட்டைக்காடு, நாகேந்திரபுரம், மயில்வாகனபுரம், குமாரசுவாமிபுரம் போன்ற பிரதேச வயல்கள் முழுமையாக அழிவடைந்துவிட்டன.

நீர்ப்பாசன திணைக்களம் புளியம் போக்கணை மக்களோடு புரிந்துணர்வுடன் செயற்பட்டதாலும், கல்மடுகுளத்தின் இருந்து நீரை வழங்கியதாலும் புளியம்போக்கனைபகுதியில் 60 வீதமான பயிர்நிலங்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. எனினும் 1,500 ஏக்கர் வரையான நிலங்கள் அழிவடைந்துள்ளன. கண்டாவளை பகுதியில் நீர் போகாத இடமாக 4 ஏக்கர் திட்டம் உள்ளது. அதிலும் 1,200 ஏக்கரிற்கு அழிவு ஏற்பட்டுள்ளது. மத்திய பகுதி திட்டத்தில் நீர் இல்லாத காரணத்தினால் 75 வீதம் அழிவடைந்துள்ளது. மீதி 25 வீதம் கல்மடு நீர்பாய்ச்சல் திட்டம் மூலம் காப்பாற்றப்பட்டுள்ளது.

அக்கரையான்குளம், கல்மடுகுளம், கனகாம்பிகைக்குளம், புதுமுறிப்புகுளம் ஆகியவற்றிலிருந்து வழங்கப்பட்ட நீர் விவசாயிகளிற்கு ஓரளவு ஆறுதலாக இருந்தது. இதனால் 6,000 ஏக்கர் வரையான வயல்கள் காப்பாற்றப்பட்டன.

'எனது வயலிற்கு குளத்து நீர் கிடைக்கவில்லை. நான் கிணறு வெட்டி நீர்ப் பம்பை கொண்டுதான் வயல் செய்தேன். இதனால் எனக்கு 10,000 ரூபா முடிந்தது. இது தற்காலிகமான திட்டமாகும். வயலில் அறுவடை செய்த பின்னர் கிணற்றினை மூடிவிடவேண்டும். ஒரு நாளைக்கு வயலுக்கு நீர் இறைப்பதற்கு 6 லிற்றர் மண்ணெண்ணெய் முடியும். மூன்று இரவும் மூன்று பகலும் இறைத்தால்தான் மேடான பகுதியுள்ள பயிரை காப்பாற்ற முடியும். இதற்கு கிட்டத்தட்ட 36 லிற்றர் மண்ணெண்ணெய் முடிந்தது. இது என்னுடைய காணிக்குரியது. இதைப்போன்று 12 பேர் சேர்ந்து கிணறு வெட்டினார்கள். இருப்பினும் அதற்கு போதுமான ஊற்று கிடைக்காமல் போனது. இதனால் அவர்களிற்கு உற்பத்தி செலவு கூடியிருக்கின்றது. ஒரு நாளைக்கு நீர்ப்பம்முடன் ஒருவர் நிற்கவேண்டும். அவருக்கு 1,000 ரூபா படி சம்பளம் கொடுக்க வேண்டும். 6 நாட்களுக்கும் 6,000 ரூபா முடிந்தது.

நியாயப்படியான விலையில் நெல்லை விற்றால்தான் விவசாயி ஓரளவு தப்பிக்கலாம். இல்லையேல் தனியார் எம்மை நெருக்கடிக்குள்ளாக்கி நெல்லினை தாமே எடுத்துக்கொள்ள நேரிடும். இவை அனைத்தும் அரசாங்கத்தின் கையில் உள்ளது' என்றார் முரசுமோட்டையை சேர்ந்த பேரின்பம்.

அரசாங்கம் நிர்ணயிக்கப்பட்ட விலையில் நெல்லை பெற்றால் விவசாயிகள் தப்பிப்பார்கள். ஒரு மூடை நெல் என்றால் நிர்ணயிக்கப்பட்ட விலை (1முப) சம்பா 42ரூ, சிவப்பு இனம் 38ரூ. இந்த விலைப்படியே விவசாயிகளிடம் நெல் கொள்வனவு செய்யப்பட்டது. ஆனால் தனியார் கிலோ அடிப்படையில் நெல்லை கொள்வனவு செய்வதில்லை. மூட்டைப் படியே கொள்வனவு செய்வார்கள். ஒரு மூட்டையில் 68 கிலோ நெல் இருக்கும். அதை ஆகக்கூடுதலாக 1,600 ரூபா வரையே கொள்வனவு செய்வார்கள் என்கிறார்கள் விவசாயிகள். எனவே நியாயமான விலை நிர்ணயிக்கப்பட்டு, அரசே அதை கொள்வனவு செய்ய வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உலகத்தையே வாழ வைக்கும் விவசாயிகள் இப்போது திண்டாடு கிறார்கள். கை கொடுத்து கரையேற்றி விடுவது அரசின் கடமையல்லவா? ●

மானியம் பெறமுடியாத விவசாயிகளுக்கு விவசாய காப்புறுதி கிடைக்காமல் இருக்கப் போகின்றது. மானிய சலுகையினை பெற்றுக் கொண்டவருக்கு மாத்திரம்தான் காப்புறுதி கிடைக்கும். மானியம் என்பது வாழ்க்கையில் அடிமட்டத்தில் உள்ளவர்களுக்கான திட்டமாகும். அதாவது 3 ஏக்கருக்குள் விதைப்பவர்களுக்கும் மாத்திரம்தான் மானியம் வழங்கப்படும். அதற்குமேல் விதைக்கின்ற விவசாயிகள் மானியம் பெறமுடியாது.

வெளிநாட்டு அரிசிகள் 72, 70 ரூபாவிற்கு விற்பனை செய்ய வேண்டும் என அரசாங்கத்தால் தெரிவிக்கப்பட்டிருந்தது. இம்முறை நெல்லை தனியார் கொள்வனவு செய்வார்கள் என்ற அச்சம் விவசாயிகளிடம் உள்ளது. நிர்ணய விலையின்படி அவர்கள் கொள்வனவு செய்வதில்லை. அதனால், தாம் பாதிக்கப்படுவோம் என்ற அச்சம் அவர்களிடம் உள்ளது. இம்முறை நெல்லின் விலையை நிர்ணயிக்காமலே விற்பனை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளிடம் 42 ரூபாவிற்கு வாங்கி 49 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

மானிய காப்புறுதி என்ற திட்டத்தின் ஊடக 10 ரூபாவிற்கு பசளை கமநலசேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படுகிறது. அதில் 3 ரூபா காப்புறுதி வைப்பு என்ற திட்டத்துக்கு அனுப்பபட்டது. வயல்களில் அழிவு ஏற்படும்போது இழப்பீட்டு தொகையினை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காப்புறுதி நிறுவனத்தினால் வழங்கப்படும். தற்போதைய சூழ்நிலையில் மானியங்களை காசாக போடுகின்ற படியால் காப்புறுதி திட்டத்துக்கு காசு போடப்பட்டதா இல்லையா என்பது விவசாயிகளுக்கும், கமநலசேவைகள் திணைக்களத்துக்கும் தெரியாது. கிளிநொச்சி கமநலசேவை திணைக்களத்தின் உப ஆணையாளர் வேலாயுதம் ஆயகுலன், தலைமை திணைக்களத்தில் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காப்புறுதி கொடுப்பதற்கு முடிவு எடுத்துள்ளதாக இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளத்தின் செயலாளர் சிவமோகன் தெரிவித்தார்.

3-ம் பக்க தொடர்ச்சி...

வியாழேந்திரன். விளைவு, அவரது ஒழுங்குபடுத்தலால் சுமார் இரண்டாயிரம் பேரளவில் எழுக தமிழில் கலந்து கொண்டிருக்கலாமென கூறப்படுகிறது. அதேபோல, துரைரெட்ணசிங்கமும் சுமார் ஆயிரத்து இருநூறு பேர்வரையில் ஆட்களை திரட்டியிருந்தார்.

மொத்தமாக சுமார் நான்காயிரத்து ஐநூறு தொடக்கம் ஐயாயிரத்து ஐநூறு வரையானவர்கள் கிழக்கு எழுக தமிழில் கலந்து கொண்டதாக கணிப்பிடலாம். எழுக தமிழிற்காக செலவிடப்பட்ட பணம் கிட்டத்தட்ட 25 இலட்சம்.

இந்த எழுக தமிழால் தமிழ் மக்கள் பேரவை அல்லது அரசியல்கட்சிகள் பெற்ற பலனைவிட, வியாழேந்திரன் அதிகமாக ஸ்கோர் செய்துள்ளதாக கூறப்படுகிறது. அண்மைக்காலமாக அவரது அதிரடி பேச்சுக்கள்,பிரச்சனைக்குரிய இடங்களிற்கு சென்று நடவடிக்கை எடுப்பதென அதகளம் செய்துகொண்டிருந்தவர், எழுக தமிழில் மக்களை திரட்டி நன்றாக ஸ்கோர் செய்துள்ளார். எழுக தமிழுடன் மட்டக்களப்பில் அவரது செல்வாக்கு உயர்ந்துள்ளது.

**மூக்குடைபட்ட முன்னாள் போராளிகள்**

எழுக தமிழை சீர்குலைக்க இறுதிவரை பல முயற்சிகள் நடந்துள்ளன. வெளிப்படையாகவும்,இரகசியமாகவும்பல முயற்சிகள் நடந்ததாக ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டிருந்தனர். எழுக தமிழால் பொதுமக்களின் அமைதியான வாழ்விற்கு பங்கம் ஏற்படுமென ஈரோஸ் அமைப்பின் பிரபாகரன் என்பவர் பொலிசாரிடம் முறையிட்டு, தடைசெய்ய கோரினார்.




யாழ்ப்பாணத்திலும் இதேவிதமான சம்பவம் நடந்திருந்தது. ஏற்பாட்டு குழு சட்டரீதியாக அந்த விவகாரத்தை சந்தித்து, முறைப்படி அனுமதி பெற்று எழுக தமிழை நடத்தியிருந்தது. அந்த முன் அனுபவமோ என்னவோ, காவல்துறை தலையிட மறுத்துவிட்டது.

அதுதவிர, எழுக தமிழிற்கு எதிரான அனாமதேய துண்டுபிரசுரங்கள் தாராள மாக அச்சிடப்பட்டு இனம்தெரியாத வர்களால் வீசப்பட்டிருந்தது. அரசியல மைப்பு உருவாக்க விவகாரமாக அரசுடன் பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் இது அவசியம்தானா என உள்ளூர் தமிழரசுக்கட்சி பிரமுகர்களும் பேசினார்கள். இவற்றையெல்லாம் கடந்து தான் எழுக தமிழ் நடந்து முடிந்திருக்கிறது.

**புகுந்து விளையாடிய சைக்கிள் போய்ஸ்**

எழுக தமிழ் வெற்றிகரமாக நடந்து முடிந்துவிட்டது. எல்லாம் சுபம் என கிளைமாக்ஸ் முடியவில்லை. இப்போது இன்னொரு பிரச்சனை ஆரம்பித்துள்ளது. இது ஏற்பாட்டு குழுவுக்குள்.

எழுக தமிழ் பிரசாரத்தில் அதிகநாள் ஈடுபட்டது தமிழ்தேசிய மக்கள் முன்னணியினர். ஆனால் அவர்கள் கூட்டத்திற்கு ஆள் சேர்த்ததைவிட, கட்சிக்குத்தான் ஆள்சேர்த்தார்கள் என்ற கருத்து ஏற்பாட்டு குழுவிடம் உள்ளது.

அதுதவிர, சுரேஷ் பிரேமச்சந்திரனின் பேச்சும் ஏற்பாட்டாளர்களை நெளிய வைத்துள்ளது. தமிழர்களிற்கு புதிய அசியல் தலைமை தேவையென்றார் சுரேஷ். "தமிழரசுக்கட்சியில் உள்ள அதிருப்தி யினால் மேடைகளில் சுரேஷ் கடுமையாக பேசி வருகிறார். ஆனால் எழுக தமிழ் போன்ற உயர்ந்த நோக்கமுடைய பொது மேடைகளில் அவர் நிதானம் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு" என்றார் ஏற்பாட்டாளர்களில் ஒருவர்.

பல்வேறு நிலைப்பாடுடையவர்களை ஒரேமேடையில்ஏற்றும்போது இப்படியான சிக்கல்கள் வருவது இயல்புதானே என்றார் ஏற்பாட்டுகுழுவில் இருந்த ஒருவர்.

யாழ்ப்பாணத்தில் ஒரு எழுக தமிழ். பலமாத இடைவெளியின் பின் மட்டக்களப்பில் ஒரு எழுக தமிழ். இடையில் எல்லோரும் சைலண்ட் மோட். இப்படியே ஆறு மாதங்களிற்கு ஒரு பேரணி வைத்துக் கொண்டிருந்தால், நடுவில கொஞ்சம் பக்கத்தை காணோம் என சனங்கள் சொல்ல மாட்டார்களா? ●






# வந்தாரை வாழ வைக்கும் வவுனியா

வன்னிமது

வவுனியா இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள ஒரு நகரமாகும். இதன் எல்லைகளாக மன்னார், முல்லைத்தீவு, அனுராதபுரம், திருகோணமலை, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் அமைந்துள்ளன. இலங்கையில் இரு தசாப்தங்களிற்கும் மேலாக நடந்த உள்நாட்டுப் போரினால் இடம் பெயர்ந்த மக்களுக்கு இருகரம் நீட்டித் தஞ்சமளித்தது இந்த நகரமே. இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் மிகவும் வளர்ச்சியுடைய நகரமாக வவுனியா அமைந்துள்ளது. ஈழப்போரில் வன்னி, யாழ்ப்பாணம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் பல்லாயிரக் கணக்கானோர் இம் மாவட்டத்திலேயே உள்ளனர். இலங்கையில் தமிழருக்கு உரிய பகுதிகளிலேயே கடலால் தழுவப்படாத ஒரே ஒரு மாவட்டம் என்றால் அது வவுனியாவே தான். அந்தக் குறையைத் தீர்த்து வைக்கும் விதமாகவோ என்னவோ இம் மாவட்டத்தின் பல ஊர்கள் குளம் என்னும் ஈற்றுப் பெயருடன் முடிவடைகின்றன. (குளங்களும் இங்கு அதிகம் தான்).







## பெயர்க் காரணம்

வன்னிவிளாங்குளம் என்ற குளம் உடைப்பெடுத்ததை சீரமைப்பதற்காக வவுனியன் என்ற பிரதானியிடம் மக்கள் சென்று அதனை மீளமைத்து தருமாறு கேட்டுக்கொண்டதற்கமைய வவுனியானால் மீளமைத்துக்கொடுக்கப் பட்டது. அதன் பின்னர் அக்கால வழக்கப்படி யார் மீளமைக்கின்றார்களோ அவர்களின் பெயரினை சூடுவது வழக்கமாக இருந்தமையால் அக்குளத்திற்கு வவுனியன் வன்னி விளாங்குளம் என்ற பெயரினை இடப்பட்டது. அதன் பின்னர் ஆங்கிலேய கவர்னரினால் நீண்ட பெயர்களில் உள்ள பெயர்களை குறுக்கி அடையயாளப்படுத்தும் போது வவுனியன் வன்னி விளாங்குளம் என்ற பெயர் வவுனியன் விளாங்குளமாக மாற்றப்பட்டு காலப்போக்கில் வவுனியா குளமாக அழைக்கப்பட்துடன் அதனை சூழ இருந்த இடம் வவுனியா என்று அழைக்கப்பட்டது.

## பல்கலைக்கழகம்

யாழ் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகம் வவுனியா நகரப் பகுதியில் அமைந்துள்ளது. இவ் வளாகத்தின் ஒரு தொகுதி ஏ30 வவுனியா மன்னார் வீதியில், வவுனியா நகரத்திலிருந்து 8 கிமீ தொலைவிலுள்ள பம்பைமடுப் பகுதியில் அமைத்துள்ளது. இதை விட வவுனியா குருமன்காட்டில் விஞ்ஞான பீடமும், மற்றும் புகையிரத நிலைய வீதியூடாகச் செல்லும் உள்வட்ட வீதியில் முகாமைத்துவக் கற்கைகளும் பார்க் வீதியில் யாழ் பல்கலைக் கழகத்தின் ஆங்கில பீடமும் அமைந்துள்ளது.

## கல்வி

கல்விப் புலத்தைப் பொறுத்த வரைக்கும் வவுனியாவில் வவுனியா இலங்கைத் திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை (1878 இல் அமைக்கப்பட்டது, வவுனியாவின் முதல் பாடசாலை), வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, வவுனியா பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலயம், வவுனியா தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம், வவுனியா விபுலானந்தா கல்லூரி, சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா இந்துக் கல்லூரி, வவுனியா பூந்தோட்டம் தமிழ் மகா வித்தியாலயம், ஓமந்தை மத்திய கல்லூரி போன்ற பல சிறப்பான பெயர் பெற்ற பாடசாலைகள் அமைந்துள்ளது.

இது தவிர்ந்து வவுனியா தொழில் நுட்பக் கல்லூரியானது வவுனியா மன்னார் வீதியில் ஏறத்தாழ 5 கிமீ தொலைவில் அமைந்துள்ளது. இதை விட வவுனியா பூந்தோட்டத்தில் தேசிய கல்வியியல் கல்லூரி, ஏ9 வீதி தாண்டிக்குளம் என்ற இடத்தில் விவசாயக் கல்லூரி அமைந்துள்ளது. இந்தக் கல்லூரி, 1989 ஆம் ஆண்டு வடகிழக்கு மாகாணத்தில், விவசாய டிப்ளோமா படிப்பை வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டது.

## கோவில்கள்

வவுனியாவைப் பொறுத்த வரைக்கும் இங்கு இந்துக்களே அதிகமாக வாழ்வதால் இங்கு இந்து ஆலயங்களே அதிகளவில் காணப்படுகின்றன. குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலயம், வவுனியா கோவில்குளம் சிவன் ஆலயம், பூந்தோட்டம் லக்ஷ்மி சமேத நரசிங்கர் ஆலயம், வவுனியா கோவில்குளம் மகாவிஷ்ணு கோயில், குருமன்காடு காளிகோயில், வவுனியா நகர ஶ்ரீ கந்தசாமி ஆலயம், சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயம், சிதம்பரபுரம் பழனி மலை முருகன் ஆலயம், வெளிக்குளம் ஶ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், சமளன்குளம் கல்லுமலை பிள்ளையார் ஆலயம், சமளன்குளம் ஶ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், ஶ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் தெற்கிலுப்பைக்குளம், ஶ்ரீ நரசிம்மர் ஆலயம் தெற்கிலுப்பைக்குளம், தாண்டிக்குளம் ஐயனார் கோவில், தாண்டிக்குளம் முருகன் ஆலயம், ஆகிய பல இந்து ஆலயங்கள் இங்கு அமையப்பெற்றிருப்பதைக் காணலாம்..


கிறிஸ்தவர்களுக்கென கல்வாரி (இயேசு பகவானின் அவதாரங்களை உள்ளடக்கிய சிற்பங்கள் உள்ளது), இறம்பைக்குளம் புனித அந்தோனியார் தேவாலயம், புனித செபஸ்ரியார் தேவாலயம் தெற்கிலுப்பைக்குளம், தச்சன்குளம குருசாண்டவர் தேவாலயம், உக்குளாம் குளம் ஜெகோவாவின் சாட்சிகளின் ராஜ்ஜிய மன்றம் ஆகிய கிறிஸ்தவ தேவாலயங்களும் அமையப் பெற்றுள்ளன.

வவுனியாவில் முஸ்லிம்களும் செறிந்து வாழ்கின்ற படியால் அவர்களது வழிபாட்டுக்கென நகரில் உள்ள பெரிய பள்ளிவாசல், மதீனாநகர் பள்ளிவாசல், பட்டானிச்சூர் பள்ளிவாசல் என பல


தொடர்ச்சி அடுத்தபக்கம்...





யாழ். கோண்டாவில் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி 2017நிகழ்வு நேற்று (14.02.2017) செவ்வாய்க்கிழமை காலை கல்லூரியின் அதிபர் திரு. மோகநாதன் அவர்களின் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.




மன்னார் மாவட்ட மடு கல்வி வலயத்திற்குட்பட்ட பாலையடிப்புதுக்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் 2017 ஆம் ஆண்டிற்கான செயற்பட்டு மகிழ்வோம் வருடாந்த விளையாட்டு விழா கடந்த வாரம் பாடசாலை மைதானத்தில் அதிபர் எப்.எக்ஸ்.அன்ரன் சேவியர் அவர்களது தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.




பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஏற்பாட்டில் யாழ் மாவட்ட தொண்டராசிரியர்களுக்கும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று அண்மையில் யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கலை கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

தமது நிலங்களை விடுவிக்க கோரி போராட்டம் நடத்திவரும் கேப்பாபிலவு மக்களின் போராட்ட களத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கடந்த வாரம் விஜயம் செய்திருந்தார். போராட்டத்தில் ஈடுபடும் மக்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். வடமாகாணசபை உறுப்பினர் கந்தையா சிவநேசனும் உடன் சென்றிருந்தார்.




பள்ளிவாசல்கள் அமைந்துள்ளன.

### போக்குவரத்து

வவுனியாவினூடான தொடருந்து சேவைகள் பளை மற்றும் யாழ்ப்பாணம் முதல் கொழும்பு வரை நடைபெறுகின்றன. யாழ்ப்பாணத்தில் இருந்து பேருந்து சேவைகள் வவுனியா ஊடாக கொழும்பு மற்றும் பிற நகரங்களுக்கு அடிக்கடி செல்கின்றன.

### சந்தை

வவுனியா நகரில் அமைந்துள்ள பெரிய சந்தை மற்றும் சிறிய சந்தையில் அதிகளவான மரக்கறி வியாபாரம் அதிகமாக நடைபெறுவதோடு மேலதிகமாக தம்புள்ளையில் இருந்தும் இங்கு மரக்கறிகள் கொண்டு வரப்படுகின்றது. அத்துடன் வவுனியா வடக்கின் பிரதான நுழைவாயிலாக இருப்பதனால் வடக்கிற்கான பொருளாதார மத்திய நிலையம் வவுனியாவில் அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றது.

### தொழில்

வவுனியாவில் அதிகமாக குளங்கள் காணப்படுவதால் இம் மக்களால் விவசாயம் மற்றும் தோட்டங்கள் அதிகளவில் ஈடுபடுகின்றனர், அத்துடன் இங்கு வாழும் பலர் அரச ஊழியம் செய்வதோடு வவுனியா இராசேந்திரன் குளம், ஏ9 வீதி தேக்கவத்தை ஆகிவற்றில் அமைந்துள்ள ஆடைத்தொழிற்சாலைகளிலும் அதிகளவானோர் வேலையில் ஈடுபடுகின்றனர்.

### வைத்தியசாலை

வடக்கில் உள்ள வைத்தியசாலைகளில் மிகப்பெரிய வைத்தியசாலையில் யாழ்ப்பாணத்திற்கு அடுத்ததாக வவுனியா பொது வைத்தியசாலையே உள்ளது. அத்துடன் சேவை மற்றும் புது கட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றது.

### நகர வர்த்தகம்

வவுனியா நகரின் வர்த்தகத்தில் தமிழ், முஸ்லீம் இன மக்கள் இருவரும் ஈடுபடுவதுடன், இங்கு பெரும்பாலும் ஆடை விற்பனை நிலையங்கள் அதிகளவு காணப்படுகின்றது. அத்துடன் நகரின் வர்த்தகத்தின் பெரும்பகுதி முஸ்லீம்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. 1980களில் வவுனியா நகரில் "சுத்தானந்த பவன்" என்ற சைவ உணவகமே அதிக வாடிக்கையாளர்களைக் கொண்ட உணவகமாக விளங்கியது. சைவ உணவுக்கு உரிய ஒருதரம் அவ் உணவகத்தில்காணப்பட்டது. தற்போது "றோயல் கார்டின்" ஹோட்டலே வவுனியா மக்களைப் பெரிதும் கவர்ந்த உணவகமாகப் பெயர் பெற்றுள்ளது.

### வரலாறு

கடந்த 30 வருடங்களாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது 1990ம் ஆண்டு மற்றும் 1999ம் ஆண்டு காலப்பகுதியிலும் வவுனியா மக்கள் இடம் பெயர்ந்து அயல் மாவட்டங்கள் மற்றும் இந்தியாவிற்கும் சென்றனர். அதன் பின்னரான காலப்பகுதியில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி பிரதேசத்தின் ஏனைய மாவட்டங்களை சேர்ந்த மக்கள் இடம் பெயர்ந்து இங்கு தஞ்சமடைந்ததுடன். இறுதிபோரின் பின் செட்டிக்குளத்தில் பல முகாம்களை இடம்பெயர்ந்த மக்களிற்காக அமைக்கப் பட்டிருந்தது. குறிப்பிடத்தக்கது.

# ஆயிரம் சூரியன் ஆயிரம் சந்திரன் ஒரே ஒரு பூமி

ம.செந்தமிழன்

'உவர் நிலம்' எனக் கேள்விப் பட்டிருப்பீர்கள். இதற்கு 'விளைச் சலுக்கு ஆகாத நிலம்' எனப் பொருள். உவர்ப்புச் சுவையுடைய நிலம் பயிர் முளைக்கத் தகுதியற்றது. ஏனெனில் உவர்ப்புச் சுவையில் உயிர்கள் வாழ இயலாது. இவ்வாறான நிலத்தில் வெண்மைப் படலம் படிந்திருக்கும். புல் கூட செழிப்பாக வளராது. இந்த நிலத்தடி நீரும் உப்புச் சுவையுடன் இருக்கும். இந்த நிலம் மீண்டும் வளமாகுமா? என்ற கேள்விக்கு விடை தேடினால் ஓர் உண்மையைக் கண்டறியலாம்.

உவர் நிலத்தில் மழைநீரைச் சேமித்தால் நிலம் வளம் பெறும். சிறு குட்டைகளை வெட்டி மழைநீரைத் தேக்கி வைத்து நிலத்தில் பாய்ச்சினால் உவர் நிலம் விரைவிலேயே பயிர் வளரும் நிலமாக மாறும். மழைநீருடன் மாட்டுச் சாணத்தைக் கரைத்தால் வளம் கூடும். இந்தச் சாணத்துடன் நாட்டுச் சர்க்கரை, அழுகிய பழங்கள் ஆகியவற்றை ஊறவைத்து நீருடன் சேர்த்துப் பாய்ச்சினால் இன்னும் விரைவாக வளம் திரும்பும்.


வானில் இருந்து இறங்கும் மழைநீர்தான் பூமிக்கான அமுதம். எல்லா உயிர்களும் மழைநீரின் வழியாகத்தான் இறங்கி வருகின்றன. ஐம்பூதத் தன்மையில் நீர் என்னும் குணத்தை முழுமையாகக் கொண்டது மழைநீர் மட்டும்தான். நிலத்தடி நீர் இவ்வாறான சிறப்பு மிக்கது அல்ல. அதில் உவர்ப்புச் சுவை கூடுதலாக இருக்கும். ஆழச் செல்லச் செல்ல உவர்ப்பின் தன்மை கூடும். ஆகவேதான் நிலத்தை வளப்படுத்த மழைநீர் மருந்தாகின்றது.

சாணம் தனக்குள் கோடானுகோடி நுண்ணுயிர்களைத் தக்க வைக்கின்றது. மழைநீருடன் சாணத்தைக் கரைத்தால் அந்த நுண்ணுயிர்க் கூட்டம் நிலத்தில் பாய்ந்து வாழத் தொடங்கும். அது வாழ்வதற்கான உயிர்ச் சூழலை மழைநீர் நிலத்தில் உருவாக்கும். மழைநீரின் ஒவ்வொரு துளியும் இந்த நிலத்தின் பாறைகளைக் காட்டிலும் ஆற்றல் மிக்கது. வளம் இழந்த நிலத்தின் துகள்களுக்குள் மழைநீர் நுழைந்து தனக்குள் இருக்கும் உயிராற்றலை வாரித் தருகின்றது. சாணத்தின் நுண்ணுயிரிகள் நிலத்திற்கே உரித்தானவை. நிலத்தின் தாவரங்கள் தானே சாணமாக மாறியுள்ளன. அந்தச் சாணம் புல் பூண்டுகளுக்கான நுண்ணுயிர்களைத்தானே வைத்திருக்கும்.

சர்க்கரை அல்லது பழங்களில் உள்ள இனிப்புச் சுவைதான் நுண்ணுயிரிகள் பல்கிப் பெருகுவதற்கான உணவு. எந்த அளவுக்கு உணவு இருக்கின்றதோ அந்த அளவுக்கு நுண்ணுயிரிகள் பெருகும். இந்தச் செயல்முறையைத் தொடர்ந்து கடைப்பிடித்தால் எல்லா உவர் நிலங்களும் வளம் பெறும்.

இது இயற்கையின் விதிகளுக்கு ஏற்ப நிலத்தை வளமாக்கும் முறை. இதே நிலத்தில் வேதி உரங்களைக் கொட்டி சில ஆண்டுகளுக்கு மட்டும் விளைச்சல் எடுப்பது நவீன முறை. நமது வழியில் கிடைக்கும் தீர்வு நிரந்தரப் பலன் தரும். நவீன வழித் தீர்வு தற்காலிகமான சுகம் தரும். பின்னர் 'இனி எல்லாம் கடவுள் செயல்' என மேலே கை காட்டும்.

உவர்ப்புச் சுவை மிகுந்த உடல் அல்லது உப்புத் தன்மை அதிகமாகிவிட்ட உடல் இவ்வாறான உவர் நிலம் போன்றதுதான். இந்த நிலத்தில் வேதி மருந்துகளை மட்டுமே கொட்டிக் கொண்டிருந்தால் அதன் வளம் முழுமையாக மீட்சி அடையாது. மாறாக காலப்போக்கில் உடலின் எதிர்ப்பு ஆற்றல் குன்றும். உடலின் உவர்ப்புச் சுவை அதிகரித்திருந்தால் முதலில் உணவுப் பழக்கத்தில் அக்கறை வேண்டும். வேதி மருந்துகளைக் கொண்டு உப்புத் தன்மையைச் சமாளிக்கும் சிந்தனையில் இருந்து வெளியேற வேண்டும். திடீர் தாக்குதல் போன்ற நிகழ்வுகளுக்கு இந்த மருந்துகளைத் தற்காலிகமாகக் கொள்வதை ஒப்புக் கொள்ளலாம். ஆனால் இந்த மருந்துகள் வழியாகவே முழு நலம் பெற வேண்டும் என்று எண்ணினால் அதற்கான வாய்ப்பு இல்லை.



மரபு மருத்துவக் கொள்கைகளைப் புரிந்து கொண்டு கடைப்பிடிப்போருக்கு இவ்வாறான திடீர் தாக்குதல்கள் வருவது இல்லை. அப்படியே வந்தாலும் அவர்களுக்கு எந்த வேதி மருந்தும் தேவை இல்லை. அவர்களது உடலில் இயற்கை ஆற்றல்களின் செயல்பாடு சிறப்பாகவே இருக்கின்றது. அது தன்னைத்தானே சீராக்கிக் கொள்ளும். அதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களைச் செய்தால் போதும்.

உவர்ப்புச் சுவை அல்லது உப்பு மிகுந்த மனிதர்கள் படிப்படியாக வேதி மருந்துகளில் இருந்து வெளியேற வேண்டும். பசிக்கும் போது மட்டும் உணவு, தாகம் எடுத்தால் மட்டும் நீர் என்ற இயற்கை முறையைக் கடைப்பிடித்தல் வேண்டும். இரவுகளில் விழிக்காமல் இளைப்பாற வேண்டும்.



இவ்வாறானவர்களுக்குக் கஞ்சி வகை உணவுகள் மிகவும் பொருத்தமானவை. காலைப் பசிக்குக் கஞ்சி எனும் வழக்கம் நல்ல மாற்றத்தைத் தரும். அரிசியைத் தவிர்த்து சிறு தானியங்களில் கஞ்சி வைப்பது கூடுதல் நன்மையானது. வரகு, சாமை,திணை,குதிரைவாலி போன்றவற்றில் ஒரு நாளைக்கு ஒன்று என்ற வகையில் கஞ்சி அருந்தலாம். இவை அனைத்தும் ஐம்பூதங்களில் திடமான நிலத்தின் தன்மைக்கு நெருக்கமானவை. இந்த உணவுகளில் உள்ள திடத்தன்மைதான் உவர்ப்பு மிகுந்த உடலில் உறுதி தரும். ஆனால் இதே சிறு தானியங்களைக் கஞ்சியாக அல்லாமல் வேறு வகைகளில் உண்ணும் போது செரிமானத்தில் கூடுதலான ஆற்றல் செலவாகும்.

சிறு தானியக் கஞ்சிகளுக்கு துவையல் வகைகளைத் தொட்டுக் கொள்ளலாம். கறிவேப்பிலைத் துவையல், வறுத்த துவரம் பருப்பு துவையல் ஆகியன சிறந்தவை. கறிவேப்பிலையின் கசப்புச் சுவை வெப்பத்தைத் தூண்டும். வறுக்கப்பட்ட துவரம் பருப்பில் காற்று குறைவாகவும், வெப்பமும் நிலமும் சீராகவும் இருக்கும். இதனால் உடலின் உள்ளே சிறு நல்ல மாற்றங்கள் நிகழும். ஒன்று உடலுக்குள் சிறு தானியங்களின் செறிவான ஆற்றல் செல்கின்றது (நிலம்). அடுத்ததாக இந்தத் துவையல்களின் வழியாக இரு வகையான இயக்கச் சத்துக்கள் சீரான அளவில் கிடைக்கின்றன (வெப்பம், காற்று).

**வாழைத் தண்டுச் சாறு ஆற்றல் வாய்ந்த மருந்து. இதை அரைகுறையாகப் புரிந்து கொண்ட பலர் தம் போக்கில் வாழைத் தண்டுச் சாற்றைப் பருகுகின்றனர். இது மிகவும் தவறான செயல்.**

பகல் உணவு அரிசிச் சோறாக இருக்கலாம். அன்றாடம் ஒரேவகை அரிசி என இல்லாமல் பல வகையான மரபு அரிசிகளை உணவில் சேர்ப்பது நல்லது. குழம்புக்குப் பதிலாக ஏதேனும் ரசம் ஊற்றிக் கொள்வது சிறப்பான முன்னேற்றம் அளிக்கும். குறைந்தது பதினைந்து நாட்களுக்கு ஏதேனும் ரசம் வைத்து உண்ணலாம். வாழைப்பூக் கூட்டு நல்ல மருந்துணவு. மற்ற காய்களையும் கூட்டாகச் சேர்க்கலாம். எண்ணெயில் வறுத்தவை, பொரித்தவை போன்றவற்றைத் தவிர்ப்பது முக்கியமானது.

மாலைநேரத்தில் முருங்கைக் கீரை ஒரு பிடி, வாழைத்தண்டு ஒரு கை சேர்த்து ரசம் வைத்துப் பருகுவது நல்லது. இந்த ரசத்தைத் தொடர்ந்து ஒரு வாரத்துக்கு மாலை வேளையில் பருகலாம். அடுத்த வாரம் முருங்கைக் கீரை ஒரு பிடி, வாழைப்பூ ஒரு கை சேர்த்து ரசம் வைத்துப் பருக வேண்டும். முருங்கைக் கீரையில் கசப்பு, துவர்ப்பு இவற்றுடன் சிறிது காரமும் இணைந்திருக்கும். காற்று, வெப்பம், நீர் ஆகிய மூன்று பூதங்களையும் முருங்கை இணைக்கும் விதம் மிக அற்புதமானது. ஆகவே முருங்கைக் கீரை ரசம் ஈடு இணையற்ற மருந்துணவு.

வாழை ஒரு நீர்த் தாவரம். வாழையில் உள்ள நீரில் காரச் சுவை கலந்துள்ளது. காரம் வெப்பத்தின் வெளிப்பாடு. நீரும் வெப்பமும் இணைந்திருக்கும் எந்த உணவும் சிறப்பான உணவே. வாழைத் தண்டின் நீர் உடலுக்குள் செல்லும் போது உடலின் உவர்ப்புத் தன்மை வெளியேறி விடும்.

வாழைத் தண்டுச் சாறு ஆற்றல் வாய்ந்த மருந்து. இதை அரைகுறையாகப் புரிந்து கொண்ட பலர் தம் போக்கில் வாழைத்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

ஸ்ரீதர் சுவாமிநாதன்



ரிக்ஷாக்காரன் படப்பிடிப்பில் பொதுமக்களுடன் எம்.ஜி.ஆர்.



எம்.ஜி.ஆர் 100 நெடுந்தொடர் 43

# மழையில் உதவிய கரங்கள்

**எம்.ஜி.ஆர்.** புகைப் படங்கள், ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்ட ஆட்டோக்கள், சைக்கிள் ரிக்ஷாக்களை பெருமளவில் இன்றும் காணலாம். அந்த அளவுக்கு எம்.ஜி.ஆர் மீது ரிக்ஷாக்காரர்கள் அன்பைக் காட்டுகிறார்கள் என்றால் அதற்கு காரணம், அவர்களின் நலனில் எம்.ஜி.ஆர் அக்கறை காட்டியதுதான்.

சென்னையில் கடந்த டிசம்பர் மாதம் பெய்த பெருமழையையும் ஊரே வெள்ளக் காடானதையும் யாரும் மறந்திருக்க முடியாது. கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத அள்வுக்கு மழை கொட்டித் தீர்த்தது. 30 ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் எங்கே கடும் மழை என்றாலும் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க முதலில் நீண்ட கரங்கள் எம்.ஜி.ஆருடையவை.

சென்னையில் மழை பாதிப்பு நேரங்களில் எம்.ஜி.ஆரின் வீட்டில் பெரிய, பெரிய அண்டாக்களில் சோறு வடிக்கப்படும். பொட்டலங்களாக கட்டி கொடுக்கப்பட்டால் அவை சூடு ஆறி விடும் என்பதால், பாதிக்கப்பட்ட மக்கள் தங்கி இருக்கும் இடத்துக்கு வேன்களிலும் கார்களிலும் உணவு எடுத்துச் செல்லப்பட்டு சூடாக வழங்கப்படும். சில நேரங்களில் எம்.ஜி.ஆரே சென்று பசியோடு இருக்கும் மக்களுக்கு உணவு பரிமாறியதும் உண்டு.

ஒருமுறை, வாஹினி ஸ்டுடியோவில் படப்பிடிப்பில் கலந்து கொள்வதற்காக ஆற்காடு சாலையில் காரில் எம்.ஜி.ஆர் சென்று கொண்டிருந்தார். இப்போது இருக்கும் கோடம்பாக்கம் மேம்பாலம் அப்போது கிடையாது. ரயில்வே கேட்டில் நட்சத்திரங்களின் கார்கள் காத்து நிற்கும். அவர்களை பார்ப்பதற்காகவே எப்போதும் அங்கு ஒரு கூட்டம் இருக்கும்.

கோடம்பாக்கம் ரயில்வே கேட்டில் எம்.ஜி.ஆரின் கார் காத்திருந்தது. அப்போது, நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. ரிக் ஷாக்காரர் ஒருவர் மழையில் நனைந்து கொண்டே முகத்தில் வழியும் தண்ணீரை துடைத்தபடி இருந்தார். இது எம்.ஜி.ஆரை வெகுவாக பாதித்தது.

தனது அண்ணன் சக்ரபாணியிடம் ரிக் ஷாக்காரரின் நிலைமையைச் சொல்லி எம்.ஜி.ஆர் வருத்தப்பட்டார். சக்ரபாணியும் பரிதாபப்பட்டார். அவர் இயல்பாகவே கொஞ்சம் வேடிக்கையாக பேசக்கூடியவர்.

"பாவம்தான். ஆனால், அதற்காக ரிக் ஷாக்காரர்கள் ரெயின் கோட் போட்டுக் கொண்டா ரிக் ஷாவை ஓட்டுவார்கள்?" என்று கேட்டார்.

மழைக்கு பதில் சொல்வது போல, எம்.ஜி.ஆரின் மூளையில் மின்னல் அடித்தது. "ஏன் கூடாது?" என்று எம்.ஜி.ஆர் கேட்ட தருணம்தான், ரிக் ஷாக்காரர்களுக்கு இலவசமாக அவர் ரெயின் கோட் வழங்குவதற்கான திட்டம் உதித்த நேரம். உடனடியாக, எம்.ஜி.ஆர் செயலில் இறங்கிவிட்டார். ஆர்.எம்.வீரப்பனை அழைத்தார். "சென்னையில் எவ்வளவு ரிக் ஷாக்காரர்கள் இருப்பார்கள்? அவ்வளவு பேருக்கும் ரெயின் கோட் தைக்க எவ்வளவு செலவாகும்? விசாரித்து சொல்லுங்கள்" என்று கூறினார்.

தொப்பியுடன் கூடிய பிளாஸ்டிக் மழைக் கோட்டுகள் வாங்கப்பட்டன. நுங்கம்பாக்கம் லேக் ஏரியா பகுதியில் பேரறிஞர் அண்ணா தலைமையில் விழா. 5,000க்கும் மேற்பட்ட ரிக் ஷாக் காரர்களுக்கு எம்.ஜி.ஆர் செலவில் ரெயின் கோட்டுகள் வழங்கப்பட்டன. அண்ணாவின் அருகே புன்னகையுடன் நின்ற எம்.ஜி.ஆரை ரிக் ஷா ஓட்டுநர்கள் நன்றியுடன் வணங்கினர். நன்றியை செயலிலும் காட்டினர். தங்கள் ரிக் ஷாக்களில் எம்.ஜி.ஆரின் படங்களையும் போஸ்டர்களையும் ஒட்டினர்.

1969ம் ஆண்டில் எம்.ஜி.ஆர் நடித்த 'அடிமைப் பெண்' படத்துக்கு அடுத்தபடியாக பெரிய வெற்றி பெற்ற படம் 'நம்நாடு'. இப்படத்தில் தனது அண்ணனாக நடிக்கும் டி.கே.பகவதியின் முதலாளியாக வரும் எஸ்.வி.ரங்கா ராவின் தவறுகளை எம்.ஜி.ஆர் கண்டிப்பார். இதனால், கோபமடைந்து எம்.ஜி.ஆரை வீட்டை விட்டு வெளியேறுமாறு டி.கே.பகவதி கூறுவார். எம்.ஜி.ஆரும் வீட்டில் இருந்து வெளியேறி சேரிப் பகுதியில் தங்கியிருப்பார்.

நடிகைகள் குட்டி பத்மினியும் தேவியும் டி.கே.பகவதியின் குழந்தைகளாக நடித்திருப்பார்கள். சித்தப்பாவான எம்.ஜி.ஆரைத் தேடி அவர் இருக்கும் வீட்டுக்கு இரு குழந்தைகளும் வந்து விடும். அவர்களிடம், "எப்படி இங்கே வந்தீர்கள்?" என்று எம்.ஜி.ஆர் கேட்பார்.

"ரிக் ஷாக்காரரிடம் உங்கள் பெயரை சொன்னோம். அவர் இங்கே கொண்டு வந்து விட்டார்" என்று குட்டி பத்மினி சொல்வார். எம்.ஜி.ஆர் பெயரை சொன்னாலே ரிக் ஷாக்காரர்களுக்கு அவர் இருக்கும் இடம் தெரியும் என்பதைப் போல இந்த வசனம் அமைந்திருக்கும்.

இதைவிட முக்கியமாக, எம்.ஜி.ஆர் மீது ரிக் ஷாக்காரர்களுக்கு இருக்கும் அளவற்ற அன்பையும் மரியாதையையும் வெளிப்படுத்துவது போல, குழந்தையாக நடிக்கும் தேவி, எம்.ஜி.ஆரிடம் சொல்வார்...

**"காசு கூட வாங்கலே சித்தப்பா"**

எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்தபோது, மழை காரணமாக சென்னையில் ஏற்படும் வெள்ளப் பெருக்கை தடுக்க கூவம் நதியின் கரைகளை உயர்த்தி, அதன் ஆழத்தை அதிகப்படுத்தி தூர்வார ஏற்பாடுகள் செய்தார். மழையால் வெள்ளம் ஏற்பட்ட போது முழங்கால் அளவு தண்ணீரில் நடந்து சென்று பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைத்தார். **தொடரும்..**





'நம்நாடு' படத்தில் எம்.ஜி.ஆர்., எஸ்.வி.ரங்காராவ். வெள்ளத்தில் முழங்கால் அளவு நீரில் நின்றபடி மூதாட்டி கூறுவதை முதல்வர் எம்.ஜி.ஆர். கவனமுடன் கேட்கிறார்.



போலீஸ் உயர் அதிகாரிகளுடன் சென்று மழை பாதிப்புகளை முதல்வர் எம்.ஜி.ஆர். பார்வையிடுகிறார்.

---

தண்டுச் சாற்றைப் பருகுகின்றனர். இது மிகவும் தவறான செயல். தேவை இல்லாமல் அல்லது அளவுக்கு அதிகமாக வாழைத் தண்டுச் சாறு உடலுக்குள் சென்றால் உடலில் உள்ள உவர்ப்புத் தன்மையைக் கூடுதலாக வெளியேற்றிவிடும். இதன் விளைவாக உடல் நடுக்கம், பதற்றம், சோர்வு போன்ற தொல்லைகள் ஏற்படும். இவ்வாறான சிக்கல்களைத் தவிர்க்கத்தான் முருங்கைக் கீரைவாழைத் தண்டு ரசம் பருகும் முறையைப் பரிந்துரைக்கின்றேன். இவ்வாறாக ரசம் வைத்துப் பருகினால் அதில் பாதி உணவு, மீதி மருந்து. இது சிக்கல் இல்லாத எளிய வாழ்க்கை முறையாக மாறிவிடும்.

இரவு உணவில் ஆவியில் வெந்தவை (இட்லி, இடியப்பம், பிட்டு) இருந்தால் சிறப்பு. இவ்வாறான உணவுப் பழக்கங்களைக் கடைப்பிடித்தால் நாளடைவில் உடலின் உவர்ப்புத் தன்மை குறையும். ரசம் வகைகளில் சேர்க்கப்படும் மிளகு, பூண்டு, சீரகம் ஆகிய மூன்றும் உடலில் சேரும் போது உவர்ப்பின் தீவிரம் படிப்படியாகக் குறையும். உவர்ப்புச் சுவை மிகுந்த காரணத்தால் சிறுநீர்ப் போக்கு இருந்தால் ஆவாரைப்பூ தேநீர் பருகுவது நல்லது.

உடலில் உருவாகும் எல்லாச் சிக்கல்களையும் விட சிறுநீரகச் சிக்கலில் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டும். ஏனெனில் அது உவர்ப்பு என்னும் வலிமையான சுவை தொடர்பானது. நீங்கள் எளிமையாகப் புரிந்து கொள்ள ஒரு குறிப்பைத் தருகின்றேன்.

உவர்ப்புச் சுவையில் மற்ற எல்லா சுவைகளும் உள்ளன. ஆகவே உப்பு மிகுந்த உடல் மற்ற சுவைகளை நிராகரிக்கும். நாம் செய்ய வேண்டியது எல்லாம் படிப்படியாக மற்ற சுவைகளை உடலுக்குள் அனுப்புவதுதான். இந்தச் செயல்முறையைப் புரிந்து கொண்டால் போதும். இதற்கான உணவுப் பரிந்துரைகளைத்தான் மேலே குறிப்பிட்டுள்ளேன்.

சிறுநீரகக் கற்களால் அவ்வப்போது வலி வரும் போதே எச்சரிக்கையாகி விட வேண்டும். ஒருமுறை வலி வந்தாலும் மேற்கண்ட உணவு முறைகளைக் கடைப்பிடித்தால் சிறுநீரகக் கற்கள் இயற்கையான முறையில் சிறிது சிறிதாகக் கரைந்து வெளியேறும். 'உடலில் உப்பு சேரவே கூடாது' எனப் புரிந்து கொள்ளாதீர்கள். உப்பு இல்லாமல் உடம்பு இல்லை. உப்புத் தன்மை உடலில் சேர்ந்து போகாத வகையில் வாழ்வியலை வகுத்துக் கொள்ள வேண்டும்.

வாழைச் சாறு நச்சு நீக்கும் ஆற்றல் கொண்டது. 'வாழைமரமே ஒரு நச்சு நீக்கிதான்' என்று நான் வியப்பது உண்டு. கழுத்து மட்டும் வெளியே தெரியும்படி வாழை இலைக்குள் படுத்து உடலைச் சுற்றி நார் கொண்டு கட்டிவிட வேண்டும். காலை இளவெயிலில் இவ்வாறு சில நிமிடங்கள் படுத்திருந்தால் உடல் முழுவதும் வியர்வையில் நனையும். வாழை இலையின் நீர்மம் வெளியேறி உடலுக்குள் இருக்கும் நச்சு நீரை உறிஞ்சி எடுத்துவிடும். உடலில் உள்ள உவர்ப்புத் தன்மையை வெளியேற்ற இது சிறந்த முறை. இது 'வாழை இலைக் குளியல்' எனப்படும். இந்தக் குளியலின் போது இயன்ற வரை ஆடைகளைக் களைந்து விடுவது நல்லது. பெண்கள் அதற்கான சூழலை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அல்லது சங்கடம் இல்லாத அளவில் ஆடை அணியலாம்.

பூமியின் பெரும்பங்கு கடல்நீர் தான். அந்தக் கடல்நீரில் தான் பூமியின் பெரும்பாலான உயிரினங்கள் வாழ்கின்றன. எந்த அளவுக்கு வேதிப் பொருட்களைத் தவிர்க்கின்றோமோ அந்த அளவுக்கு கடலும் நன்றாக இருக்கும்... உடலும் உற்சாகத்துடன் இருக்கும். மீறினால் இரண்டும் சீறும்.



## ஜி.விக்கு வந்த சோதனை!

ஜி.வி.பிரகாஷ்குமாரின் மார்க்கெட் ஆரம்பத்தில் நன்றாகத்தான் இருந்தது. ஆரம்பத்தில் வெற்றிப்படங்களை கொடுத்து வந்தார். பின்னர், எல்லாமே தோல்விப்படங்கள்தான். பென்சில், எனக்கு இன்னொரு பேர் இருக்கு, கடவுள் இருக்கான் குமாரு என எல்லாம் வசூல் ரீதியாக படுத்துவிட்டன. இந்த இக்கட்டான நிலையில், விரைவில் வரவுள்ள புரூஸ்லீ படத்தையே ஜி.வி எதிர்பார்த்துள்ளார். இதில் ஜி.விக்கு ஜோடி தெலுங்கு நடிகை கீர்த்தி கர்பந்தா. படம் ரிலீசுக்கு தயாராகவே உள்ளது. ஆனால் விநியோகஸ்தர்களிற்கு பெரும் தொகை செட்டில்மெண்ட் செய்ய வேண்டியுள்ளது. அது பட ரிலீசை பாதிக்குமா என்று தயாரிப்பாளர்கள் யோசித்து கொண்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் பொங்கல் ரிலீஸ் என்றுதான் கூறப்பட்டது. ஆனால் பெப்ரவரி 24 அல்லது மார்ச் 3 தான் வெளியாகுமென கூறப்படுகிறது.

## வயதானாவர்களிற்கும் ஓகே சொல்லும் காஜல்!

அஜித்தின் விவேகம் படத்தில் ஜோடி போட்டவர் காஜல். அதையடுத்து விஜய் படத்திலும் ஒப்பந்தமாகியுள்ளார். சில நடிகைகள் இளவயது நடிகர், வயதான நடிகர் என தரம் பிரித்து நடிப்பார்கள். வயதானவர்களுடன் ஜோடி சேர தயங்குவார்கள். ஆனால் காஜல் அப்படியல்ல. வயதானவர்களுடன் ஜோடி போடவும் தயார். ஆனால் சம்பளத்தை அதிகரித்துவிடுவார். தெலுங்கில் சிரஞ்சீவி நடித்த கைதி நம்பர் 150 படத்தில் அவருடன் ஜோடி போட்டார். வழக்கமாக ஒன்றேகால் கோடி சம்பளம் வாங்குபவர், வயதான சிரஞ்சீவியுடன் ஜோடி சேர ஒன்றே முக்கால் கோடி வாங்கியுள்ளார். சீனியர் நடிகர்களின் படங்களில் நடிக்க இதே சம்பளத்தைதான் கேட்கிறாராம். விரைவில் ஆரம்பிக்கவுள்ள சீனியர் நடிகரொருவரின் படத்திலும் ஒப்பந்தமாகியுள்ளார். அதற்கும் ஒன்றே முக்கால் கோடிதானாம் சம்பளம்.

## குறிப்பெடுக்கும் நடிகர்!

சினிமாவில் நீண்டகாலம் போராடி வெற்றிபெற்றவர்களில் யோகி பாபுவும் ஒருவர். ஆரம்பத்தில் ஜூனியர் ஆர்ட்டிஸ்றாக நடித்தார். பின்னர் சின்னசின்ன வேடங்களில் நடித்தார். இப்போது குறிப்பிடும்படியான காமெடியன்களில் ஒருவராகிவிட்டார். படப்பிடிப்பிற்காக அவுட்டோர் செல்லும்போது அங்கு வரும் ரசிகர்கள் ஹீரோக்களுடன் செல்பி எடுப்பதுடன், யோகி பாபுவுடனும் செல்பி எடுக்கிறார்கள். அத்தோடு அவர் நடித்த காமெடி காட்சிகளையும் சொல்லி உற்சாகப்படுத்துகிறார்களாம். அப்படியானவர்களிடம் பேசி, இன்னும் என்னவிதமான வேடங்களில் நடிக்க விரும்புகிறார்கள் என்ற விபரங்களையும் குறித்து வைத்து கொள்கிறாராம்.

## இவருக்கும் ஜோடியாவாரா லட்சுமி மேனன்?

தமன்னாவுடன் பேய் படத்தில் நடித்த பிரபுதேவா அடுத்து காமெடி படத்தில் நடிக்கிறார். இதற்கு யங் மங் சங் என பெயரிடப்பட்டுள்ளது. 1970 - 1987 வரை நடந்த சரித்திர பின்னணி கொண்ட சம்பவங்களை மையமாக வைத்து கதை உருவாக்கப்பட்டுள்ளது. ஆக்சன் காமெடி படம். குங்பூ மாஸ்ரராக பிரபுதேவா நடிக்கிறார். பிரபுதேவாவின் தந்தையாக நடிப்பவர் இயக்குனர் தங்கர்பச்சான். படத்திற்கான திரைக்கதையை அமைக்க இரண்டு வருடமாகியதாக இயக்குனர் எம்.எஸ்.அர்ஜூன் கூறியுள்ளார். கதையை ஒன்றரை மணி நேரத்தில் பிரபுதேவாவிடம் கூறியதாகவும், கதையை கேட்டு ஒரு வாரத்தின் பின் நடிக்க சம்மதித்ததாகவும் கூறினார். இதில் பிரபுதேவாவின் ஜோடியாக லட்சுமி மேனனை நடிக்க வைக்க பேச்சு நடக்கிறது.

## கத்தி- ii

விஜய் நடித்த படங்களில் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் வெளியான துப்பாக்கி, கத்தி ஆகியவை முக்கியமான படங்கள். 100 நாள் ஓடியதுடன், வசூலிலும் முத்திரை பதித்தன. இதனால் முருகதாஸ் - விஜய் மீண்டும் இணைய வேண்டுமென ரசிகர்கள் விரும்பினார்கள். தெறி படத்தின் பின் அது நடக்குமென எதிர்பார்க்கப்பட, பரதன் படத்தில் கமிட் ஆனார் விஜய். அதேபோல மகேஷ்பாபு படத்தில் முருகதாஸ் இறங்கினார். எனினும், அட்லி இயக்கத்தில் நடித்துவரும் தனது 61வது படத்தின் பின் மீண்டும் முருகதாசுடன் விஜய் இணைவார் என தெரிகிறது. இரண்டாம் பாக படத்தில் நடிக்கும் ஆசை விஜய்க்கும் வந்துவிட, துப்பாக்கி 2 இல் இருவரும் இணையவுள்ளனராம்.



# டூரிங் டாக்கீஸ்

## டாப்ஸி பொலிஸி

நடிக்க வந்து பல வருடங்கள் ஆகியும் சொல்லிக்கொள்ளும் பட வாய்ப்புக்கள் இல்லாமலிருந்தார் டாப்ஸி. இந்தியில் அவர் நடித்த பிங்க் அந்த குறையை போக்கியது. இதையடுத்து பொதுநிகழ்ச்சிகளில் உற்சாகமாக கலந்து கொண்டு வருகிறார். ஜெய்பூரில் திட்டமிடப்பட்டிருந்த நிகழ்ச்சியொன்றிலும் கலந்துகொள்ள சம்மதித்திருந்தார். ஆனால் நிகழ்ச்சியை நடத்துபவர்கள் அழகு கிரீம் நிறுவனம் ஒன்று என்பதை அறிந்ததும் நிகழ்ச்சியை இரத்து செய்துவிட்டார். கிரீம் உபயோகித்தால் பெண்கள் அழகு அதிகரிக்கும் என இப்படியான நிறுவனங்கள் விளம்பரம் செய்வது வழக்கம். ஆனால் டாப்ஸி செயற்கை கிரீம்களிற்கு எதிரானவர். ஏற்கனவே இதற்காக குரல் கொடுத்துமிருக்கிறார். அதனால் நிகழ்ச்சியை இரத்து செய்தார்.

## இந்தி நடிகருடன் தமன்னா!

இந்தி நடிகர் சல்மான் கான் பல்வேறு நாடுகளிற்கும் சுற்றுப்பயணம் செய்து நிகழ்ச்சி நடத்த திட்டமிட்டுள்ளார். சோனாக்ஷி சின்ஹா இந்த சுற்றுப்பயணத்தில் இணைய சம்மதித்திருந்தார். பின்னர் ஏனோ விலகி விட்டார். இப்போது தமன்னாவிற்கு அந்த வாய்ப்பு வந்துள்ளது. வரும் ஏப்ரல் மாதம் இந்த பயணம் ஆரம்பிக்கிறது. பிரபுதேவா, பிபாஸாபாஸு, மனிஷாபால் உள்ளிட்ட நட்சத்திரங்கள் இதில் இணைகிறார்கள். மலேசியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து என பல நாடுகளிற்கு செல்லவுள்ளனர்.

## விக்ரம் 53

இப்போதெல்லாம் படத்தின் தலைப்பை உடனே அறிவிப்பதில்லை. முன்னர், பட பூஜை போடும்போதே பட தலைப்பை அறிவித்து விடுவார்கள். இப்போது பெர்ஸ்ற் லுக், டிசர் வெளியிடும் போதுதான் தலைப்பை அறிவிக்கிறார்கள். அதுவரை விஜய் 61, அஜித் 57 என்றுதான் அழைக்கிறார்கள். காரணம் கேட்டால், பெயர் பரிசீலனை நடக்கிறது என்கிறார்கள். இந்த விதியின்படி விக்ரமின் புதிய படம், விக்ரம் 53 என்றுதான் அழைக்கப்படுகிறது. இந்த படத்திற்கு கெட்ச் என ஏற்கனவே தலைப்பை யோசித்திருந்தனர். ஆனால் இந்த தலைப்பு எளிதில் மக்களிடம் செல்லாது என்பதால் யோசித்து வருகிறார்கள். விக்ரமின் இந்த பட தலைப்பும் பெர்ஸ்ற் லுக் சமயத்தில்தான் வெளியாகுமென தெரிகிறது.

# திரைப் பார்வை
## படையப்பா



நிலவன்

பொதுவாகவே ஒரு திரைப்படத்திற்கு முக்கியமானது கதை. அதைத் திரைக்கு ஏற்ற விதத்தில் கொண்டு வரும்போது அது திரைக்கதை ஆகின்றது. கதை எவ்வளவுதான் அருமையாக இருந்தாலும் திரைக்கதை சற்று சொதப்பி விட்டால் அந்தப் படம் நிச்சயம் தோல்விப் படம்தான். ஆனால் அதேசமயம் கதை ஒன்றுமே இல்லாமல் இருந்து திரைக்கதை அருமையாக இருந்து விட்டால் அந்தப் படம் நிச்சயம் வெற்றிப் படம்தான். அதுவும் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் என்று மாபெரும் நடிகர் அந்தப் படத்திற்குக் கதாநாயகனாக அமைந்து விட்டால்? படத்தின் ஆரம்பத்திலேயே தெரிந்துவிடும் அந்தப் படம் செம ஹிட் என்று. 1999இல் அப்படி வெளிவந்து ஹிட் ஆன கமர்ஷியல் மசாலா திரைப்படம் தான் படையப்பா.

'அதிகமா ஆசைப்படுற ஆம்பளையும் அதிகமா கோபப்படுற பொம்பளையும் நல்லா வாழ்ந்ததா சரித்திரமே கிடையாது' என்ற இந்த இரண்டு வரிதான் படத்தின் ஒரு வரிக் கதை. இந்த இரண்டு வரியை வைத்துக் கொண்டு திரைக்கதையில் புகுந்து விளையாடியிருந்தார் கே.எஸ்.ரவிக்குமார். கே.எஸ்.ரவிக்குமார் என்றாலே அது மசாலா படம்தான் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அதை இந்தப் படத்திலும் காப்பாற்றியிருந்தார் கே.எஸ்.ரவிக்குமார். படத்தில் ரம்யா கிருஷ்ணனின் (நீலாம்பரி கதாபாத்திரம்) ஆதிக்கம் அதிகமாக இருந்தாலும் அவரை வசனத்தினாலேயே ரஜினிகாந்த் சமாளிப்பது போன்ற காட்சிகளைக் கொடுத்து இரண்டு கதாபாத்திரங்களுக்கும் சிறப்பான வரவேற்பைப் பெற்றுக் கொடுத்திருந்தார் இயக்குநர். ரஜினிகாந்த், ரம்யா கிருஷ்ணன், சௌந்தர்யா, சிவாஜி கணேசன், அப்பாஸ், வடிவுக்கரசி, ஸ்ரீதேவி, செந்தில் என்று ஒரு நட்சத்திரப் பட்டாளத்தையே இப் படத்தில் உள்ளடக்கி எல்லோருக்கும் சிறப்பான கதாபாத்திரங்களைக் கொடுத்திருந்தது இயக்குநரின் பலம் என்றே சொல்ல வேண்டும்.

இப்படத்தில் பல சிறப்பம்சங்கள் உள்ளன. அவற்றுள் முதல் சிறப்பம்சம் நடிகர் திலகம் சிவாஜி கணேசன். எந்தக் கதாபாத்திரம் கிடைத்தாலும் அதனை அசால்ட்டாகச் செய்து முடிக்கும் சிவாஜி கணேசன் இந்தப் படத்திலும் தனது கதாபாத்திரத்தைச் செவ்வனே செய்திருந்தார். தன் தம்பியான மணிவண்ணனிடம் சொத்துக்களைக் கொடுத்து விட்டு ரஜினியிடம் 'இனிமே நாங்க எல்லாரும் உன் பின்னாடி தான்ப்பா' என்று சொல்லுவார். அதற்கு ரஜினி 'எப்பவுமே நீங்க தான்ப்பா எங்களுக்கு முன்னோடி' என்று சொல்லுவார். படத்தில் ஒவ்வொரு ரசிகனும் பார்த்து நெகிழ்ந்த காட்சி அது. அதே போன்றுதான் படத்தின் காமெடிக் காட்சிகளும் சிறப்பாகவே அமைந்து இருந்தன. செந்திலுக்கு மாப்பிள்ளை பார்க்கப் போகும் இடத்தில் ரஜினி அடிக்கும் லூட்டியை அவ்வளவு எளிதில் யாரும் மறந்திருக்க மாட்டார்கள். இப்படி ஆக்சன், காதல், சென்டிமென்ட், காமெடி என்று எல்லாத் தளத்தையும், எல்லாத் தரப்பினரையும் திருப்தி செய்யும் படியாகவே படையப்பா திரைப்படம் இருந்தது.

தமிழ் சினிமாவில் (எந்த ஊர் சினிமாவாக இருந்தாலும்) மறக்க முடியாத கதாபாத்திரங்கள் எப்பொழுதும் படைக்கப்படுவது இல்லை. அவ்வப்போதுதான் அவை தலையெடுக்கின்றன. இயக்குநரின் மனதில் எழும் அந்தக் கதாபாத்திரத்திற்கான உணர்ச்சிகள் பொருத்தமான நடிக நடிகைகளால் உயிர் கொடுக்கப்பட்டு ரசிகனின் மனதை அடையும் போதுதான் அக் கதாபாத்திரத்திரத்தின் தரம் (ரசிகனால்) தீர்மானிக்கப்படுகின்றது. அப்படி ஒரு அழுத்தமான கதாபாத்திரம் படையப்பா படத்தில் ரம்யா கிருஷ்ணனுக்குக் கிடைத்திருந்தது. சவாலான வேடம் எனறாலும் துணிந்து நடித்திருந்தார் ரம்யா கிருஷ்ணன். (அதற்கான பலன்... ஒட்டு மொத்த ரசிகர்களது பாராட்டுடன் சேர்த்து சிறந்த நடிகைக்கான பிலிம்பெயார் விருதும் ஒரு சேரக் கிடைத்தது). நடை, பேச்சு, திமிர் பார்வை என்று ஒரு நடிப்பு ராஜ்ஜியமே நடத்தியிருந்தார் ரம்யா கிருஷ்ணன். ரஜினியின் ஸ்டைலிலேயே அவருக்கு சல்யூட் அடிப்பது, ரஜினியைக் கடைசிவரை பழிவாங்கத் துடிப்பது என்று அவரது நடிப்புக்கு படையப்பா ஒரு சிறந்த தீனி. ரஜினியைப் பார்த்து 'எல்லாருக்கும் உன்னை ஏன் பிடிச்சிருக்கு தெரியுமா? வயசானாலும் உன் ஸ்டைலும் அழகும் இன்னும் உன்னை விட்டுப் போகல' என்று அவர் சொல்லும் வசனம் ரொம்பவே பிரபலம். (புதிதாக நடிக்க வரும் பல நடிகைகளுக்கு இந்த நீலாம்பரியும் ஓர் ரோல் மொடல்)

படத்திற்கு இசை ஏ.ஆர்.ரஹ்மான். 'மின்சாரக் கண்ணா', 'சுத்தி சுத்தி வந்தீக', 'என் பேரு படையப்பா', 'வெற்றிக் கொடி கட்டு' 'ஓஹோ ஓஹோ' என்று எல்லாப் பாடல்களும் பட்டி தொட்டி எங்கும் பட்டையைக் கிளப்பின. பாடல்களை விடப் பின்னணி இசையே படத்தில் அதிகமாகச் செல்வாக்குச் செலுத்தியிருந்தது. படையப்பா படத்தின் மொத்த பட்ஜெட் 23 கோடி. ஆனால் வசூல் செய்ததோ 43 கோடி. தமிழ்நாட்டுத் திரைப்பட விருதுகளில் ஐந்து விருதுகளைத் தனதாக்கிக் கொண்ட படையப்பா திரைப்படம் தெலுங்கையும் விட்டு வைக்கவில்லை. தெலுங்கில் நரசிம்மா என்ற பெயரில் வெளியாகி அங்கும் சக்கை போடு போட்டது. பாட்ஷாவுக்கு அடுத்ததாக ரஜினியின் மற்றும் ஒரு கமர்ஷியல் மசாலா படமான படையப்பா ரஜினியின் பாதையை மாற்றி வைத்த திரைப்படங்களுள் மிகவும் முக்கியமானது.

பார்வை தொடரும்



▶ கேகாலையில் விசித்திர ஆட்டுக்குட்டியொன்று பிறந்துள்ளது. ஒரு கண்ணுடன் பிறந்த இந்த ஆட்டுக்குட்டியை பார்க்க ஏலியன் மாதிரி இருப்பதாக பிரதேச மக்கள் கூறுகின்றனர். இதனால் பெருமளவானவர்கள் இதனை பார்த்து செல்கிறார்கள்.




▶ ரம்புக்கனை பிரதேசத்தை சேர்ந்த பௌத்ததுறவியொருவர் சமூக வலைத்தளங்களில் கடுமையான விமர்சிக்கப்பட்டு வருகிறார். தனக்கு வியாதி இருப்பதாக பிரதேச மக்களிடம் நிதி வசூல் செய்து வருகிறார் அவர். இந்த நிலையில் அவர் சிகரெட் புகைக்கும் வீடியோ வெளியாகி பரபரப்பை கிளப்பியுள்ளது. தனிநபர் ஒழுக்கம் துறவிகளிற்கு முக்கியம், இவர் ஒரு போலி துறவியென சமூகவலைத்தளங்களில் கடுமையான விமர்சனம் எழுந்ததையடுத்து, துறவி தலைமறைவாகி விட்டார்.




▶ இந்தியாவின் மணிப்பூர் மாநிலத் தலைநகர் இம்பாலில் அமைந்திருக்கிறது 'ஒன் அண்ட் ஒன்லி பெண்கள்' நடத்தும் மார்க்கெட். 500 வருடங்களிற்கும் அதிகமாக பெண்களே இதை நடத்தி வருகிறார்கள். இங்கு வெயில், குளிர் என்று பாராமல் கடுமையாக உழைத்து தங்கள் குடும்பங்களை காப்பாற்றிவருகிறார்கள் அந்த பெண் வியாபாரிகள். 'இமா கெயித்தேல் (Ima keithel)'... இதுதான் மார்க்கெட்டின் பெயர். 'இமா' என்றால் அம்மா. 'கெயித்தேல்' என்றால் பஜார். உப்பு, மிளகாய் முதற்கொண்டு பருப்பு வகைகள், பழங்கள், மீன்கள், துணிமணிகள், கைவினைப் பொருட்கள் என சகல பொருட்களையும் இங்கு. பெண்கள் விற்பனை செய்கிறார்கள்.

கு.நக்கீரன்
உளவள ஆலோசகர்







# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்

பெயர் குறிப்பிடவில்லை
இணுவில்

**கேள்வி: நான் 26 வயதுடைய ஆண். சந்தைப்படுத்தல் பிரிவில் தொழில் புரிகின்றேன். இதனால் எனக்குப் பல பெண்களிடம் தவறான தொடர்பு இருந்தது. அண்மையில்தான் எனக்குத் திருமணமானது. இப்போது அந்தப் பெண்களுடனான எல்லாத் தொடர்புகளையும் விட்டுவிட்டேன். மனைவியிடம் மறைக்கக் கூடாது என்பதற்காக எல்லா உண்மையையும் சொல்லிவிட்டேன். மன்னிப்பும் கேட்டேன். ஆனால் இப்போது அவர் என்னோடு முகம் கொடுத்துப் பேசுவதில்லை. என்னைப் பிடிக்காதது போல் நடந்து கொள்கின்றார். எனக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. எனக்கு ஒரு நல்ல பதில் சொல்லுங்கள்?**

*பதில்:* என் அன்புச் சகோதரா! வடிவேலு பாணியில் சொன்னால் "நீர் ரொம்ப நல்லவராக இருக்கின்றீர்";. அதனால் தான் இந்த நிலைமை வந்தது. சமுதாய ஒழுக்கம், பண்பாடு என்பது எழுதாத ஒரு சட்டமே. ஒருவனுக்கு ஒருத்தி என்பதே நமது நாட்டின் எழுத்துரவான சட்டம். ஆனால் அது திருமணத்தின் பின்னரே நடைமுறைக்கு வரும். நீர் எழுத்துச் சட்டத்தைப் பின்பற்றி நடைமுறைப்படுத்துகின்றீர். ஆனால் எழுதாத சட்டத்தை மீறிவிட்டீரே. அதனால்தான் தண்டனையை அனுபவிக்க வேண்டிய நிலை.

உமக்கு ஒரு உளவியல் பாடம் சொல்லலாம் என்று நினைக்கின்றேன். 'யோகாரி'எனும் ஒரு உளவியல் ஞானியின் தத்துவம் ஒன்று உள்ளது. சமூகவாழ்வில் எமது அறிவு, அனுபவம், மனப்பாங்கு



போன்றவற்றின் அடிப்படையிலான ஒரு எண்ணக்கரு பற்றியது இது. இதன்படி ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் 4 துவாரங்கள் உள்ள ஜன்னல் ஒன்று உள்ளது.

முதலாவது துவாரம் என்னவெனில் சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் தெரிந்தவைகளைப் பற்றியது. அதாவது எனக்கும் தெரியும் ஏனையோருக்கும் தெரியும் பகுதி. எடுத்துக்காட்டாக சூரியன் கிழக்கில் உதிக்கும் என்பது.

இரண்டாவது துவாரம் எனக்குத் தெரியாது ஏனையோருக்குத் தெரியும் எனும் பகுதி. இதில் கல்வியறிவு, ஞானம், திறமைகள் போன்ற பல விடயங்கள் உள்ளடங்கும்.மூன்றாவது துவாரம் எனக்கும் தெரியாது. ஏனையோருக்கும் தெரியாது எனும் பகுதி. இதனுள்தான் சமயச் சடங்குகள், நம்பிக்கைகள், கடவுள் பற்றிய கருதுகோள்கள், ஆன்மீக விடயங்கள் என்பவை அடங்கும்.

நான்காவது துவாரம்தான் உமது பிரச்சினைக்கு உரிய துவாரம். அதாவது எனக்கு மட்டும் தெரியும் ஆனால் ஏனையோருக்குத் தெரியாது எனும் பகுதி. இந்த துவாரத்தில்தான் ஒவ்வொரு மனிதனதும் அனுபவங்கள் அடங்குகின்றன. குறிப்பாக பாலியல் நடத்தைகள் இந்த துவாரத்திற்கு உரியவை. எனக்கு மட்டுமே தெரிந்த, வேறு யாருக்கும் தெரியாதவைதான் பாலியல் நடத்தைகள்.

எமது சமுதாயத்தில் பலர் ஆண்டாண்டு காலமாகத் தமக்கே தெரிந்த இப் பகுதியை இறப்புவரை தம்மோடு கொண்டு செல்லுகின்றனர். அந்த அளவுக்கு உணர்ச்சிபூர்வமான விடயங்கள்தான் பாலியல் நடத்தைகள். எனவே உமக்கு மட்டுமே தெரிந்த இந்த விடயத்தை நீர் இன்னொருவருக்குக் கூறலாமா? அதுவும் மனைவியிடம் கூறலாமா? ஒருவேளை மனைவி மீதான அதீத ஆர்வக் கோளாறால் உளறிவிட்டீர் போலும். அதுவும் குடும்ப வாழ்க்கைப் பயணத்தின் ஆரம்பத்திலேயே கூறிவிட்டீரே! கொஞ்சகாலம் பயணித்த பின் கூறியிருந்தால் சேர்ந்து வந்த பயண அனுபவங்கள் சிலவேளை நிலைப்பாட்டை மாற்றியிருக்கலாம். என்றாலும் பரவாயில்லை. மனதைத் தளரவிட வேண்டாம். அன்பு வாகனத்தில் பண்பெனும் பாதையில் நம்பிக்கையுடன் பயணத்தைத் தொடருங்கள். நிச்சயமாக உங்கள் மனைவியும் ஒருநாள் அதில் சேர்ந்துகொள்வார்.

பிரதாபன்
மண்டைதீவு

**நான் ஒரு ஆண். வீட்டிற்கு ஒரே பிள்ளை என்பதால் செல்லமாக வளர்ந்துவிட்டேன். இப்போது மேற்படிப்புக்காக வீட்டைவிட்டு வந்து மாணவர் விடுதி ஒன்றில் தங்கியிருக்கின்றேன். ஆனால் என்னால் அங்கு தங்கியிருக்கும் சக மாணவர்களுடன் இயல்பாகப் பழக முடியவில்லை. தனிமையாகவே இருந்துவிட வேண்டும் என்று தோன்றுகின்றது. எனக்கு ஏன் இப்படி எல்லாம் தோன்றுகின்றது? எனக்கு ஏதாவது பிரச்சினை இருக்குமா?**

*பதில்:* தம்பி இதில் புதினம் ஒன்றும் இல்லை. நீர் தனிப் பிள்ளையாக வளர்ந்தவர். உமக்கான சமூகவாக்கம் இன்னும் போதாமல் உள்ளது. நீர் விடுதியில் பல்வேறு விதமானசமூகச் சூழலில் வளர்க்கப் பட்டவர்களுடன் சேர்ந்து பழகவேண்டி இருக்கும். புதிதில் அது கொஞ்சம் சிரமமாகத்தான் இருக்கும். காலப்போக்கில் விடுதியிலேயே அதிக நட்புவட்டம் உள்ள மனிதனாகக் கூட நீர் மாறலாம்.

பேச்சுத் திருமணத்தின் பின் பிறந்த வீட்டில் இருந்து புகுந்த வீட்டிற்கு வந்துள்ள பெண்ணின் மனநிலையே இப்போது உம்மில் உள்ளது. ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். உமது இயல்புடன் ஒத்துப் போகக் கூடிய முதலாவது நபரைத் தேடும். எல்லாம் சரியாகிவிடும்.

இன்னுமொரு விடயம் நீர் விடுதியில் உள்ள ஆண் நண்பர்களுடன் இயல்பாகப் பழக முடியவில்லை என்று குறிப்பிட்டதை வைத்துப் பார்க்கும்போது சிலவேளைகளில் நீர் ஆண் உருவத்தில் பெண் தன்மை உள்ள திருநங்கையாக கூட இருக்கமுடியும். ஏனெனில் இந்தமாதிரியான இயல்புள்ள ஆண் பிள்ளைகள் ஆண் நண்பர்களுடன் பழகுவதில் சில சங்கடங்களை எதிர் கொள்ளும் அதேவேளை பெண் பிள்ளைகளுடன் அதிக அன்னியோன்யமாக நல்ல நட்புடன் பழகுவார்கள். நீர் அப்படியான ஒரு திருநங்கையாகக் கூட இருக்கலாம். எதற்கும் நேரடியான சிறந்த உளஆலோசனையைப் பெற்றுக் கொள்வது இன்னும் நல்லது.



ஹிட்லரின் கொடூரமான வதை முகாம்களில் ஒன்று ஆஸ்விட்ஸ். அங்கு அடைத்து வைக்கப்பட்ட ஹங்கேரியைச் சேர்ந்த யூதப் பெண் எடித் ஸ்டீனெரும் அவரது அம்மாவும் மெங்கலேவின் கொடூர பரிசோதனைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். 23 வயது ஜான் மெக்கே என்ற ஸ்கொட்லாந்து ராணுவ வீரர், எதிரி நாடான இத்தாலி ராணுவ உடையை அணிந்துகொண்டு எடித்தைக் காப்பாற்றினார். 18 மாதங்கள் அங்கும் இங்கும் பதுங்கியிருந்து, உயிர்ப் பிழைத்த எடித்தும் ஜானும் 1946ம் ஆண்டு திருமணம் செய்துகொண்டனர். ஜான் 96 வயதிலும் எடித் 92 வயதிலும் தங்களது 71வது காதலர் தினத்தைக் கொண்டாடியிருக்கிறார்கள். ஜானைப் போல மிகச் சிறந்த அன்பான மனிதரைப் பார்க்க முடியாது என்று எடித்தும் எடித்தைப் போல பண்பான ஒரு மனிதரைப் பார்க்க முடியாது என்று ஜானும் சொல்கிறார்கள். "குழந்தைகளுக்காகத்தான் இந்தக் காதலர் தினக் கொண்டாட்டம். எங்களைப் பொறுத்தவரை ஆண்டு முழுவதுமே நிறைந்த அன்புடனும் காதலுடனும்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். வதை முகாமிலிருந்து தப்பிப் பிழைத்த எங்களுக்குத்தான் உயிரின் மதிப்பும் வாழ்க்கையின் மகத்துவமும் அதிகம் தெரியும்" என்கிறார் எடித்.

# குழந்தைப் போராளி




சைனா கெய்ரெற்சி
தமிழில்: தேவா

என்னைப் போலவே மற்றக் குழந்தைகளும் அதிர்ச்சி தரும் அந்த இழவுக்கிராமத்தைப் பார்த்து திடுக்கிட்டுப் போய் சாவு குறித்த அச்சத்தில் மூழ்கி இருந்தனர். என்ன நடந்திருக்கலாம் என நாங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கும் போதே வானத்தில் உலங்கு வானூர்திகளின் இரைச்சல் எழுவதைக் கேட்டு பதறிப்போனேன். நாங்கள் தரையில் விழுந்து படுத்துக் கொள்ள வேண்டும். பாதுகாப்பான இடங்களைத் தேட வேண்டும். அல்லது வானம் இடிந்து தலையில் விழும். உலங்கு வானூர்திகள் ஆகாயத்திலிருந்து மூர்க்கமான தாக்குதல் ஒன்றை நிகழ்த்தி விட்டு வந்த வேகத்திலேயே திரும்பிப் போயின. எல்லோரும் எழுந்து நின்று உலங்குவானூர்திகளின் தாக்குதலில்இருந்து தாங்கள் காயமின்றித் தப்பித்தார்களா எனப் பார்த்துக் கொண்டனர். நானும் எனக்கு காயம் படவில்லை என உறுதிப்படுத்திய பின்பு தோழர்களுக்கு என்ன நடந்தது என ஓடிப்போய்ப் பார்த்தேன். ஒரு தோழன் தரையிலிருந்து எழ மனமில்லாதவனைப் பொல கிடந்தான். நான் அவனருகில் சென்று பார்த்த போது தூங்குபவன் போல அவன் சலனமில்லாமல் கிடந்தான். மற்றைய தோழர்களும் வந்து விழுந்து கிடந்தவனை சூழ கண்களைத் தாழ்த்திக் கொண்டு நின்றார்கள். எங்கள் எல்லோருக்கும் நேசமான எப்போதும் உற்சாகமாக காணப்படும் சிறுவனானவன் எந்த சேரமும் அவனிடம் ஆறுதலட வார்த்தைகள் தயாரக இருக்கும். நாங்கள் துணிச்சலானவர்களாக இருக்க வேண்டும். அச்சத்தை எங்களிடம் அணுகவே விடக்கூடாதென அவன் எப்பொழுதும் சொல்லிக் கொண்டே இருப்பான்.

எங்களை அழைத்துச் செல்ல வந்த எங்களது சார்ஜன் அந்தச் சிறுவன் இறந்து விடான் எனச் சொன்னார். இறந்தவனுக்காக கண்ணீர் விட அவகாசம் இல்லை. எங்களது படைப்பிரிவோடு போய் இணைந்து கொள்வதற்காக நாங்கள் உடனடியாகவே புறப்பட வேண்டும் அவனுக்காக என்னிடமிருந்த கண்ணீரை சிந்துவதற்குக் கூட நிலமைகள் என்னை அனுமதிக்கவில்லை. இறந்த தோழரர்களின் நினைவுகள் எங்களின் பசி தாகத்தையும், மறக்கடிக்கச் செய்து விட்டன. என் கண்ணிலே அந்த உயிரற்ற உடல்கள் ஒட்டிக் கிடந்தன. ஒரு நாளில் இல்லாவிட்டாலும் ஒரு நாள் என் கதையும் இப்படித்தான் முடியும் என் நினைத்துக் கொண்டேன்.

குழந்தைகளே என்னிடம் வாருங்கள்

தொடர்ந்து நகர்ந்து கொண்டேயிருந்த எங்களது படைப்பிரிவு மழைநீர் தேங்கி நின்ற ஒரு குட்டையை வந்தடைந்தது. அங்கே சிறிது ஒய்வெடுப்பதென முடிவாயிற்று. நாங்கள் தரையில் உட்காருவதற்கு முன்னமே பற்றைக்காடு சலசலத்தது. அங்கிருந்து தலைவர் யோவேரி முசேவெனி தன் தளபதிகளுடன் வந்து கொண்டிருந்தார். முசேவெனி இராணுவ உடையிலிருந்தார். அவர் கையில் கறுப்பு வெள்ளை முத்துக்களால் அலங்கரிக்கப் பட்ட சிறியதொரு கோலை வைத்திருந்தார். இந்தக் குறுந்தடியின்றி முசேவெனி எங்குமே போவதில்லையாம். 'கிம' இனக்குழுவைச் சேர்ந்த மந்திரவாதி ஒருவரிடமிருந்து முசேவெனி பெற்றுக்கொண்ட இந்தக் குறுந்தடி மந்திர சக்தி வாய்ந்ததெனப் பரவலாக நம்பப்பட்டது. தலைவர் குழந்தைகள் எல்லோரையும் , தன் அருகாமையில் வரும்படி அழைத்தார். அவரது வார்த்தைகளில் வசியமிருந்தது.

ழிஸிகி எமது மக்களின் விடுதலைக் காகவும், உகண்டாவின் இனக்குழுக்களுக் குள் ஐக்கியத்தை ஏற்படுத்தவும் உறுதியோடு போராடிக் கொண்டிருக்கின்றது. அரசாங் கத்தினால் சிறையில் அடைக்கப்பட்டிருக் கும், எந்தக் குற்றமுமே புரியாத நமது மக்களை விடுதலை செய்வததற்காக நாம் எல்லோரும் ஒற்றுமையுடன் இறுதி வரை போராட வேண்டும்.

உண்மையிலேயே எங்கள் தலைவரால் நன்றாகப் பேச முடியும். ஆபிரிக்கக் கிளர்ச்சித் தலைவர்களிலேயே எங்கள் தலைவர்தான் முதன் முதலாக குழந்தைப் போராளிகளை களத்தில் இறக்கியவர் விரைவிலேயே மற்றவர்களுக்கும் "முற்போக்கான" சிந்தனையை பின்பற்றத் தொடங்கினார்கள். இந்தவகையில் யோவேரி முசேவெனி குழந்தைப் போராளி முறையின் தந்தை. பெரும்பாலான குழந்தைப் போராளிகளுக்கு காணாமல் போன அவர்களது பெற்றோர்களுக்கு என்ன நடந்தது எனத் தெரியாது. முசேவெனியோ அவர்களை அரச இராணுவம்தான் கொன்றெலித்தது எனச் சாதித்தார். அம்மட்டோடு நின்றுவிடாமல் அவர் இன்னொரு துருப்புச் சீட்டையும் அடித்தார். "உங்களின் தாய் தந்தையர்களில் சிலர் சிறைச்சாலையில்இன்னும் உயிருடன் இருக்கலாம், நீங்கள் போய் சிறைமீட்பதற் காக அவர்கள் காத்துக் கொண்டிருந் தார்கள்" என்று தலைவர் மேலும், மேலும் குழந்தைகளின் மண்டையை கழுவினார்.

(தொடரும்)



▶ இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தில் 85 வயதான முதியவர் ஒரு வாரத்தின் முன் காணாமல் போனார். தீவிர தேடுதலில் காட்டோரமாக மரமொன்றில் தூக்கிட்ட நிலையில் மீட்கப்பட்டார். அவரது சடலத்தை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல எவரும் உதவவில்லை. இரவு முழுவதும் காத்திருந்தவர், மறுநாள் தனது மோட்டார் சைக்கிளில் கட்டிக் கொண்டு புறப்பட்டுள்ளார்.




▶ ஏழு நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு விசா வழங்குவதை மூன்று மாதங்களுக்கு நிறுத்தி வைத்த ட்ரம்ப்பின் உத்தரவு மக்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் ட்ரம்ப்க்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடந்த வண்ணமே இருக்கின்றன. இந்த நிலையில் 4 வயது சிறுமி, யாருமே எதிர்பார்க்காத அளவில் தன் எதிர்ப்பை அமெரிக்க அதிபருக்கு காட்டிவருகிறாள்.



▶ வவுனியா தேக்கவத்தையில் ஆசிரியர் ஒருவரின் மோட்டார்சைக்கிளை திருடி சென்றவர் வசமாக சிக்கிக் கொண்டுள்ளார். மதுபோதையில் தலைக்கவசமின்றி மோட்டார்சைக்கிளை செலுத்தியவரை மடக்கிப்பிடித்து பொலிசார் விசாரணை செய்தபோது அது திருட்டு மோட்டார் சைக்கிள் என்பது தெரிய வந்தது.



▶ வடமேல் பல்கலைகழக பேராசிரியர் ஒருவர் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தும் சிசிரிவி கமரா காட்சிகள் வெளியாகியுள்ளது. வீதியில் நின்ற மாணவர்களை அடித்து துவைத்து, அவர்களின் சைக்கிளையும் தூக்கி எறிகிறார். அந்த பகுதியிலுள்ள சிசிரிவி கமராவில் பதிந்த காட்சியின் அடிப்படையில் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



# பூனையாகிய நான்

தக்ஷிலா ஸ்வர்ணமாலி
தமிழில் எம்.ரிஷான்ஷெரீப்

உங்களைப் போலவே எனக்கும் மகிழ்ச்சி தோன்றுமெனினும்
உங்களைப் போல என்னால் சிரிக்க இயலாது
உங்களைப் போலவே எனக்கும் கவலை தோன்றுமெனினும்
உங்களைப் போல என்னால் அழ இயலாது

உங்களிடம் கூறவென என்னிடம் நிறைய இருக்கின்றன எனினும்
உங்களிடம் என்னால் அவற்றைக் கூறிவிட இயலவில்லை
உங்களைப் போலவே எனக்கும் வலிக்கும்
உங்களைப் போலவே எனக்கும் பசிக்கும்
உங்களைப் போலவே எனக்கும் துன்பங்கள், தொந்தரவுகள்
நேருமெனினும்
உங்களைப் போல என்னால் அவற்றுக்கெதிராக போராட இயலவில்லை

உங்களைப் போல என்னால் உரிமைகளுக்காகப் போரிட
இயலவில்லையெனினும்
உங்களைப் போலவே நானும் துயரங்களுக்கு
ஆளாகிக்கொண்டேயிருக்கிறேன்
உங்களைப் போல என்னால் அவற்றை வர்ணித்துக்கூற
இயலவில்லையாதலால்
உங்களை விடவும் நான் நேர்மையாக இருக்கிறேன்

# முற்றுப்புள்ளி

பூட்டப்பட்ட அறையின்
சாளரத்தின் வழியே
நுழையும் ஒளிக்கீற்றாய்
முடிவுரை எழுதிய புத்தகத்தினுள்
முன்னுரை எழுத ஏன் மீண்டும் வருகிறாய்?

மூச்சு முட்ட என் கவிதைகளைத்
தின்று ஏப்பம் விட்டு சென்ற பின்னால்
மீண்டும் உன் நினைவுகளால்
எதற்காக நீ எட்டிப் பார்க்கிறாய்?



அறிவுரை கேளாது சென்ற உன்னால்
அமைத்த முகவுரை சரியில்லை!
கிடைத்த வெளிச்சத்தில் எழுதிய
ஒரு கவியே போதும் என்றாகிவிட்டது!

முற்றுப் புள்ளி இட்டு முடித்து வைத்து விட்டேன்!
காற்புள்ளி இட்டு கவிதையை தொடராதே!

புதுக்கவிதை இயற்றிட இனியும் எனக்கு விருப்பம் இல்லை !
இதனை மறுமுறை திருத்தி எழுதிட உடன்பாடும் இல்லை !
மறுக்காமல் வந்த வழியே சென்றுவிடு!

கம்ஷிகா. மகாதேவன்



# இன்றைக்கு வேண்டாம்

ராஜாஜி ராஜகோபாலன்

இன்றைக்கு வேண்டாம்
என் இனிய கணவனே!
நீ இழுத்து வளைத்த போதெல்லாம்
உன்னை அணைத்துப்படர்ந்த
பூங்கொடியல்லவா இவள்?
என்றாவது உன் மனதை
நோகடித்திருப்பேனா?
இல்லையென்று சொல்லி உன்னை
ஏமாறச் செய்தேனா?
தலையணையை அரியணையாக்கி
ஆட்சி செய்பவனே,
ஆழ்ந்துறங்கும் நடுநிசியில்
உன் கரங்கள் என் மேனியில்
மீட்டுமே மௌன வீணை
மறுத்தொதுங்கிப் போனேனா?
வில்லாய் வளைந்து
நாண் தொடுக்கும்
உன் ஆண்மை
இன்றா நேற்றா
இவளை உனக்கு
அடிபணிய வைத்தது?
தென்றலாய் என்றும்
எனைத் தழுவும் தோழனே
இன்று மட்டும்
தயவு கொஞ்சம் காட்டு.
திரும்பிப் படுக்காதே தேனே,
என் மனநோவுக்கு
மாத்திரை தருவாயே,
உடல் நோவுக்கும்
உன்னிடமே உண்டு
கைகண்ட மருந்து.
பெண்ணிடம் நீகாணும்
பலவீனமல்ல இது,
பொழுதெல்லாம்
துண்டுகளாய்ச் சிதறிய
தேங்காயாய்ப் போனதைத்
தெரிந்தவன்தானே நீ.
என்னைத்
தனியனாய் ஒருக்கழித்துத்
துயில்கொள்ள அனுமதிப்பாய்.
ஒருநாள் ஓய்வெடுத்தால்
சொர்க்கத்தின் தாழ்பாள்
துருப்பிடித்தா போய்விடும்?
களைத்த இந்த உடல்
உன்
கருணைக்கு மனுப்போடும்
வேளையிது!
இரவுநேர அரசனாய்
ஆட்சி செய்வதிலும்
பகல்நேரச் சேவகனாய்ப்
பணிவு காட்டுவதிலும்
நீ எனக்களித்த பெருமதிப்பை
நோவுற்ற போதும் நினைத்துப்பார்.
இளவரசே,
உன்விரல்களுக்கு
இன்றைக்கு
வேறு வேலை கொடு.
அவை
நொந்துபோன என் நரம்புகளை
நீவிவிடட்டும்.
வலிய உன் கரங்கள் என்
மேனியை முறுக்கும்
மூட்டுகள் மேலாய்
மயிலிறகாகட்டும்!
உன் தோள்களில் சாய்ந்தே
என்னைத் தொலைந்து போயிருக்கிறேன்
திரும்பிப்படுக்காதே, தேவனே,
விரும்பி நீ சொல்லும் ஒருசொல்
என் வேதனைக்கெல்லாம்
மருந்து!

"ஒரு கவிதை உங்களை ஏதாவது
செய்யவேண்டும்.
சந்தோசப்படுத்த வேண்டும் அல்லது
கலவரப்படுத்த வேண்டும்.
குறைந்த பட்சம் வாழ்வைப்பற்றி யோசிக்க
வைக்கவாவது வேண்டும்."

விக்ரமாதித்யன்



# விடிவு காலம் பிறக்க விளக்கேற்றுங்கள்

- சித்திரை மாத பவுர்ணமியன்று வீட்டில் விளக்கேற்றி வழிபட்டால் தன தான்யம் பெருகும்.
- வைகாசி மாத பவுர்ணமியில், வீட்டில் விளக்கேற்றி வழிபட்டால் செல்வ நிலை உயரும்.
- ஆனி மாத பவுர்ணமிப் பொழுதில், வீட்டில் விளக்கேற்றி வழிபட்டால் விவாகப் பேச்சுகள் முடிவாகும்.
- ஆடி மாத பவுர்ணமியன்று, வீட்டில் விளக்கேற்றி வழிபட்டால் ஆயுள் விருத்தி உண்டாகும்.
- ஆவணி மாத பவுர்ணமியில், வீட்டில் விளக்கேற்றி வழிபட்டால் புத்திர பாக்கியம் கிடைக்கும்.
- புரட்டாசி மாத பவுர்ணமி தினத்தில், வீட்டில் விளக்கேற்றி வழிபட்டால் தடைபட்ட காரியங்கள் நடைபெறும்.
- ஐப்பசி மாத பவுர்ணமியில் வீட்டில் விளக்கேற்றி வழிபட்டால் உணவு பஞ்சம் ஏற்படாது.
- கார்த்திகை மாத பவுர்ணமி பொழுதில், வீட்டில் விளக்கேற்றி வழிபட்டால் நிலைத்த புகழ் வந்து சேரும்.
- மார்கழி மாத பவுர்ணமியன்று, வீட்டில் விளக்கேற்றி வழிபட்டால் ஆரோக்கியமான உடல்நிலை உருவாகும்.
- தை மாத பவுர்ணமி தினத்தில், வீட்டில் விளக்கேற்றி வழிபட்டால் வாழ்க்கையில் வெற்றி கிடைக்கும்.
- மாசி மாத பவுர்ணமியில் வீட்டில் விளக்கேற்றி வழிபட்டால் துன்பங்கள் அகன்று இன்பங்கள் பெருகும்.
- பங்குனி மாத பவுர்ணமி அன்று வீட்டில் விளக்கேற்றி வழிபட்டால் சகல சவுபாக்கியங்களும் கிடைக்கும்.





# புனிதம் மிகுந்த பூஜை அறை

வாங்கும் வீடாக இருந்தாலும் சரி, கட்டிய வீடாக இருந்தாலும் சரி.. சில அறைகள் யோகம் தரும் அறைகளாக அமைய வேண்டும்.

நாம் வீடு கட்டும் பொழுது எத்தனையோ அறைகள் கட்டுகிறோம். நாம் வசதிக்காக கட்டுகிற அறையில் முக்கியத்துவம் வாய்ந்த அறை எது தெரியுமா? பூஜை அறை தான். அது மனதை ஆரோக்கியமாக வைக்கும். அடுத்தது புத்தக அறை; இது அறிவை ஆரோக்கியமாக வைக்கும். அடுத்தது சமயலறை. அது உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள உதவுவது. அதன்பிறகு படுக்கை அறை மற்றும் பல அறைகள்.

பூஜை அறைக்கு ஒதுக்கிய பிறகே, மற்ற இடத்தை நாம் வசதியாக வசிப்பதற்கு ஏற்றதாக அமைத்துக் கொள்ள வேண்டும். நமது வீட்டில் இறைவனுக்கு இடம் தந்திருக்கிறோம் என்று முற்றிலும் நினைப்பது தவறானது. அவனது திருச்சன்னிதியில் தான் அவனின் கருணையுடன் நாம் வசித்து வருகிறோம் என்று எண்ண வேண்டும்.

நம் வீடு என்பதை விட அவனது திருக்கோவில் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். என்ன தான் வாஸ்து சாஸ்திரப்படி வீட்டைக் கட்டினாலும், இறைவனின் அருளின்றி நாம் அந்த வீட்டில் சந்தோஷமாக இருக்க முடியாது. எனவே பூஜை அறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் நம் ஆசைகள் அரங்கேறும்.

# வீட்டிற்குள் நுழையும் பொழுது வலது காலை வைக்க சொல்வது ஏன்?


இடது கையால் வேலை செய்யும் குழந்தைகளை, பெரியவர்கள் கண்டிப்பதைப் பார்த்திருப்பீர்கள். வலது கையால் எடுத்து வை என்பார்கள். வலது பக்கத்தால் செய்யக் கூடிய காரியங்கள் வெற்றி பெறும் என்பதே இதற்கு காரணம்.

'மணமகளே மணமகளே வா! வா! உன் வலதுகாலை எடுத்து வைத்து வா! வா!'

என்ற கவியரசு கண்ணதாசனின் வைர வரிகளின் மூலம் வலது பக்கத்தின் பெருமையை நாம் அறிந்து கொள்ளலாம். மணமகள் புகுந்த வீட்டிற்கு நுழையும் பொழுது, வலது காலை எடுத்து வைத்துச் சென்றால் வாழ்வில் எல்லா வளங்களையும் காண இயலும்.

பொதுவாக, வீட்டிற்குள் நுழையும் பொழுது, வலது கால் வைத்துச் செல்ல வேண்டும் என்பது மரபாகும். இவ்வாறு செய்யத் தவறினால் செல்பவர்களுக்கும், வீட்டுக்காரர்களுக்கும் துன்பம் ஏற்படலாம் என்பது நம்பிக்கை. மனித உடலில் வலது பாகம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

நம் முன்னோர்கள் வலது பக்கத்திற்கு மிக முக்கியத்துவத்தைக் கொடுத்திருக்கிறார்கள். வலது பக்கம் திரும்பி, படுக்கையில் இருந்து எழுந்திருக்க வேண்டும். வலது கால் வைத்து வீட்டிற்குள் நுழைய வேண்டும். வலது கையால் உணவருந்த வேண்டும். வலது கை யால் பிறருக்கு உணவளிக்க வேண்டும். இது போன்ற பல செயல்களுக்கு வலது பக்கத்திற்கு மிக முக்கியத்துவம் அளித்திருக்கிறார்கள்.







# மணமேடை உணர்த்தும் தத்துவம்

மணக்கோலம் காணும் மணமக்களை, மண மேடையில் ஏறி நின்று தாலிகட்டச் சொல்வர். அந்த மணமேடை தத்துவார்த்த ரீதியாக அமைக்கப்பட்டிருப்பது பலருக்கும் தெரியாது. தாலி கட்டி முடிந்ததும் மணமேடையை மூன்று முறை வலம் வரச் சொல்வது வழக்கம். ஆலயத்தை வலம் வருவது போல, மணப்பந்தலை ஏன் வலம் வருகின்றனர் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

மணப்பந்தலில் வைக்கப்பட்டிருக்கும் பொருட்கள் யாவும் தெய்வ வடிவங்களாகும். பந்தலில் ஊன்றப்பட்டிருக்கும் நான்கு கால்களும், நான்கு வேதங்களை குறிக்கின்றன. திருமணம் அக்னி சாட்சியாகவும், விக்னேஷ்வரர் சாட்சியாகவும் நடைபெறுகிறது. அரசன் முன்னிலையில் திருமணம் நடைபெறுவதாக, அரசன் ஆணைக்கால் என்று அரசானிக்கால் வைக்கப்படுகிறது.

அனைத்து செல்வங்களும் பெற்று நலமுடன் வாழ வேண்டும் என்பதற்காக குபேரனுக்குரிய நவதானியம் வைக்கப்பட்டுள்ளது. மணப்பந்தலை வலம் வரும் பொழுது தெய்வத்தை (திருவிளக்கு), அக்னியை (மரம்) வலம் வந்து அவற்றின் அருளையும் நாம் பெறுகின்றோம்.





# கிளி/பளை மத்திய கல்லூரி

இந்து சமுத்திரத்தின் முத்தாம் இலங்கையின் மகுடமாய் விளங்கும் யாழ் குடாவின் நுழைவாயிலில் பசுமையான தாய் மிளிர்கின்ற பச்சிலைப் பள்ளியின் நடுநாயகமான பளை நகரத்தில் "மெய்ப் பொருள் காண்பது அறிவு" என்ற மகுட வாசகத்தோடு அறிவூட்டி வருகின்றது பளை மத்திய கல்லூரி 1952ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதில் இருந்து இன்றை வரைக்கும் தனது பிதேசத்தின் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைத் திறம்பட வழங்கி வருகின்றமை கண்கூடு.

பனளயின் அயற் கிராமங்களான கிளாலி, புலோப்பளை, அல்லிப்பளை, முகமாலை ஆகிய இடங்களில் கிறிஸ்தவ பாடசாலைகள் அமைந்த போது இந்துக்கள் அதிகமாக வாழும் பளைப் பிரதேசத்தில் ஓர் இந்துப் பாடசாலை அமைய வேண்டும்என்ற எண்ணத்துடன் இக் கிராமத்தைச் சேர்ந்த வள்ளல் தம்பாப் பிள்ளை வேலுப் பிள்ளை அவர்கள் 1946 ஆம் ஆண்டு தனது காணியில் இரண்டு ஏக்கரை அன்பளிப்பாக வழங்கினார். இதைத் தொடர்ந்து அரசினால் 1951ஆம் ஆண்டு பாடசாலைக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1952இல் பளை யூனியன் பாடசாலை என்ற பெயரில் இப் பாடசாலை ஆரம்பமானது.

இப் பாடசாலையின் முதல் அதிபரான திரு.மா.பீதாம்பரம் அவர்களின் வழிநடத்தலின் கீழ் 50 மாணவர்கள் கல்வி பயின்றனர். பின்னர் 1953இல் இப் பாடசாலை பளை ஆங்கில அரசினர் பாடசாலை எனப் பெயர் மாற்றம் பெற்றது. (அப்போதைய மாணவர் தொகையும் 76 ஆக அதிகரித்தது). 1961இல் அரசினால் பாடசாலைகள் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்ட போது இப் பாடசாலை பளை மத்திய மகா வித்தியாலயம் எனப் பெயர் பெற்றது. பின் 1194இல் மத்திய கல்லூரியாக இப் பாடசாலை தரமுயர்த்தப்பட்டது.

1983இல் வர்த்தகப் பிரிவும் 1984இல் விஞ்ஞானப் பிரிவும், 1987இல் கணிதப் பிரிவும் உருவாக்கப்பட்டு முதல் தொகுதியிலேயே அதிக சதவீத மாணவர்கள் சித்தியடைந்தமை இப் பாடசாலையின் மற்றுமொரு சிறப்பாகும். தற்போதும் இப் பாடசாலை இடப் பெயர்வுகள் மூலம் பற்பல இழப்புக்களைச் சந்தித்தாலும் சளைக்காமல் பல சிறப் பான பல பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. 2016ஆம் ஆண்டின் கா.பொ.த உயர்தரப் பெறுபேறுகளின் படி கணிதப் பிரிவில் திருநாமம் தபோதனன் (ஏ2பி), இராஜ குலசிங்கம் உசாந்தன் (ஏபிசி) போன்றோர் மாவட்ட ரீதியில் 5ஆம், 6ஆம் இடங்களையும், பொறியியல் தொழலில்நுடபத்தில் முருகவேல் துவாரகன் (2பிசி) 1ஆம் இடத்தையும், வர்த்தகப் பிரிவில் அந்தோனிப் பிள்ளை ஆன் நிலக்ஷனா (3ஏ) மூன்றாம் இடத்தையும் பெற்றமை அண்மைய சாதனைப் பதிவுகளாகும்.



இடப் பெயர்வின் போது கல்வியில் ஏற்பட்ட பாதிப்பு இப் பாடசாலையையும் விட்டு வைக்கவில்லை. 2000ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது புலோலி றோ.க.த.க விலும், 2006 இடப் பெயர்வின் போது கிளி/ மத்திய கல்லூரியிலும், 2009 இடப் பெயர்வின் போது கிளி/ முருகானந்தா மகா வித்தியாலத்திலும் தஞ்சமடைந்து இயங்கி வந்தாலும் தனக்கான தனித்துவத்தை இழக்காமல் இருப்பதுசிறப்புக்குரிய விடயமே. (சமூகத் தொண்டு நிறுவனங்கள் பலவற்றின் உதவியும் இப் பாடசாலைக்கு கிடைப்பதானது இப் பாடசாலையின் தேவைககளப் பூர்த்தி செய்வதற்கு இலகுவானதாய் அமைகின்றது).

இப் பாடசாலை தற்போது திரு. பாலகிருஷ்ணன் அவர்களின் வழி நடத்தலின் கீழ் 815 மாணவர்களையும் (ஆரம்பப் பிரிவு தவிர்ந்த) , 52 ஆசிரியர் களையும்கொண்டதாகஇயங்கிவருகின்றது. 1000 பாடசாலைத் திட்டத்தினுள் உள்வாங் கப்பட்டுள்ளது. அத்துடன் அவுஸ்ரேலியா அரசாங்கத்தால் 90 மில்லியன் (யுனிசெப் ஊடாக) நவீன வசதிகள் கொண்ட கட்டடமும் அமைத்துக் கொடக்கப் பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டு இப் பாடசாலையின் ஆரம்பப் பிரிவானது தனியானதொரு அதிபரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. இவ் ஆரம்பப் பிரிவானது தற்காலம் வரைக்கும் பளை மத்திய கல்லூரிக்குச் சொந்தமான ஒரு கட்டடத்திலும், தற்காலிகக் கொட்டகையிலுமே இயங்கி வந்த நிலையில் அண்மையிலேயே பெற்றோர், நலம் விரும்பிகளின் ஒத்தழைப்படன் புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும் ஒரு கட்டத்தின் தேவை இப் பிரிவுக்கு அலச்சியமாக உள்ளதைக் கவனிக்க முடிகின்றது.

பளை மத்திய கல்லூரியானது கல்வி, விளையாட்டுமற்றும்இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தன்னைச் சிறப்புற இணைத்துக் கொண்டு பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் சிறந்த பாடசாலையாக திகழ்கின்றது.

துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம் போன்றவற்றில் இப் பாடசாலை மாணவர்கள் சிறப்பாக பிரகாசித்து வருவது குறிப்பிடத்தக்கது. சிறப்பான வழிநடத்தலின் கீழ் அழகான சூழலில் இயங்கிவரும் பளை மத்திய கல்லூரியானது எத்தனை வீழ்ச்சிகளைச் சந்தித்தாலும் தொடர்ந்தும் சனளக்காமல் தனது கல்விப் பாதையில் முன்னோக்கிச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ரி | ரா | சு | க | து | டை | ப் | ப | ம் | அ |
| ச | ரா | ச | த் | ச | மே | ரி | ரா | ச | க |
| ரி | தே | ச | தி | ரா | சை | ரி | ரி | ன் | ப் |
| ச | ச | ரா | ரி | ரி | ச | ரா | ரா | ரா | பை |
| சு | ச | ரி | ச | ச | கோ | ட | ரி | ம | ரி |
| த் | ரி | ச | ரி | த | ரி | க | ர | ண் | டி |
| தி | ரா | ம | ண் | வெ | ட் | டி | ச | ரி | ரா |
| ய | ச | க | வ | டி | ரி | ரா | ங் | ரி | ச |
| ல் | ரி | ரி | ச | பா | ரா | ரி | ச | ரா | த் |
| ரா | ரி | ரா | ச | னை | ழை | ச | ரா | ச | ரி |



## jolly trip

நிலவன்

- இந்த வாரம் கொஞ்சம் ஜாலியாக விளையாடிப் பார்ப்போமா?
- இந்தக் கட்டங்களை இடமிருந்து வலமாகவும், மேலிருந்து கீழாகவும் சரியாகக் கவனியுங்கள்.
- "சராசரி" என்ற இந்த சொல்லில் உள்ள நான்கு எழுத்துக்களும் எங்கு தென்பட்டாலும் அவற்றை வெட்டி விடுங்கள்.
- அதே போல் நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் பெயரும் தென்படும், அவற்றையும் வெட்டி விடுங்கள்.
- இப்படி எல்லாவற்றையும் வெட்டிய பின்பு பத்து எழுத்துக்கள் மிஞ்சும், அவற்றை சரியான முறையில் இணைத்தால் ஒரு அழகிய சொல் ஒன்று கடைக்கும். எங்கே கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

## பொது அறிவு

1. செங்குருதி சிறுதுணிக்கை முழு உடலையும் சுற்றி வர 20 செக்கன் எடுக்கும்
2. முனித மூளை தனது வாழ்நாளில் 10 கோடி செய்திகளைச் சேமித்து வைக்கும்.
3. ஒரு தலைமயிரின் ஆயட்காலம் 4 ஆண்டுகள்
4. இத்தாலி நாட்டில் சாய் கோபுரம் அமைந்துள்ளது.
5. மாடுகளை இனம் காண்பதற்று உதவும் ரேகை கொண்ட உறுப்பு மூக்கு ஆகும்.
6. யானையின் சராசரி ஆயட் காலம் 47ஆண்டுகள் ஆகும்.
7. பூனையினால் இனிப்பு சுவையை அறிய முடியாது.
8. ஒய்வு என்ற வார்த்தை இல்லாத மொழி ஜப்பான் ஆகும்.
9. நோபல் பரிசு கிடைக்காத முக்கிய பாடத்துறை கண்தம்.

சே.பிரிந்தினி

## தொடர் மொழிக்கு ஒரு மொழி

அகராதி - அகரவரிசைப்படி பொருள் கூறுவது.
அகால மரணம் - எதிர்பாராத மரணம்
அங்கதம் - வெளிப்படையாக புகழ்தலும் மறைமுகமாக இகழ்தலும்
அட்டாவதானி - ஒரே நேரத்தில் எட்டு விடயங்களை அவதானிப்பவன்
அட்டில்சாலை - உணவு சமைக்கும் இடம்

தி.தனகஸ்தன்
தரம்8
நியூட்டன் அக்கடமி






# பிழைக்க முடியுமோ

ஒருவன், ஒரு பெருங்காட்டுக்குள் நுழைந்தான். எவராலும் சுலபமாக நுழையமுடியாத காடு அது. அங்கு போன அந்த மனிதன், நன்றாகச் சுற்றுமுற்றும் பார்த்தான். சிங்கம், புலி, கரடி முதலான துஷ்ட மிருகங்கள் கூட்டம் கூட்டமாக இருந்தன. ஒரே கூச்சல். அந்த மிருகங்களின் நடமாட்டத்தையும் கூச்சலையும் கண்டு, மனிதன் மிகவும் பயந்துபோய் அங்குமிங்குமாக ஓடித் தப்பிக்க முயற்சி செய்தான்.

அப்போது மிகவும் கோரமான அவலட்சணமான யாவரும் வெறுக்கக்கூடிய பெண் ஒருத்தி ஓடி வந்து, தன் இரு கைகளாலும் அந்த மனிதனைக் கட்டிப் பிடித்தாள். அவளைப் பார்த்துப் பயந்துபோன அந்த மனிதன் திமிறிக்கொண்டு இன்னும் வேகமாக ஓடினான். அவ்வாறு ஓடும்போது புற்களும் காட்டுக்கொடிகளும் மூடி மறைத்திருந்த பாழுங்கிணறு ஒன்றில் தொபுக்கடீரென விழுந்தான். நல்லவேளையாக கிணற்றுக்குள் நெருங்கி வளர்ந்திருந்த கொடிகளைப் பிடித்துத் தொங்கி தப்பித்தான். அவன் மனம் தடக் தடக் என்று பயங்கரமாக அடித்துக் கொண்டது. அப்பாடா! எப்படியோ தப்பிவிட்டோம்! என்ற எண்ணத்தில் கிணற்றில் தொங்கிய மனிதன் கீழே பார்த்தான்.

அங்கே... அவன் காலடியில் பெரிய பாம்பு தலையைத் தூக்கியபடி பார்த்துக் கொண்டிருந்தது. தொங்கிக்கொண்டிருந்த மனிதன் அந்தப் பாம்பைப் பார்த்ததும் மேலும் நடுங்கினான். எப்படியாவது மேலே போய்விடலாம் என்ற எண்ணத்தோடு தலை உயர்த்தி மேலே பார்த்தபோது கிணற்றின் மேலே இன்னொரு ஆபத்து காத்துக் கொண்டிருந்தது. ஆறு முகங்களும் பன்னிரண்டு கால்களுமாக பல வண்ணங்களுடன் காணப்பட்ட ஒரு பெரிய விசித்திர. யானை தான் அது.

அந்த மனிதன் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருக்க... கரக்... கரக்... என்று சத்தம் கேட்டது. பார்த்தால்... அவன் பிடித்துத் தொங்கிக்கொண்டிருந்த வேர்களைக் கறுப்பும் வெளுப்புமான எலிகள் கடித்து அறுத்துக் கொண்டிருந்தன. இவ்வளவு சோதனைகளும் ஒருபுறம் இருக்க அவன் சற்றும் எதிர்பார்க்காத இன்னொன்றும் நடந்தது. ஆம்... உச்சியில் இருந்த தேன்கூடு ஒன்று திடீரென்று சிதைந்து அதில் இருந்து ஒரு சில தேன் துளிகள் ஆபத்தான நிலையில் தொங்கிக்கொண்டு இருந்த அந்த மனிதனின் நாவில் விழுந்தன. அவ்வளவுதான்... அனைத்து துயரங்களையும் மறந்தவன், தேன் துளிகளைச் சுவைக்க ஆரம்பித்து விட்டான்.

என்னய்யா மனுஷன் அவன்! பைத்தியக் காரன்! தேனைச் சுவைக்கும் நேரமா இது! அந்த மனிதன் வேறு யாருமல்ல நாம்தான்! கதையை மற்றொரு முறை நன்றாகப் படியுங்கள். அது சொல்லும் எச்சரிக்கை புரியும்.

கதையில் வரும் காடு என்பது சம்சாரக்காடு. பிறப்பும் இறப்பும் நிறைந்தது. காட்டில் உள்ள துஷ்ட மிருகங்கள் பலவிதமான நோய்களைக் குறிக்கும். அந்த நோய்களில் இருந்து தப்பிப் பிழைப்பதற்காக நாம் படாத பாடுபடுகிறோம். அப்போது அனைவராலும் வெறுக்கப்படும் கோரமான பெண் ஒருத்தி கட்டிப் பிடிக்கிறாள் என்று கதையில் பார்த்தோம் அல்லவா? அந்தப் பெண் முதுமை கிழத்தனம் என்பதன் குறியீடு. முதுமை வந்து நம்மைத் தழுவிக் கொள்கிறது. அதில் இருந்தும் தப்பிப் பிழைத்து ஓடலாம் என்று பார்க்கிறோம். ஆனால் உடம்பு நம்மை விடமாட்டேன் என்கிறது. கிணறு என்பது உடம்பைக் குறிக்கும். செயலற்றுப் போய் அதில் விழுந்து விட்டோம். கிணற்றில் கீழே இருக்கும் பெரும் பாம்பு எமன். அவன் எல்லாப் பிராணிகளின் உயிரையும் வாங்கும் அந்தகன். மனிதன் பிடித்துக்கொண்டு தொங்குவதாகச் சொன்ன வேர்கள் நமக்கு உயிர் வாழ்வதில் இருக்கும் ஆசைகள். அதனால்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆறு முகங்கள் பன்னிரண்டு கால்கள் உள்ள யானை என்று ஒன்றை பார்தோமே.. அந்த யானை என்பது ஓர் ஆண்டு ஆறு முகங்கள் என்பது (2 மாதங்களைக் கொண்ட) ஆறு விதமான பருவங்களைக் குறிக்கும் பன்னிரண்டு கால்கள் என்பது பன்னிரண்டு மாதங்களைக் குறிக்கும். மனிதன் பிடித்துத் தொங்கிக்கொண்டிருந்த வேர்களை அறுக்கும் கறுப்பு வெளுப்பு எலிகள் இர்வையும் பகலையும் குறிக்கும். இரவும் பகலும் ஆன காலம் நம் வாழ்நாட்களை அரித்துக் கொண்டிருக்கின்றன.

தேன் துளிகள் என்பது காமச்சுவை. பலவித மான விஷயங்களிலும் ஈடுபட்டு ஏதாவது சந்தோஷம் துளி அளவு கிடைத்தாலும் போதும்; அனைத்தையும் மறந்துவிடுகிறோம். அதாவது தப்பவே முடியாத நோய்கள் முதுமை காலம் போன்றவற்றில் இருந்தெல் லாம் தப்பிவிட்டதாக நினைத்து சின்னஞ் சிறு சந்தோஷங்களில் நம்மை மறந்து இருக் கிறோம்.

# இடைப்பட்டவனுக்கே லாபம்

காட்டில் மான் ஒன்று இறந்து கிடந்தது. அதை ஒரே சமயத்தில் சிங்கம் ஒன்றும், கரடி ஒன்றும் பார்த்தன.

கரடி, 'நான் தான் முதலில் மானைப் பார்த்தேன்... ஆகவே அது எனக்குச் சொந்தம்' என்றது.

ஆனால் சிங்கமோ. 'நான் தான் முதலில் பார்த்தேன்.ஆகவே இந்த மான் எனக்கேச் சொந்தம்' என்றது.


இரண்டும், செத்துக் கிடந்த மான் யாருக்குச் சொந்தம் என நீண்ட நேரம் சண்டைப் போட்டுக் கொண்டிருந்தன. அதனால் இரு மிருகங்களும் சோர்வு மேலிட மயங்கின.

அப்போது நரி ஒன்று அங்கு வந்துஇ இறந்து கிடந்த மானையும், அதற்காகச் சண்டையிட்டு மயங்கிக் கிடந்த சிங்கத்தையும், கரடியையும் பார்த்தது.

இதுதான் சமயம் என நரி மானைத் தின்றுவிட்டு ஓடிவிட்டது.

மயக்கம் தீர்ந்ததும் விழித்துக் கொண்ட கரடியும், சிங்கமும், நரி வந்து மானைத் தின்றுவிட்டுப் போனதை அறிந்தன.

நாம் இருவரும் சமாதானமாய்ப் போயிருந்தால், மானைப் பங்குப் போட்டு சாப்பிட்டிருக்கலாம். நாம் சண்டையிட்டதால், இடையில் வேறு ஒருவன் புகுந்து நம்மை ஏமாற்றிவிட்டானே' என வருந்தின.





# ஹெலன் சொன்ன அறிவுரை

ஹெலன் கெல்லர் என்பவர் பிறவியிலேயே காது கேளாதவரா கவும், பேசமுடியாதவராகவும், பார்வையற்ற வராகவும் பல துன்பங்களுடன் பிறந்தவர். ஆனால், இவர் உலகிலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கெல்லாம் ஒளிவிளக்காகத் திகழ்கிறார். அவருடைய எண்ணங்கள் ஆழமாகவும், அருமையாகவும் இருந்தன. 'பார்வையற்ற நான், பார்வையும் பிற திறன்களுடைய அனைவருக்கும் ஒன்றைக் கூற விரும்புகிறேன்...

நீங்கள் காண்பதையெல்லாம் கண்ணாரக் காணுங்கள். நாளையே உங்கள் கண் பார்க்கும் சக்தியை இழந்து விட்டால்...? என்று எண்ணிப் பார்த்துப் பார்ப்பதை எல்லாம் நன்றாக ரசித்துப் பாருங்கள். மற்ற உறுப்புகளையும் அப்படியேஎ பாருங்கள்... பறவையின் பாடலைக் குரலின் இனிமையை, இசக் கருவிகளை மீட்டுவதால் எழும் இனிய நாதத்தைக் காதாரக் கேளுங்கள்.

நாளையே கேட்க முடியாமல் போனால் என்ன செய்வது என்கிற எண்ணத்துடன் உங்கள் காதுகளைப் பயன்படுத்துங்கள்...

நாளையே தொடும் உணர்வைக் கைகள் இழந்து விடக் கூடும் என்ற எண்ணத்தை மனதில் கொண்டு ஒவ்வொரு பொருளையும் தொடுங்கள்.

பூக்களின் நறுமணத்தை நுகரும் போதும்இ ஒவ்வொரு வேளை உணவை உண்ணும் போதும், நாளையே நுகரும் சக்தியும், சுவையுணர்வும் இல்லாமல் போய் விடக் கூடும் என்ற எண்ணத்தோடு செயல்படுங்கள்'

அவருடைய கருத்து உண்மைதானே...?

# சருமம் அழகாக சிறந்த பொடி

குறுக்குவாட்டு முக்கோணத் தோற்றம். 'பரிவிருத்த' என்றால் குறுக்கு வாட்டு. 'திரிகோண' என்றால் முக்கோணம். உச்ச நிலையில் உடல் குறுக்குவாட்டு முக்கோணம் போன்று இருக்கும்.


**செய்முறை:** விரிப்பில் உள்ளங்கைகள் இரு பக்கவாட்டிலும் தொடையை ஒட்டி இருக்கும்படி நேராக நிற்கவும். கால்களை அகட்டிக்கொள்ளவும். காலை அசைக்காமல் இடுப்பை மட்டும் இடது புறம் திருப்பவும். இடுப்பை வளைத்து வலது உள்ளங்கையை இடது காலுக்குப் பக்கத்தில் தரையில் ஊன்றவும்.

உயர்த்திய இடது உள்ளங்கையின் மேல் பார்வை இருக்கட்டும். இப்போது மூச்சை வெளியே விடவும். மெதுவாக மூச்சை உள்ளிழுத்தபடியே மேலெழும்பி உடம்பு வலதுபுறம் நோக்கியிருக்க கைகள் தோள் மட்டத்தில் நீட்டியிருக்க வேண்டும்.

கால்களை நகர்த்தாமல் உடலை முன்னுக்குத் திருப்பவும். கைகளைக் கீழே தொங்கவிடவும். வலது காலைத் தூக்கி இடது காலின் அருகில் ஊன்றவும். இதே போல் மறுபுறம் செய்யவேண்டும்.

**பலன்கள்:** வயிற்றுப் பகுதி நன்கு அழுத்தப்பட்டு ஊக்கமளிக்கப்படும். ரத்த ஓட்டம் சீராகும். முதுகுத் தண்டு இடுப்பு இடுப்பின் கீழ்ப்பகுதி ஆகிய பகுதிகளின் வளையும் தன்மை அதிகரிக்கிறது. வயிற்றுக் கொழுப்பு கரைக்கப்பட்டு இடுப்புப் பகுதி மெலியும். சிறுநீரகம் வலுவடையும்.

**எச்சரிக்கை:** தீவிரமான இதய நோய் உள்ளவர்கள் இடுப்புக் கீல் வாயுவினால் அவதிப்படுபவர்கள் இதய நோயாளிகள் இந்த ஆசனத்தைச் செய்யக் கூடாது.





# கர்ப்ப காலத்து ரத்தசோகை சிசுவை பாதிக்குமா?

கர்ப்பமான பெண்களுக்கு ரத்தசோகை இருந்தால் பிரசவத்தின் போதும் அதற்கும் பிறகும் பல சிக்கல்கள் ஏற்படலாம். பிரசவத்தின் போது பொதுவாக அதிக ரத்த இழப்பு ஏற்படும். ஏற்கனவே ரத்த சோகை நோய் இருந்தால் ரத்த இழப்பு உயிருக்கே ஆபத்தாக முடியும்.

தாய்க்கு ரத்தசோகை இருந்தால் குழந்தை குறை பிரசவத்திலும்இ குறைவான எடையுடனும் பிறக்கும் வாய்ப்பு இருக்கிறது. அந்த குழந்தைகளுக்கும் ரத்தசோகை ஏற்படும் வாய்ப்பிருக்கிறது. நோயாளி இரும்பு சத்து இல்லாத உணவுகளை உண்ணும் பழக்க உடையவராக இருந்தால் இரும்பு சத்து அதிகம் இருக்கும் உணவுகளை அவர் சாப்பிட வேண்டும்.

கீரை, பீன்ஸ், பருப்பு வகைகள்,சோயா, பீன்ஸ், உலர் திராட்சை ஆகியவற்றில் இரும்பு சத்து அதிகம் இருக்கிறது. வலி நிவாரணி, வீக்கத்தை குறைக்கும் மருந்துகளாலும், ரத்த சோகை ஏற்படலாம் என்பதால் அவற்றிற்கான மூல காரணத்தை சரி செய்ய வேண்டும். இத்தகைய ரத்த சோகையை போக்க குழந்தைகளுக்கு உணவில் அதிக இரும்பு சத்துள்ள கீரைகளை முருங்கைகீரை, அரைக்கீரை, ஆரைக்கிரை, புதினா, கொத்தமல்லி, கறிவேப்பலை, அகத்திக்கீரை, பொன்னாங்கண்ணி கீரை போன்ற கீரைகளையும், திராட்சை, பேரீட்சை, உலர்ந்த திராட்சை பப்பாளி, அத்திப்பழம், மாம்பழம், பலாபழம், சப்போட்டா, ஆப்பிள், நெல்லிக்கனி போன்ற பழங்களையும் தினமும் கொடுத்து வருவது நல்லது.

இதனால் ரத்தம் விருத்தி அடைந்து ரத்த சோகை நீங்கும். மேலும் முளைகட்டிய பச்சை பயறு, முந்திரி பருப்பு, உளுத்தங்களி, பாதாம் பருப்பு, பிஸ்தா பருப்பு போன்றவை அதிகம் உணவில் சேர்த்து வருவது நல்லது. காய்கறி சாலட்டுகள் அடிக்கடி கொடுப்பது நல்லது.



# சருமம் அழகாக சிறந்த பொடி

சரும பாதிப்புக்களுக்கு இயற்கை மூலிகைகளைக் கொண்ட குளியல் பொடிகளை உபயோகப்படுத்தினால் சருமம் பளபளப்பதுடன் பாதுகாப்பும் கிடைக்கிறது. இவை சருமத்திற்கு போஷாக்கு தருகின்றன. கிருமிகள் அழுக்குகள் தங்காமல் காக்கப்படுகின்றன

**தேவையான பொருட்கள் :**

சோம்பு 100 கிராம்
வெட்டி வேர் 200 கிராம்
சந்தனத் தூள் 300 கிராம்
கார்போக அரிசி 200 கிராம்
பூலான்கிழங்கு 200 கிராம்
பாசிப்பயறு 500 கிராம்
கஸ்தூரி மஞ்சள் 100 கிராம்

**செய்முறை :**

இவைகளை தனித்தனியாக வெயிலில் காயவையுங்கள். பின் ஒன்றன்பின் ஒன்றாக தனித்தனியாக அரைத்து பின் ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்ளுங்கள். குறிப்பாக ஈரம் படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இல்லையென்றால் பூஞ்சை பிடித்துவிடும்.

தினமும் குளிக்கும்போது, தேவையான அளவு எடுத்து நீரில் கலந்து தேய்த்து குளியுங்கள். அவ்வாறு குளித்து வந்தால் உடல் முழுவதும் நறுமணம் வீசும்.

இப்படி தொடர்ந்து குளித்து வந்தால் சொறி, சிரங்கு, தேமல், படர்தாமரை, கரும் புள்ளி, வேர்க்குரு, கண்களில் கருவளையம், முகப்பரு, கருந்திட்டு முதலியவை மாறும். மேலும் உடலில் உண்டாகும் நாற்றமும் நீங்கும்.

சருமம் அழகு பெறும். இது பெண் களுக்கும் குழந்தைகளுக்கும் பயன்படுத்த உகந்த வாசனை குளியல் பொடியாகும். குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு பூசி குளிக்க வைத்தால் உடல் முழுவதும் ரோமங்கள் வருவதை தவிர்க்கலாம்.

# ஆரோக்கியமாக குழந்தைகளை வளர்ப்போம்

தினமும் குடிக்க காலையும், மாலையும் இரண்டிரண்டு சங்கு வெந்நீர் கொடுங்கள். குழந்தையின் உடம்பு கலகலவென்று இருக்கும்

காலையில் குழந்தைகள் கண் விழித்தவுடன் ஒரு சொட்டு தேனை நாக்கில் தடவவும். தேன் உடல் வளர்ச்சிக்கு இயற்கை அளித்த ஓர் அற்புதமான வரப்பிரசாதம். வசம்பு போடுவதால் குழந்தைக்கு நாக்கு தடித்து சீக்கிரம் பேச்சு வராமல் இருக்கும் என்பார்கள். ஆனால், தேன் தடவுவதால் நாக்கு புரண்டு விரைவில் பேச்சு வரும்.

தினமும் இரவில் விளகேற்றியவுடன் சுட்ட வசம்பைக் கல்லில் உரைத்து குழந்தைக்கு ஒரு சங்கு குடிக்கக் கொடுத்து, சிறிது தொப்புளைச் சுற்றி தடவுங்கள். பின் ஒரு வெற்றிலையில் எண்ணெய் தடவி அதை விளக்கில் காட்டி வாட்டி, பொறுக்கும் சூட்டில் அந்த இலையை குழந்தையின் தொப்புள் மேல் போட்டால் அசுத்த காற்றெல்லாம் வெளியேறி, வயிறு உப்புசம் இல்லாமல் இருக்கும்!

குழந்தை தினமும் இரண்டு, மூன்று முறை மலங்கழிக்க வேண்டும். இல்லாமல் கஷ்டப் பட்டால், முதலில் ஒரு பாலாடை வெந்நீர் புகட்டிப் பார்க்கவும். அப்படியும் போகவில்லை என்றால் ஐந்தாறு விதையில்லாத உலர்ந்த திராட் சைகளை வெந்நீரில் ஊறப்போட்டுகசக்கிப்புகட்டி னால்ஒரு மணி நேரத்தில் போய் விடும். மலங்கட்டி அவஸ்தைப்பட்டால்விளக்கெண்ணையோ, வேறு மருந்துகளோ தர வேண்டாம். ஆசனவாயில் வெற்றிலைக் காம்போ சீவிய மெல்லிய சோப் துண்டோ வைத்தாலே போய்விடும்.

ஒரு வயதுக்கு மேல் துளசி, கற்பூரவல்லி இலைகளை வெந்நீரில் கொதிக்க வைத்து வடிகட்டிக் கொடுத்தால் சளிப் பிடிக்காது, இருந்தாலும் அகன்று விடும். குழந்தைகளுக்கு பேதிக்குக் கொடுப்பது எண்ணெய் தேய்த்து ஊற்றுவது, காதில் மூக்கில் எண்ணெய் விடுவது இதை அறவே தவிர்த்து விடவும்.

குழந்தைக்கு சளி பிடித்து இருந்தால் தேங்காய் எண்ணெயை சுடவைத்து, பூங்கற்பூரம் போட்டு உருக்கி, ஆற வைத்துத் தடவினால் போதும், சளி இளகிக் கரைந்து விடும். தினமும் குடிக்க காலையும், மாலையும் இரண்டிரண்டு சங்கு வெந்நீர் கொடுங்கள். குழந்தையின் உடம்பு கலகலவென்று இருக்கும்.



# பன்னீரின் புரட்சி தொடக்கம் எடப்பாடியின் அதிர்ஸ்டம் வரை

நரசிம்மன்





தமிழக அரசியல் ஜல்லிக்கட்டு தாறுமாறு பரபரப்பில் இருக்கிறது. தமிழக முதல்வர் என்ற காளையை யார் அடக்குவார்கள் என்பது சஸ்பென்ஸாக இழுபட்டு செல்கிறது. மன்னார்குடி மாபியா குடும்பமா அல்லது பன்னீர்செல்வமா வெற்றிபெறுவார்கள் என்ற கயிறிழுத்தல் ஒரு வாரம் கடந்து இப்போதுதான் முடிவை எட்டியுள்ளது.

முதல்வர் பதவிக்காக நடந்த இழுபறி, பின்னர் கட்சியை கைப்பற்ற நடக்கும் இழுபறியென நீண்டு, இப்போது மல்லுக் கட்டிய இருவரும் இல்லாமல் போய் எடப்பாடி, பழனிச்சாமி முதல்வராகியுள்ளார். மல்லுக்கட்டிய இருவரும் இல்லாமல், இன்னொருவருக்கு வாய்ப்பு கிட்டியது விசித்திரம்தான்.

முதல்வர் பதவிப்போட்டியில் பன்னீர்ச் செல்வம் இப்போது தோல்வியடைந்துள்ளார். ஆனால் எதிர்காலம் எப்படியிருக்குமென்பதற்கு உத்தரவாதமில்லை.

ஜெயலலிதா மறைந்த சமயத்தில் பன்னீர்செல்வம் முதலமைச்சரானார். முதலமைச்சர் பதவியில் சசிகலாவிற்கு ஒரு கண் இருந்தாலும், அப்போது அதற்கு வாய்ப்பிருக்கவில்லை. ஜெயலலிதா மரண கொந்தளிப்பில், சசிகலா முதல்வரானால் மக்கள் ஏற்கமாட்டார்கள் என்பதை அறிந்திருந்தார்கள். அதனால், ஜெயலலிதாவால் அடையாளம் காட்டப்பட்ட பன்னீர்செல்வத்தை முதல்வராக்கினார்கள்.

அதிமுகவில் கலகம் உண்டாக்குவதற்கு சமயம் சார்த்திருந்த திமுகவினர் சமயம் பார்த்து காரியம் செய்தனர். பன்னீர் செல்வம் சட்டசபைக்கு வரும்போது ஸ்ராலின் உள்ளிட்டவர்கள் எழுந்து வரவேற்றது, பன்னீரை பார்த்து ஸ்ராலின் சிரித்து நெருக்கம் பாராட்டியது, பன்னீருக்கு சக்தியளிக்க தயாராக உள்ளதாக துரைமுருகன் கூறியது, பன்னீர் காருக்கு ஸ்ராலின் வழிவிட்டு ஒதுங்கி நின்றதென சாதாரணமாக நடந்ததெல்லாம் மன்னார்குடி வயிற்றில் புகைச்சலை கிளப்பியது.

இதனால் அடிக்கடி போயஸ்கார்டன் வரவழைக்கப்பட்ட பன்னீர், விளக்கம் சொல்ல வேண்டியிருந்தது. வர்தா புயல் நிவாரணத்தில் சிறப்பாக செயற்பட்டது, ஜல்லிக்கட்டு தடையை நீக்கியதென பன்னீர் அடுத்தடுத்து அடித்தாட மன்னார்குடி குடும்பம் மண்டைகாய தொடங்கியது.

இந்த சமயத்தில்தான் தமிழக அமைச்சர் விஜயபாஸ்கர் பன்னீரை சந்தித்தார். "நீங்கள் முதலமைச்சராகிவிட்டீர்கள். அக்காவையும் (சசிகலா) கூட்டிக்கொண்டு சொந்த ஊருக்கே சென்றுவிடப் போவதாக திவாகரன் கூறினார்" என்றுள்ளார். இந்த பேச்சின் தொடர்ச்சியாக பன்னீரை பதவி விலகசொல்லிகேட்டுள்ளார். இதற்குமுன்பிருந்தே, சசிகலா முதர்வராக வேண்டுமென பகிரங்கமாக கூறிக்கொண்டிருந்தவர்கள், இந்த நிகழ்வின் பின் இன்னும் பலமாக கூற தொடங்கினார்கள்.

கடந்த 5ம் திகதி எம்.எல்.ஏக்கள் கூட்டத்தை சசிகலா கூட்டினார். இது பற்றிய தகவல் பன்னீர்செல்வத்திற்கு அறிவிக்கப்படவில்லை. கூட்டத்தில் கலந்து கொண்டவர்களிடம் சசிகலா தரப்பினர் கையெழுத்து வாங்கினர். அப்போது பன்னீர் எண்ணூரில் கடலில் கலந்த எண்ணெய் படலத்தை அகற்றும் பணியை ஆய்வு செய்துகொண்டிருந்தார். பின்னர் தலைமைச்செயலகத்தில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த கூட்டத்திற்கு புறப்பட்டார்.

தலைமைகழகத்தில் எம்.எல்.ஏக்கள் காத்திருக்க, அறையொன்றிற்குள் பன்னீரை அழைத்து சென்றுள்ளனர். அங்கு சசிகலா, பன்னீர், சசிகலாவின் சகோதரர்களின் இரு மகன்கள் என நால்வர் மட்டுமே இருந்தனர்.

சசிகலா குடும்பத்தின் வெங்கடேஷ், "அனைத்து எம்.எல்.ஏக்களும் சசிகலா முதல்வராக விரும்புகிறார்கள். நீங்கள் ராஜினாமா கையெழுத்து போட்டு விடுங்கள்" என முன்னரே தயார்செய்யப்பட்டிருந்த பத்திரத்தை நீட்டியுள்ளனர். தனக்குஇப்படியொருகதி நடக்குமென்பதை பன்னீர் உணர்ந்திருந்தாலும் இத்தனை விரைவாக நடக்குமென்பதை உணரவில்லை.

கையெழுத்திட பன்னீர் சம்மதிக்கவில்லை. சசிகலாவை மக்கள் ஏற்க காலம் கனிய வேண்டுமென்றெல்லாம் ராஜதந்திர பாணியில் பேசிப்பார்த்தார். மன்னார்குடி குடும்பத்திற்கும் ராஜதந்திரத்திற்கும் சம்பந்தமில்லையே. 66 வயதான பன்னீரின் கையை ஒருவர் பிடித்துக் கொண்டார். கையெழுத்திடாமல் வெளியேற முடியாதென்றார். சசிகலாவின் அண்ணன் மகன் வெங்கடேஷ், "நான் பேசிட்டிருக்கேன். நீ என்னென்னவோ சொல்லிக்கிட்டிருக்காய்... இந்த கட்சி என்ன உங்கப்பன் சொத்தாடா... கையெழுத்து போடுடா" என பன்னீரின் சட்டையை பிடித்து உலுக்கியுள்ளார். அப்போது சசிகலாவின் அக்கா மகன் தினகரன்தான் பன்னீரை காப்பாற்றியுள்ளார். தினகரன்தான் பன்னீரின் அரசியல் குரு என கூறப்படுவதுண்டு. பலர் முன்னிலையில் பன்னீர் பெரும் அவமானத்தை சந்தித்த நிலையில், ராஜினாமா கடிதத்தில் கையெழுத்திட்டார். இந்த அரசியலே வேண்டாம் நான் ஊருக்கு போகிறேன் என பன்னீர் புறப்பட்டுள்ளார். முதல்வர் பதவியிலிருந்து விலகிய பன்னீர், அரசியலிலிருந்தும் ஒதுங்கினால், தமக்கு அவப்பெயரை உண்டாக்கலாமென கருதிய சசிகலா தரப்பு, அதற்கு உடன்படாமல் சட்டமன்றத்தில் தொடர வேண்டுமென கட்டளையிட்டுள்ளது. ஆனால் புதிய அமைச்சரவையில் பன்னீருக்கு ஒரு பதவியும் வழங்காமலிருக்க முடிவு செய்தனர்.

அதன்பின்னர்தான், சசிகலா குடும்பத்தை எதிர்ப்பதென பன்னீர்ச்செல்வம் திடமான முடிவிற்கு வந்தார். எம்.எல்.ஏ, அமைச்சர்கள், நிர்வாகிகளில் தனக்கு வேண்டப்பட்டவர்களுடன் ஆலோசனை நடத்தி ஒரு முடிவிற்கு வந்தார்.

கடந்த 7ம் திகதி இரவு 8.50 மணியளவில் தனது பாதுகாவலர்கள் சகிதம் சென்னை மெரீனா கடற்கரையில் உள்ள ஜெயலலிதா சமாதிக்கு வந்தார் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம். வந்தவர் ஜெயலலிதா சமாதிக்கெதிராக தியானம் செய்ய ஆரம்பித்தார். அப்போது அவரது முகம் இருண்டிருந்தது. அடிக்கடி கண்ணீர்வடிந்துகொண்டிருந்தது. 40 நிமிட தியானத்தின் பின் கண்ணீரை துடைத்துக்கொண்டு ஊடகங்களிற்கு பேட்டியளித்தார்.

பன்னீர் சொன்னவை வார்த்தைகள் அல்ல. ஒவ்வொரு சொல்லும் வெடிகுண்டுகள். தமிழக அரசியலே ஆட்டம் கண்டுள்ளது. தன்னை கட்டாயப்படுத்தி ராஜினாமா செய்ய வைத்தார்கள், கட்சியை சசிகலா குடும்பம் கைப்பற்ற பார்க்கிறது, மக்கள் விரும்பினால் ராஜினாமாவை திரும்ப பெறுவேன் என்றார்.

இதன்பின் அதிமுக இரண்டாக உடைந்துவிட்டது. பன்னீர் அணி, சசிகலா அணியென இரண்டு முகாம்களாகியது. சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிப்பவர்தான் முதலமைச்சர் ஆகலாம் என்பதால் எம்.எல்.ஏக்களை வளைத்து போடும் படலத்தை இரண்டு தரப்பும் ஆரம்பித்தன.

பன்னீர் தியானம் செய்தார், அதன் பின் ஊடகங்களில் பேட்டியளித்தார் என்பதுதான் வெளிவந்த செய்தி. ஆனால் வெளிவராத விடயம் ஒன்றுள்ளது. சசிகலா குடும்பத்தின் நடவடிக்கையால் அதிருப்தியடைந்த பன்னீர்செல்வம், தனது முடிவை நம்பிக்கையான எம்.எல்.ஏக்கள், கட்சி நிர்வாகிகளிற்கு அறிவித்

தொடர்ச்சி 26-ம் பக்கம்...

# சொர்ணத்திற்காக தூது சென்ற பிரபாகரன் மனைவி



சொர்ணம் பால்ராஜ் தமிழ்செல்வன்

பீஷ்மர்

காதல் கத்தரிக்காய் எல்லாம் சொர்ணத்திற்கு சரிப்பட்டு வராது. மிக இறுக்கமான இராணுவ ஒழுங்குள்ள மனிதராக அவர் தன்னை வெளிப்படுத்தி விட்டார். தனிப்பட்ட வாழ்க்கை விவகாரத்தில் கூட இந்த இமேஜை கடந்து அவரால் செயற்பட முடியாது.

அப்போது மகளிர் படையணி தளபதியாக இருந்தவர் ஜனனி. சில தாக்குதல் திட்டமிடல்கள், கூட்டங்களில் இருவரும் சந்தித்திருந்தனர். சொர்ணம் என்றாலே ஜனனிக்கு பெரும் பயம்.

ஜனனியை திருமணம் செய்யலாமென சொர்ணத்திற்கு விருப்பம் ஏற்பட்டது. இதை 'எப்படி கையாள்வதென்பதுதான் அவருக்கு தெரியவில்லை. பலதையும் யோசித்துவிட்டு தனது பாணியிலேயே காரியத்தை முடிக்க திட்டமிட்டார்.

ஒருநாள் ஜனனியின் முகாமிற்கு சென்றார். பெண்போராளிகளின் முகாம்களிற்குள் ஆண் போராளிகள் யாரும் நினைத்த மாதிரி செல்ல முடியாது. அது பிரபாகரனாக இருந்தாலும் கூட. பிரபாகரனை யாரும் தடுக்க முடியாது.



## இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 17

ஆனால், அவர் அந்த சுய கட்டுப்பாட்டை ஏற்படுத்தியதுடன், மற்ற போராளிகளிற்கும் வழிகாட்டினார்.

பெண்களின் முகாம்களின் முன்பகுதியில் ஒரு வட்டக்கொட்டில் இருக்கும். அங்குதான் விருந்தினர்களாக வரும் ஆண் போராளிகள் உட்காரலாம். உள்ளே நுழைய முடியாது.

ஜனனியின் முகாமிற்குசென்றசொர்ணம் வட்டக்கொட்டிலில் உட்காரவில்லை. அவசர அலுவலாக செல்பவர்கள் பதற்றமாக நின்று கொண்டிருப்பதை போல அந்தரமாக நின்று கொண்டிருந்தார். சொர்ணம் வந்துள்ள தகவலை அறிந்து ஜனனி அவசரமாக வந்தார். கூடவே ஒருசில பெண்போராளிகளும் வந்தனர்.

ஜனனி அருகில் வந்ததும், சொர்ணம் இப்படி சொன்னார். "இயக்கம் என்னை கலியாணம் கட்ட சொல்லியிருக்குது. உம்மைத்தான் கலியாணம் செய்யப் போறன். என்ன என்று யோசிச்சு சொல்லும்" என்றுவிட்டு விறுவிறுவென வந்து வாகனத்தில் ஏறிவிட்டார்.

நேராக பிரபாகரனின் மனைவி மதிவதனியிடம் சென்று, நடந்ததை சொன்னார். மதிவதனி தனது கூடப்பிறந்த சகோதரனை போலத்தான் சொர்ணத்தை பாவித்தார். அதனால்தான் சொர்ணத்தின் திருமணத்தில் மதிவதனி தனிப்பட்ட ஆர்வம் காட்டினார்.

சொர்ணம்புறப்பட்ட பின்னர்,நடந்ததை பிரபாகரனிடம் சொல்லியுள்ளார். சொர்ணத்தின் இயல்பை நினைத்து இருவரும் நகைச்சுவையாக சிரித்தனர். இறுதிவரை இந்த சம்பவத்தை மதிவதனி அடிக்கடி குறிப்பிட்டு சொர்ணத்தை கலாய்த்தே வந்தார்.

அப்போது அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியார் அடேல் யாழ்ப்பாணத்தில் பெண் போராளிகளுடன் தங்கியிருந்தார். ஜனனி உடனடியாக அடேலை சந்தித்து விசயத்தை சொல்லியிருக்கிறார். பின்னர் மதிவதனியை சந்தித்து சொன்னார்.

சிலநாட்களின் பின்,மதிவதனி ஆறுதலாக உட்கார்ந்திருக்கும் சமயத்தில் ஜனனியை அழைத்தார். சொர்ணத்தை திருமணம் செய்ய தாங்கள் வற்புறுத்தியதிலிருந்து இறுதிவரை நடந்தது அனைத்தையும் சொன்னார். சொர்ணத்திற்கு பிரபாகரனும் தானும் பெண் பார்ப்பதையும் சொன்னார். சொர்ணத்தை திருமணம் செய்ய ஜனனிக்கு விருப்பமா என கேட்டார்.

அடுத்த சில வாரங்களில் சொர்ணம் ஜனனி திருமணம் நடந்தது. திருமணத்தின் பின் பிரபாகரனின் பாதுகாப்பு அணி பிரதானி என்ற பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

அதன்பின்னர்தான் கூட்டுப்படை பிரதானியானார். 1995 இல் ஆரம்பிக்கப்பட்ட சூரியக்கதிர் படை நடிவடிக்கை, 1996 இல் சாவகச்சேரியை கைப்பற்றியது. அப்போது கூட்டுப்படை தளபதியாக களத்தை வழிநடத்திய சொர்ணம், யாழ்ப்பாண களத்தை வழிநடத்திய ரவி இருவருக்கும் "காற்று போனது".

மீண்டும் 2000 ஆண்டில் சாவகச்சேரியில் ஒரு களமுனை. இதற்குள் ஈழப்போரில் நிறைய மாற்றங்கள். புலிகள் ஒரு மரபுவழி இராணுவமாக மேலெழுந்து விட்டனர். சொர்ணம், பால்ராஜ் என்ற மைய அச்சில் சுற்றிக்கொண்டிருந்த புலிகளின் இராணுவ கட்டமைப்பு பால்ராஜ், கருணா, தீபன் இன்னும் ஏராளம் இரண்டாம் நிலை தளபதிகளுடன் புதிய அத்தியாயத்திற்குள் புக தொடங்கிவிட்டது. ஆனால் இந்த காலத்திற்குள் சொர்ணம் களத்தில் முக்கிய பாத்திரம் வகிக்கவில்லை. அவர் திருகோணமலை தளபதியாக செயற்பட்டார். திருகோணமலை அணியில் சுமார் 400 500 பேர் வரையில் இருந்தனர். வன்னியில் சிறிய தொகையினர் நிலை கொண்டிருக்க, ஏனையவர்கள் திருகோணமலைக்கும் மட்டக்களப்பிற்கும் இடைப்பட்ட காடுகளில் நிலைகொண்டிருந்தனர். சிறிய கெரில்லா தாக்குதல்கள்தான் செய்து கொண்டிருந்தனர். எப்பொழுதாவது மினிமுகாம்கள் மீது சிறிய தாக்குதல்களை செய்தனர்.

1997 இல் வன்னியில் ஜெயசிக்குறு என்ற பிரமாண்ட நடவடிக்கையை படையினர் ஆரம்பித்தனர். அப்போது படையிலிருந்த ஆளெண்ணிக்கையை வைத்து வடக்கு கிழக்கு முழுவதும் மேலாதிக்கம் செலுத்த படையினரால் முடியாது. வன்னி படைநடவடிக்கைக்காக கிழக்கின் பல பகுதிகளில் இருந்த இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டன. பெரும் நிலப்பரப்பின் கட்டுப்பாட்டை இராணுவம் இழந்தது.

வன்னியில் படையினரின் கவனத்தை சிதறச்செய்து, படை நடவடிக்கையின் வீரியத்தை குறைக்க புலிகள் கையாண்ட உத்தி, வன்னிக்கு வெளியில் தாக்குதல்களை தீவிரப்படுத்தியது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, தென்னிலங்கையில் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டன. திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்ட தளபதிகளிற்கு தலைமை அப்பொழுது ஒரு உத்தரவு பிறப்பித்திருந்தது. ஒவ்வொரு நாளும் ஒரு தாக்குதலாவது நடத்தியிருக்க வேண்டும்.

இப்படி கெரில்லா தாக்குதல் முயற்சிகளில் சொர்ணம் ஈடுபட்டு கொண்டிருக்க, வன்னியில் கருணா, பால்ராஜ், தீபன், ஜெயம், பானு உள்ளிட்டவர்கள் பெருமெடுப்பிலான மரபுச்சமரில் ஈடுபட்டு தேர்ச்சி பெற்றுக் கொண்டிருந்தனர்.

இப்படித்தான் 1999 இன் இறுதியில் ஓயாத அலைகள் 3 ஆரம்பிக்கப்பட்டது. அது வன்னி முழுதும் வீச்சம்பெற்று பல பகுதிகளை கைப்பற்றியது. பின்னர் குடாநாட்டு பக்கம் திரும்பி ஆனையிறவை வீழ்த்தியது. ஆனையிறவு சமரில் பால்ராஜ், தீபன், பானு ஆகியோர் முக்கிய பங்காற்றினர். பின்னர் யாழ்ப்பாண குடாநாட்டுக்குள் நகர்ந்து, யாழ்நகர வாசல் வரை சென்றது. அப்பொழுதுதான் இந்தியாவின் உதவி இலங்கைக்கு கிடைத்தது.

லண்டனில் இருந்த அன்ரன் பாலசிங்கத்திற்கு இந்திய வெளிவிவகார கொள்கைகளை தீர்மானிக்கும் சௌத் புளக்கின் செய்தியொன்று சென்றது. நம்பிக்கையான இடைத்தரகர்கள் மூலம்தான் அந்த செய்தி அனுப்பப்பட்டது. "புலிகள் குடாநாட்டு சண்டையை தொடர்ந்தால், இன்னும் ஒரு அடி முன்னகர்ந்தால் இலங்கை இராணுவத்தை காப்பாற்ற இந்திய இராணுவம் தலையிடும்". இதுதான் அந்த செய்தி.

அன்ரன் பாலசிங்கத்திற்கு தகவல் கிடைத்த அடுத்த நொடியே, அது உண்மையா தகவலா என்பதை உறுதிசெய்ய சௌத் பிளக்குடன் நெருக்கமாக இருந்த வடஇந்திய நண்பர் ஒருவரை அழைத்து விடயத்தை சொன்னார். அவர் அதிகாரிகளுடன் பேசிவிட்டு, பாலசிங்கத்தை தொடர்பு கொண்டு உண்மைத்தன்மையை உறுதிசெய்தார்.

அப்போது பிரபாகரனின் இருப்பிடம் புதுக்குடியிருப்பில் இருந்து ஒட்டுசுட்டான் செல்லும் வீதியில் இருந்தது. பின்னர் இந்த முகாமை பொதுமக்களின் பார்வைக்காக இராணுவம் திறந்துவிட்டிருந்தது.

லண்டனில் இருந்து செய்மதி தொலைபேசியில் பிரபாகரனை அழைத்தார் பாலசிங்கம். விடயம் தீவிரமாக விவாதிக்கப்பட்டது. இந்திய தலையீட்டை தவிர்க்க, யாழ்ப்பாணம் நோக்கிய படைநகர்வை தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாமென பாலசிங்கம் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார். அப்படியான முடிவையே பிரபாகரனும் எடுத்தார்.

செம்மணி வளைவை க்டந்து யாழ் நகருக்கு நெருக்கமாக நின்ற புலிகளின் அணிகளிற்கு தாக்குதலை நிறுத்தும் கட்டளை சென்றது. இம்ரான் பாண்டியன், சாள்ஸ் அன்ரனி, மாலதி, ஜெயந்தன், புலனாய்வுத்துறை படையணிகள் அந்த களத்தில் இருந்தன.

இதற்குள் யாழ்ப்பாண இராணுவ கட்டளைபீடத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டன. ஜனக பெரேராவும், சரத் பொன்சேகாவும் அவசரமாக யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டனர். இலங்கை இராணுவத்தில் அப்போதிருந்த போர்க்கள நட்சத்திரங்கள் அவர்கள் இருவருமே.

மறுவளமாக புலிகள் யாழ்ப்பாண களத்திற்கு தளபதியாக நியமித்தது, நீண்டகாலம் மரபுவழி இராணுவ நடவடிக்கைகளில் பரிச்சயமில்லாமலிருந்த சொர்ணத்தை!

(தொடரும்)



நடுவில் உட்கார்ந்திருக்கும் ஜனக பெரேராவுடன் சரத் பொன்சேகா, கோத்தபாய ராஜபக்ச (பழைய படம்)



பிரபாகரனின் திருமணத்தின்போது அன்ரன் பாலசிங்கம் தம்பதி



# கிளிக் பண்ணுங்க... காசை எண்ணுங்க!

நிலவன்

அழகு என்பது எங்கும் நிறைந்திருக்கின்றது. அந்த அழகை யாரும் ரசிக்கலாம். ஆனால் எல்லோராலும் அதனை அழகாக விவரிக்க முடியாது. அப்படியே அச்சொட்டாக விவரிக்க முடியும் என்றால் அது நிச்சயம் புகைப்படத்தால்தான் முடியும். கண்களுக்குள் விரியும் காட்சியை கமராவுக்குள் கிளிக்கி விடுகின்ற இந்த போட்டோகிராபிதான் இப்போது இளைஞர்கள் பலராலும் வெறித்தனமாக விரும்பப்படுகின்ற வேகமாக வளர்ந்து வருகின்றது. 'சின்ன வயதில் பேப்பரில் கமரா செய்து விளையாடிய காலம் போல் இல்லாமல் சின்னஞ் சிறுசுகளே செல்போனில் புகைப்படம் எடுக்கும் காலத்திற்குவந்து விட்டோம்.சிறுவர்களுக்கு மட்டுமல்ல ஸ்மார்ட்போன் வைத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் விதவிதமாகப் புகைப்படம் எடுப்பது மிகவும் பிடித்த விடயமே.

போட்டோகிராபி நல்ல வருமானத்தையும், ஆத்ம திருப்தியையும் கொடுக்கக் கூடிய ஒரு கலை. சாதாரணமாக புகைப் படம் எடுப்பதில் என்ன கலை இருக்கப் போகின்றது என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் சிறந்த புகைப்படம் ஒன்றை எடுக்க வேண்டுமெனில் பத்து விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். வெளிச்சத்தின் அளவு, கமராவின் நகர்வு, புகைப்படம் எடுக்க வேண்டிய பொருளின் அமைவிடம் உள்ளிட்டவற்றை சரியாக அறிந்திருந்தாலே நல்ல படமொன்றை எடுக்க முடியும்.



சாதாரணமாக வெடிங் போட்டோ கிராபியை (திருமண புகைப்படகலை) அதிகளவில் பார்த்துப் பழக்கப்பட்டு விட்டவர்கள் நம்மவர்கள். அது தவிர Bird photography, Nature photography, Kids photography, Action photography, Wild life photography, Commercial photography, Documentry photography என்று பல பிரிவுகள் இதிலுண்டு. நம் ஊரில் மலிந்திருக்கும் வெடிங் போட்டோ கிராபியிலேயே ஒரு அல்பத்திற்கு ஒரு லட்சம் வரைக்கும் வருமானம் பெறுகின்றார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

இதை விடவும் Commercial photographyயின் (விளம்பரப் பலகைகளுக்கான புகைப்படங்களை எடுப்பது) மூலம் ஒரு புகைப்படத்திற்கு 50000ற்கும் மேல் வருமானம் பெறலாம். சினிமாவின் தாக்கத்தினால் நம்மவர்களின் ரசனையில் ஏற்பட்ட மாற்றம் போட்டோகிராபியிலும் வெளிப்படத்தான் செய்கின்றது. சினிமாக் காட்சிகள் போலவே வெளிப்புறப் படப்பிடிப்புக்களை மேற்கொள்வது இப்போது நம்மவர்களுக்கும் பிடித்த விடயமாகி விட்டது.

போட்டோகிராபி என்ற கலைக்குள்தான் Photo journalismஉம் அடங்குகின்றது. ஆயிரம் வார்த்தைகளால் சொல்லக்கூடிய விடயத்தை ஒரு புகைப்படம் மூலம் சொல்லிவிடுகிறது. சிரியாவிலிருந்து அகதியாக வெளியேறிய சிறுவனின் சடலம் கரையொதுங்கிய புகைப்படம் உலகத்தை உலுப்பியதை பார்த்திருப்பீர்கள்.

வடக்கில் புகைப்படக்கலையை கற்க விரும்புபவர்களிற்கு யாழ்ப்பாணத்தில் வாய்ப்பு உள்ளது. American corner இதற்கான கற்கைநெறி உள்ளது. அதேபோன்று கொழும்பைத்தலைமையகமாகக்கொண்ட MIBM கல்லூரியும் யாழ்ப்பாணத்தில் வழங்கி வருகின்றது.

சமூக வலைத்தளங்களின் வளர்ச்சியும், ஆதிக்கமும் இந்தத் துறையை வளர்த்துச் செல்வதில் பங்களிப்புச் செலுத்துகின்றன. 500Px என்று ஒரு வலைத்தளம் புகைப்படக் கலைப் பிரியர்களின் ரசனைக்குத் தீனி போடுவதற்கென்றே உருவாக்கப்பட்டிருக்கின்றது. புகைப்படப் பிரியர்கள் தமது கமராவில் கிளிக் செய்த புகைப்படங்களை இதில் பதிவேற்றலாம். பதிவேற்றப்படுவதில் சிறந்த படங்களை புகைப்பட முகவர்கள் நல்ல விலைக்கு வாங்குகிறார்கள். சிறந்த புகைப்படம் ஒன்று ஆகக் குறைந்தது 2000 இலங்கை ரூபாய்க்கு விற்க முடியும். 500Pxஐப் போலவே Alamy, Shutterstock, Fotolia, Smugmug, 123RF, iStockphoto என்று ஒரு வலைத்தளப் பட்டாளமே உங்களின் சிறந்த புகைப்படங்களை வாங்கவும், விற்கவும் தயாராய் இருக்கின்றன.

அழகிய இந்த பூமியின் ஒவ்வொரு அழகுத்துளியையும் உங்கள் கமராவிற்குள் அடக்கினாலும் பணம்தான். ●

---

24-ம் பக்க தொடர்ச்சி...

துள்ளார். அவர்களுடன் இணைந்துதான் பத்திரிகையாளர்களை சந்திக்க திட்டமிட்டிருந்தார். ஆனால் யாரும் துணிந்து பன்னீரிடம் வரவில்லை. அவர்களிற்காக பன்னீர் நீண்டநேரம் காத்திருந்து விட்டு, தனியாக பத்திரிகையாளர்களை சந்தித்தார்.

சசிகலா குடும்பம் மீது மக்களிடம் பொதுவாகவே அதிருப்தியிருந்தது. இது மன்னார்குடி குடும்பத்திற்கும் தெரியும். அதனால், எம்.எல்.ஏக்களை கூண்டோடு அள்ளி, சொகுசு பஸ்களில் ஏற்றி கூவத்தூருக்கு அருகில் உள்ள கோல்டன் பே ரிசாட்டில் தங்க வைக்கப்பட்டனர். அந்த பகுதியில் ஜாமர் பொருத்திய வாகனத்தை நிறுத்தி, எம்.எல்.ஏக்களின் செல்போன்களை செயலிழக்க செய்தனர். பன்னீர் அணியுடன் தொலைபேசியில் பேசிவிடக்கூடாதென்பதற்காகவே இந்த ஏற்பாடு. அந்த விடுதின் உள்பக்கம் இரண்டடுக்கு பாதுகாப்பு வலயம் அமைக்கப்பட்டது. எம்.எல்.ஏக்களின் பெயர் விபரங்கள் அடங்கிய லிஸ்றை அடிக்கடி சசிகலாவின் நம்பிக்கையான அமைச்சர்கள் சரிபார்த்து கொண்டனர்.

இதுதவிர, அந்த விடுதிக்கு அண்மையான சில கிலோமீற்றர் பகுதியை கூலிப்படையை கொண்டு கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். ஒருநாளைக்கு 4000 ரூபா சம்பளத்தில் சினிமா சண்டைக் கலைஞர்கள், ரெளடிகள், கூலிப்படைகளென சுமார் 1,500 பேர் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அந்த பகுதியிலுள்ள மாணவர்கள் பாடசாலை செல்ல முடியவில்லை. தொழிலாளிகள் வேலைக்கு செல்ல முடியவில்லை. அனைவரும் வீட்டுக்குள் முடக்கப்பட்டார்கள். மக்கள் கொந்தளித்து வீதிக்கிறங்கியபோது, முதலில் ஒருநாள் அவகாசம் கேட்கப்பட்டது சசிகலா தரப்பினரால். பின்னர் மிரட்டல் விடுக்கப்பட்டது.

எனினும் மூன்றுநாள் அங்கு தங்கியிருந்து எம்.எல்.ஏக்களை சரிக்கட்டினார் சசிகலா. அங்கு தங்கவைக்கப்பட்டவர்களிற்கு வேண்டிய உணவு, மது, தங்கம், பணம் கொடுக்கப்பட்டதாக கிளம்பிய தகவல்களை விட பேரதிர்ச்சி கொடுத்தது, கேரளாவிலிருந்து துணை நடிகைகளை சப்ளை செய்தார்கள் என்பது. மதுபோதையில் எம்.எல்.எக்கள் தள்ளாட்டம் போட்ட ரகசிய வீடியோக்கள் எல்லாம் வெளியாகின. அங்கு தங்கவைக்கப்பட்டவர்களுடன் 45 கோடி வரை பேரம் பேசப்பட்டதாக கூறப்படுகிறது.

இதற்குள் அந்த விடுதியில் அடைத்து வைக்கப்பட்ட எம்.எல்.ஏக்களில் இருவர் அருகிலுள்ள ஆற்றில் குதித்து நீந்தி சென்று, பிரதான வீதியில் சென்ற பேருந்தை வழிமறித்து தப்பிச் சென்றனர்.

கவர்னர் மினிமாவை (சின்னம்மா) ஏன் ஆட்சியமைக்க அழைக்கவில்லையென தொண்டர்கள் சிலர் கொதித்தாலும், நிலையான ஆட்சியமைய வேண்டிய பொறுப்பு கவர்னரிற்கு இருந்தது. மினிமாவை ஆட்சியமைக்க அழைத்து, ஒரு வாரத்திலேயே சொத்துகுவிப்பு வழக்கில் அவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டால் மீண்டும் அரசியல் குழப்பம் நேரும். கவர்னரின் அந்த நிதானம் சரியென்பதை நிரூபித்தது உச்ச நீதிமன்ற தீர்ப்பு. சொத்து குவிப்பு வழக்கில் சசிகலா, இளவரசி, சுதாகரன் உள்ளிட்டவர்கள் குற்றவாளியென அறிவிக்கப்பட்டதையடுத்து, அவரது முதல்வர் கனவு மட்டுமல்ல அரசியல் கனவே கிட்டத்தட்ட முடிந்து விட்டது.

இதன் பின் எடப்பாடி பழனிசாமியை சட்டமன்ற குழு தலைவராக அறிவித்தது மினிமா தரப்பு. பிரிந்து வரும்போது தன்னுடன் குறைந்தது 50 உறுப்பினர்களாவது வருவார்கள் என்பது பன்னீரின் கணிப்பு. பன்னீரின் பிரிவின் பின்னணியில் பாஜக இருப்பதாக சொல்லப்படுகிறது. பாஜக தேசியத்தலைவர் அமித்ஷாவுடன் பேசியபோது பன்னீர் இந்த வாக்குறுதியை வழங்கியதாக கூறப்படுகிறது. ஆனால் எதிர்பார்த்தளவு உறுப்பினர்களை பன்னீரால் திரட்ட முடியவில்லை. இது சசிகலா தரப்பிற்கு வெற்றிதான்.

இப்போது எடப்பாடி பழனிச்சாமிக்கு பெரும்பான்மை ஆதரவிருப்பது உறுதியாகி, அவர் முதல்வராகியுள்ளார். ஆனால் இது இந்த பிரச்சனைக்கு தீர்வல்ல. பன்னீர் தரப்பு இத்துடன் முடித்து கொள்ளும் என்று கருதமுடியாது. அதிமுகவின் கலகக்குரலாக உருமாறுவார் என கருதப்படும் தீபாவுடன் பன்னீர் கைகோர்த்துள்ளார். இது வரும் காலத்தில் அதிமுகவிற்கு நிச்சயம் சிக்கலை ஏற்படுத்தும். ●

விளம்பரத் தொடர்புகளுக்கு
076 825 5567, 021 492 7561

KIRUBAA LEARNERS
KIRUBA A LEARNERS
கிருபா லேணர்ஸ்

நல்ல சாரதி எப்பொழுதும் வீதி ஒழுங்குபற்றி விழிப்புடன் இருப்பார்

பெண்களாலேயே பெண்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.



அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

வடமாகாணத்தின் NO.1 சாரதி பயிற்சிப் பாடசாலை



தலைமைக் காரியாலயம்:
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 021 492 3200, 077 722 5292



NO 1 TOPAZ
TOPAZ
No. 01 Shop in Jaffna



திருமணப் பட்டுச்சேலை
காஞ்சிபுரம் பட்டுச்சேலை
சுரிதார் மற்றீரியல்கள்
மற்றும்
ரெடிமெற் ஆடைகள்



ஆண்களிற்கான
சேட் சூட் மற்றும்
ரெடிமெற் ஆடைகள்



மிஸ் சுட்டி
மிஸ் பியூட்டியாக
வலம் வரும் சுட்டிச்
சிறுமியர்களுக்கான
பெஷன் ஆடைகள்

We are Specialist in
Wedding Suits | Wedding Sarees | Party Sarees | Wedding Frocks | Party Frocks
and all kinds of Items

| TOPAZ | TOPAZ TAILORING | TOPAZ MALL |
|---|---|---|
| No. 72, Grand Bazaar, Jaffna. Tel : 021 222 4743 Fax : 021 222 7645 | No. 80/24, Kasthuriyar Road, Jaffna. Tel : 021 222 4643 | No. 195, Power House Road, Jaffna. Tel : 021 222 4933 021 221 9933 |


E-mail : topazagn@gmail.com

Green Grass valampuri
THE VALAMPURI
A Small Luxurious Hotel in Jaffna

148/10, Station Road, Jaffna
Tel : 021 222 0111 / 3444
Web : www.valampurihotel.com
E-mail : info@valampurihotel.com











IECE
INSTITUTE of ENGLISH & COMPUTER EDUCATION
IELTS™ Now Prepare for Your IELTS Exams
Academic Level and General Training
IELTS™ Life Skills
Level A1 & B1
E.mail: info.iecejaffna@gmail.com
121/1(219/A) Arasady Road, Kanthermadam, Jaffna. Sri Lanka
012 221 9140/ 021 567 4133/ 077 378 0390










இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 19.02.2017 அன்று வெளியிடப்பட்டது.